# நேற்று முதல் உன் நினைவு

## 1

குப்புறப்படுத்திருந்தாள், சங்கவி. கேட்டுக் கொண்டிருந்த பாட்டிற்கு ஏற்ப, கால்கள் மேலும் கீழுமாய் அசைய, கண்கள் புத்தகத்தில் ஓடின.

வலது கைப்பக்கம் எடுப்பதற்கு வாகாய்ப் பச்சை நிறக் கண்ணாடிக் கோப்பை ததும்பக் கார முந்திரிப் பருப்பு.

கோவாவின் பிரத்தியேக குண்டுப் பருப்புகளைப் பதமாய்ச் சுட்டெடுத்து, அளவாய் உப்பு, காரம் தூவி வைத்திருந்தாள் தோழி ஜானகி.

'இதுதான் கடைசி... இனி வாசித்தபடி பருப்புகளை வாயிலிடக் கூடாது...' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டாலும், விரலும் வாயும் கேட்பதாயில்லை...

பருப்பின் சுவை அப்படி... அறைக்குள் வந்த ஜானகி, ஓவியம் போலக் கவிழ்ந்திருந்த தோழியைச் சற்று நேரம் ரசித்து நின்றாள்.

''எப்படி சவி உனக்கு மட்டும் சதை சேர வேண்டிய இடத்தில் அழகாய்க் குவியுது... மற்றப்படி கொடி போலிருக்கே...!''

''ஆஹா! அதான் இந்தச் சதித் திட்டமா?'' கொண்டு வந்த குடிநீர் ஜாடியை முக்காலியில் வைத்த ஜானகி சிரித்தாள்.

''எது சதி. என் சகி? முந்திரிப் பருப்பு தந்து உபசரிப்பதா?''

''பின்னே... நாக்கு கட்டுப்பட மாட்டேங்குதே...'' சிணுங்கலாய்ச் சலித்தாள்

''அதான் பாராட்டினேனே... உன் கலோரிகளைச் சரியான இடங்களில் தேக்கியிருக்கேன்னு... பிறகென்ன பயம்?''

''பயந்தான்... இங்கே கோவாவில் காலேஜ் மேட்டான உன்னோடு தங்கி இப்படி இஷ்டத்துக்கு அனுபவிச்சிட்டால் மறுபடி வீட்டுக்குப் போனதும் ஏங்கிடுவேனோன்னு பயம்.''

எழுந்து சோம்பல் முறித்தவள், ஜானகியை இழுத்துத் தன் முன்னே நிறுத்தினாள்.

''மறுபடி நன்றி, ஜானு... கல்லூரிக் காலம் முடிஞ்ச பிறகும் நாம் தொடர்பில் இருந்தது ரொம்ப நல்லதாப் போச்சு... இல்லைன்னா இந்த ஸாப்ட்-வேர் வேலையை நான் ஏத்திருக்க முடியாது. அம்மா உடனே சொல்லிட்டாங்க.

'கோவாவுக்கா...? அதெல்லாம் வேணாம்டீ - அவுத்துப் போட்டுட்டு வெள்ளைக்காரங்க ஆடற ஊரு... அதுவும் ஹோட்டலுக்கு வேலை செய்யப் போறேன்ற...வேற வினையே வேண்டாம்!'னு...''

தன் தாயைப் போலவே கறார்க் குரலில் சங்கவி சொல்லிக் காட்ட, ஜானகி சிரித்தாள்.

''படிக்க வச்சுடறாங்க... ஆனாலும் பெண்களுக்குப் பிரச்சனை ஓய்வதாயில்லை. குண்டுச் சட்டியிலேயே குதிரை ஓட்ட வேண்டியிருக்குது...''



''ஆண்களால்தான் நமக்கு இந்தப் பிரச்சனை, பயம் எல்லாம், ஜானு.''

இல்ல பெண்ணாலதான்... அதுவும் இத்தனை அழகாயிருந்தால் பெரும் பிரச்னை.''

தந்தச் சிற்பம்போல நின்ற தன் சிநேகிதிக்குத் திருஷ்டி கழித்தாள், ஜானகி.

''பெண் அழகோ, இல்லையோ - ஆண்களின் கண்களுக்கு நாம் ரதி, ரம்பை ரேஞ்சில் தெரிவோம் போல! சென்னையில் பஸ் ஏறி ரெண்டு ஸ்டாப் தாண்டுவதற்குள் நாற்பது வயசுப் பெண்களுக்குத்தான் எத்தனை இடி, தடவல், உரசல்! ச்சேன்னு ஆயிடுது...''

''லோன் போட்டு ஸ்கூட்டி வாங்கிட்டதாய்ச் சொன்னியே?''

''அதற்கு முன்னே பட்ட பாடு இன்னும் மறக்கலையே! தவிர கூட வேலை பார்க்கும் ஆண்கள் பெரும்பாலும் மோசமில்லை என்றாலும்... ஒரு சிலரைச் சமாளிக்கறதுக்குள் முழி பிதுங்கிடுது... வேலையை விட்டெறிஞ்சா என்னன்னு கூட...''

''ஆக கோவாவில் ஒரு மாசம் தங்கி ஹோட்டல் சக்ராவிற்காய் ஸாப்ட்வேர் உருவாக்க ஒத்துகிட்ட...''

''நீயும் இங்கே இருந்ததால் இந்த வீட்டுச் சொந்தக்கார மாமி பற்றி யெல்லாம் நீ சொல்லித் தைரியப்படுத்தினதால்தான் அம்மாவும் அப்பாவும் சம்மதிச்சாங்க... தங்கை ராகவி பொறாமையில் வெந்திட்டு இருக்கா... சக்ரா ஹோட்டல் சென்னையிலுந்தான இருக்கு... இங்கேயே இருந்து வேலையைச் செய்ய முடியாதான்னு உசுப்பினா...''

''அதானே?''

''அவங்க முதன் முதலாய் ஆரம்பித்தது கோவாவில் உள்ள ஹோட்டலைத்தானாம்... அங்குள்ள மானேஜர்கள்

எனக்குத் தேவையான தகவல்களைத் தரக் கூடும்னு... தவிர எனக்குமே ஒரு மாற்றம் தேவையாயிருந்தது ஜானு... அதுவும் உன்னோட இப்படிக் கடற்கரை வீட்டில் தங்கி வேலை பார்ப்பது... அலாதி அனுபவமாயிருக்கும்...''

''இன்னுமொரு சுநேகிதி... உன்னோட பள்ளியில் படிச்சவளும் கோவாவில் இருப்பதாய்ச் சொன்னே!''

''ம்ம் - காவ்யா. என்னை அழகுன்ற நீ அவளைப் பார்த்தால் கவிதையே பாடிடுவ....''

''அத்தனை அழகுன்னா ஹோட்டல் ரிஸப்ஷனில் சிங்காரிச்சு நிறுத்திடுவாங்களே... வர்ற வெள்ளைக்காரனெல்லாம் -

'''ஹோ... கார்ஜியஸ்'னு படம் பிடிச்சுட்டுப் போவான்...''

''சொன்னேனே... டிராவல் ஏஜென்ஸியில் வேலைன்னு...''

''ஆமாம்மா... அதுவும் இங்கே ஏராளம்தான்... வெளிநாட்டுப் பயணிகள் வந்து மொய்க்கிற ஊராச்சே...''

''நான் கோவா விமான நிலையத்தில் வந்து இறங்கினப்ப... அங்கிருந்த பயணிகள் பெரும்பாலும் அயல் தேசத்தார்தான்... வெள்ளை வெள்ளையாய்...''

''அதைப் பழுப்பாக்க அவங்க மெனக்கெடறதை நீ பார்க்கணும்... 'வெயிலைப் போல அழகான பதார்த்தம் வேறில்லை!'ன்னு பாரதியார் பாடியிருக்காராமே?''

''கேள்விப்படாத வரி...''

''ஜகத்சித்திரம்ன்ற அவரது படைப்பிலாம்... மாமியின் வீட்டுக்காரர்தான் சொன்னார்... அதை வெளிநாட்டுக்காரங்களும் உணர்ந்து ரசிக்க, ருசிக்க வந்துடறாங்கன்னுவார்... சூரியக் கதிரால் பாதிப்பு வராமலிருக்க வேண்டிய



களிம்பை மேலெங்கும் தடவிட்டு வெயிலில் மணிக்கணக்காய்க் கிடப்பாங்க...''

''நாம அப்படிக் காய்ந்தால் கருவாடு ஆயிடுவோம்!''

''கிடப்போமா? அதைச் சொல்லு! பாலும் வெள்ளிச் சாறுமாய்த் தடவி வெளுக்கத் தவமிருக்கும் ஆட்கள் நாம. பாவம்! விமான நிலையத்தில் ஒரு மணி நேரம் காத்திருந்தே போல... நாங்க கொஞ்சம் பயந்துட்டோம்...''

''வந்ததும் வராததுமா ஹோட்டல்காரங்களை அதிகாரம் பண்ண முடியுமா? பிக்-அப் வேன் வரும் என்றதால் காத்திருந்தேன் - வர்ற போறவங்களைப் பார்த்தது சுவாரஸ்யமாத்தான் இருந்தது...''

அதிலும் முக்கியமாக அவன்... கறுப்பு ஸூட்டில் சில வெள்ளைக்காரப் பயணிகளுடன் வந்திறங்கிய அவனை மறுபடி மனதுள் நிறுத்தி அழகு பார்த்தாள்...!

நிஜமாகவே ஆண் அழகன்தான்... அயல்நாட்டவர்களுக்கு ஈடான உயரமும் அகன்ற தோள்களும். அவர்களைப் பொறாமைப் பட வைக்கும் பொன் பழுப்பு நிறம். கறுகறுவென்று அலையடித்த கேசம்.

மிகக் கம்பீரமான தோரணை...

கருப்பு உடையில் ஒரு கருஞ்சிறுத்தையை ஒத்திருந்தது அவனது நடை... விரைவும் வசீகரமுமாய்...

சீருடையில் தரையைத் துடைத்துக் கொண்டிருந்த பணியாளிடம் விசாரித்தாள் -

'எந்த நாட்டிலிருந்து வர்றாங்க?'

'தெரியலை... இது சார்ட்டர் பிளைட்.'

சில பேர் மட்டுமாய் ஒரு விமானத்தை வாடகைக்கு அமர்த்திப் பயணப்படுவது அது என்பது அவளுக்குத் தெரியும்.

ஆகப் பணக்காரப் புள்ளி.

பணம் மனிதனுக்கு ஒரு பளபளப்புச் சேர்க்கிறதுதான்... அதிலும் அவனே அதை உழைத்துச் சம்பாதித்திருந்தால் அது அசாத்தியக் கவர்ச்சி தருகிறது...

அது இவனில் தெரிந்தது.

உழைக்கவும், அதை வெற்றியாக மாற்றத் தெரிந்த மிடுக்கும் அவனது ஒவ்வொரு அசைவிலும் தெறித்ததை ரசித்தாள் -

இவளது பார்வையைக் கவனித்த பணியாளர் விளக்கினார் -

'அவர் சக்ரவர்த்தி... ஸ்வீடன் போனதாய்ச் சொன்னாங்க...'

'ஓ... சக்ரா ஹோட்டல்ஸ்வின் எம்.டி.?'

'ஆமா...'

தான் இத்தனை இளமையான முதலாளியின் கீழ்ப் பணிபுரிய வேண்டியிருக்கும் என்பது அவள் எதிர்பாராதது.

இரண்டாம்... ஏன், மூன்றாம் தலைமுறையைச் சேர்ந்தவர் போலும்... பணத்தில் பிறந்து அதைப் பெருக்கும் வித்தையையும் கற்றவர்.

விமான நிலைய அதிகாரியுடன் ஏதோ ஒரு தகவலைக் காட்டிப் புன்னகையுடன் பேசியவனை விட்டுத் தன் விழிகளைப் பிய்க்கவே முடியாமல் நின்றாள்... அதை உணர்ந்தது போலச் சட்டென அவன் திரும்ப... இவளும் விழிகளை விலக்க முடியாமல் திகைத்து விட்டாள்.

கவ்விய அவனது கண்கள் பின் இவளது மேனியில் ஒரு முறை வழுவழுவென இறங்கி, ஏறியது.

விதிர்த்தவளின் உடம்பு சிலிர்த்தது.



தன் தடுமாற்றத்தை முழுக்கக் காட்டாது மறைத்த தன் கறுப்புக் கண்ணாடிக்கு நன்றி சொன்னாள்.

ஜீன்ஸ், ஷர்ட், குர்தா, படர்த்திய கூந்தல், போதாக் குறைக்குக் கண்ணாடி - இதெல்லாம் இன்றி ஸல்வாரும், கொண்டையும் பவ்வியமுமாய் வேலை நிமித்தம் அவன் முன்புபோய் நிற்கும் போது கண்டுபிடிக்க மாட்டான்...

தன்னைப் பார்வையால் விழுங்கிய பெண் இவளேதான் என்று...! இத்தகு சிலிர்ப்பு அவளுக்குப் புதியது!

பேருந்தில் முகமறியாத ஆண்கள் இடித்து, உரச அருவருப்பில் உடலும் உள்ளமும் சுருளும்...

ஆனால் இதுவோ இன்பமும் ஏக்கமுமான ஒரு நூதனப் புல்லரிப்பு!

ஜானகி இவளது முகத்திற்கு முன் இட்ட சொடக்கு களில் நிகழ்காலத்திற்கு இறங்கி அசடும் வழிந்தாள்.

''ஏய், என்ன கண்ணைத் திறந்தபடியே கனவு?''

''இல்லை... ஆமாம்... யோசனை.''

''என்ன தீவிர யோசனைன்னுதான் கேட்கறேன்?''

''வந்து நேற்று விமான நிலையத்தில் இருந்தேன்ல... அப்ப ஒருத்தரைப் பார்த்தேன்...''

''இளைஞரா..?''

''ஆமா...''

''ஸ்மார்ட்?''

''ரொம்ப...''

ஜானகி பாட ஆரம்பித்தாள் -

''நெஞ்சத்திலே நீ நேற்று வந்தாய்

நேற்று முதல் ஓர் நினைவு தந்தாய்
நினைவு தராமல் நீ இருந்தால்
கனவுலகில் நான் வாழ்ந்திருப்பேன்!

நினைச்சேன் கவி, வந்ததுமே உன் கண்ணில் ஒரு மயக்கம் தெரிஞ்சது...!''

''கண்டபடி நினைக்காதே - அவர்தான் என் முதலாளி... சக்ரா ஹோட்டல்ஸ்ஸின் எம்.டி. திரு சக்ரவர்த்தி!''

''ஓ... போய்ப் பேசினியா?''

''சார்ட்டர் விமானத்தில் வந்த முதலாளி முன்னே அவர் வந்ததும் வராததுமாய் நான் போய் நிக்கிறதாவது...!''

ஆனால் அவரது பார்வை தன்னை நிதானமாய் அளந்தது நினைவு வர முகம் சிவந்தாள்.

''நிற்கலைன்னா ஏன் இப்படித் தடுமாறுறே?''

''இளம் வயசில் நிறையச் சாதித்தவரோன்ற ஆச்சரியம். அவ்வளவுதான்.''

''ஆஹா... அப்ப உன் மனசையும் ஐயா வெட்டிச் சாய்ச்சுட்டாரா?''

''என்ன... அப்படிச் சொல்றே ஜானு? ஒரு அபிமானத்தில்...''

''பல பெண்களுக்கு அவரைக் கண்டதும் அபிமானம் பொங்கிப் பெருக்கெடுப்பதாய்க் கேள்வி... ஜாக்ரதை!''

பல பெண்களின் பார்வை, பாசம் அவனைத் தொட்டிருப்பதாய்க் கேள்விப்பட்டதும் உள்ளே கிளம்பிய வருத்தமும் துளி எரிச்சலும் எதனால் என்பதுதான் சங்கவிக்குப் புரியவில்லை!



2

''பிரம்மாதம்ல இந்த மியூஸிக்... முக்கியமாய் பீட்?'' விரல்களைச் சொடுக்கிய ஜானகியின் இடுப்பும் அதே லயத்துடன் அசைந்தது.

சற்றே அதிக எடையுடனான உடம்பு என்றாலும், குழந்தைத் தனமான முகமும், சதா குதூகலம் ததும்பும் குணமும் உள்ள ஜானகியை யாருக்குமே பார்த்ததும் பிடித்துப் போகும்.

''ஆமா ஜானு.''

''பிறகு ஆடறதுக்கென்ன?''

''நான் இங்கே ஹோட்டலுக்கான ஸாப்ட்-வேர் உருவாக்க வந்தவ, ஜானு... டான்ஸ் ஆடறதுக்கில்லை...''

''இப்படி எல்லாம் பிகு பண்ணினே... இங்கே உனக்கு ஒரு புதுத் தோழியும் கூடக் கிடைக்காது... நாலு பேர் விட்டிற்கே வந்து கேட்கலை?''

''நீ ஏன் அவங்களிடம் எனக்கு ஆடத் தெரியும்னே?''

''அது பொய்யா?''

கண்களை உருட்டினாள் ஜானகி.

''இல்லதான்... ஆனா அதெல்லாம் கல்லூரி நாட் களில்... மூணு வருஷங்களுக்கு முன்னே... ஹாஸ்டல் டே, வரவேற்பு, வழியனுப்புன்னு எடுத்ததுக்கெல்லாம் பண்ணின கூத்து...''

''எவ்வளவு குஷியான நாட்கள்! இல்லியா?''

''ம்ம்... கவலை இல்லாத பருவம்... ஆனால் இது சவாலான காலம்... இதுவும் சுவாரஸ்யமாத்தான் இருக்குது...''

''இப்ப இந்தச் சவாலைச் சமாளிப்போம்... அதாவது சக்ரா ஹோட்டலின் ஸ்டாஃப் நைட்...''

''ஆறு மாதங்களுக்கு ஒருமுறை, ஒருவருக்கொருவர் நிதானமாய்ப் பேசிப் பழக, தங்களை ரிலாக்ஸ் செய்து கொள்ள ஏற்படுத்திய ஒரு நியமம்... சிறந்த ஐடியாதான்...''

''அதையேதான் நானும் சொல்றேன்... எல்லாரையும் பரிச்சயப்படுத்திக்க உனக்கொரு வாய்ப்பு...''

''ஆனால் நான் வேலையில் சேர்ந்தது பற்றி இன்னும் எம்.டி.க்கு ரிப்போர்ட் செய்யலை... அவரைப் பார்க்கவே யில்லை...''

''அதச் சொல்லு...'' கண்ணடித்தாள் ஜானகி.

''வெளிநாட்டிலிருந்து வந்தவருக்கு மற்ற வேலைகள் வரிசையாய்க் காத்திருக்குதே... அதில் மும்முரமான தால்... சந்திக்க முடியலை...''

''அதுவும் நல்லதுக்குத்தான்... சந்திப்பு அட்டகாசமாய் அமையணும்... ஊழியர்களின் வரவேற்பில் நீ ஆட... அவர் அதைக் கண்டு விழி பிதுங்கிச் சரிய...''

''இந்தக் கற்பனைக் கோட்டை அதிகப்படி ஜானு... ஸ்பெயினிலிருந்து சார்ட்டர் பிளைட்ல வந்திறங்கும் கோடீஸ்வரர்... உலகையும் அதன் உல்லாசங்களையும் சரளமாய் அனுபவிப்பவர்... என்னுடைய அரைகுறை டான்ஸில் சரியறதெல்லாம்... தாங்க முடியாத கதை...! தவிர வேலையை ஆரம்பிக்கும் முன் மேடையேறி ஆடறது முறையான தொடக்கமாய்த் தோணலை...''

''சரி, எப்பதான் உன் பாஸைப் பார்க்கப் போறே?''

''இன்னும் மூன்று நாட்களுக்கு அவர் பிஸி... இத்தனை அவசரமாய் அவர் வந்ததே கோவாவை மாசு படியாமல் காப்பதற்காய் இங்குள்ள ஹோட்டல் உரிமை



யாளர்களின் கருத்தரங்கில் கலந்து கொள்ளவாம்... கடைசி நாளன்று விருந்தோம்புவது 'சக்ரா ஹோட்டல்' தான்...''

''ஆக உன் வேலை உடனடியாய் ஆரம்பிக்கப் போற தில்லை - ஆக டூரிஸ்ட் போல ஒரு சுற்றுப் போடு...''

''முதல்ல காவ்யாவைப் பார்க்கணும், ஜானு...''

''ம்... அவளைப் பற்றி ரொம்பத்தான் தாளிச்சே.''

''எட்டு வருஷம் நெல்லை கான்வென்ட்ல சேர்ந்து படிச்சோமே, ஜானு...''

''எங்ககூடக் கல்லூரியில் மூணே வருஷந்தான் சேர்ந்திருந்தே... படிக்கவுமில்லைங்கறியா?''

சங்கவி சிரித்தாள் -

''நாமென்ன காதலர்களா, ஜானு? எதுக்குப் பொறாமை...?''

''ல்ல... வந்ததிலேருந்து காவ்யாவைப் பார்க்கணும்னு துடிக்கறியே...''

''பார்த்து அஞ்சு வருஷங்களுக்கு மேலாச்சே... ரொம்ப அமைதியான பொண்ணு... தாயில்லைங்கறதால் எனக்கு... ஏன், எல்லோருக்குமே அவ மேல தனிப்பட்ட அனுதாபமும் உண்டு...''

''ஆனா ஆரம்பத்தில் ஈ-மெயிலில் தொடர்பு கொண்டவ, பிறகு ஐ.டி.யை மாற்றிட்டு ஒதுங்கிட்டான்னியே!''

''கோவாவில் இருக்கான்னு தெரிஞ்சதால், உன் தயவில் அவளைக் கண்டுபிடிச்சுட்டேன்...''

''வாரந் தவறாமல் உன்னோடு ஈ-மெயிலில் 'ச்சாட்' பண்ற விஷயத்தில் எனக்குத்தானே முதல் மார்க்!''

''அதற்குக் காத்திருப்பேன், ஜானு... வேலையில் சேர்ந்த பிறகு மனசாரப் பழகும் நண்பர்கள் கிடைப்பது

அபூர்வம். நிறையப் போட்டி பொறாமை... இவ நம்மை மிஞ்சிடுவாளோ... பேரைத் தட்டிடுவாளோ... பிர மோஷனைப் பிடுங்கிடுவாளோன்ற பயத்துல தோழமை வர்றதில்லை... ஆகப் பள்ளி, கல்லூரி நாள் சிநேகிதங் களைத்தான் பொத்திப் பாதுகாத்துக்கணும்.''

''நிஜந்தான்... காவ்யாவும் நீயும் எங்கே சந்திச்சுக்கறீங்க?''

''அவளுக்கு ஆச்சரியம்... முதல்ல எப்படி அவ நம்பரைப் பிடிச்சேன்னு... அடுத்தது நானும் கோவாவில் தான் இருக்கேன்றதும்... ஆனால்...''

''ஆனா?''

''குரல்ல சுரத்தில்லை, ஜானு... எங்கே சந்திக்க லாம்னதும் ரொம்பத் தயங்கினா... அவ ஆபீஸ் இருக்கும் டவுன் பகுதிக்கு வர்றதாய் நானே சொல்லவும், வேற வழியின்றிச் சம்மதிச்சதாய்ப் பட்டது...''

''நியாயத்துக்கு அவதான் உன்னை இங்கே வந்து பார்க்கணும் - அப்ப நானும் அவளைச் சந்திச்சு... எனக்கும் கூட ஒரு சிநேகிதி கிடைச்சிருப்பாளே...''

''நீ அவளைக் கொண்டாடித் தீர்த்திருவே... அத்தனை அழகாய்ப் பளிங்குப் பொம்மை போலிருப்பா... ஆனா வித்தியாசமான பொண்ணு... நீ அவளை விசித்திரம்னு கூடச் சொல்லக் கூடும்... அம்மா இல்லாத அழகு மகளை அப்பா ரொம்பப் பயந்து பொத்தி வளர்த்ததால்... வாயாரச் சிரிக்கக் கூடத் தயங்குவா...''

''கோவா மாதிரி முற்போக்கான, சுதந்திர டவுனில் தனியே வாழும் பெண் இந்நேரம் ரொம்ப மாறி யிருப்பா... ஆனா அவளைப் பார்த்ததும் நீ மாறிடக் கூடாது, சவி...''

''எப்படி?''



''அங்கே... அவளோடு தங்கிக்கறேன்னு கிளம்பிட்டா?''

''பார்ப்போம்... இத்தனை கம்மி வாடகையில் இவ்வளவு வசதிகளோடு இருக்குமோ என்னவோ? இது சக்ரா ஹோட்டலின் அருகேயுள்ள பகுதி... தவிர வீட்டுக்கார மாமி வேற வடகம், பாயசம்னு அடிக்கடி ஏதேனும் தந்து அசத்தறாங்க...''

குறும்பாய்ச் சங்கவி அடுக்க, வலிக்கும் அளவில் ஜானகி தோழியைக் கிள்ளினாள்.

''ஸ்ஸ் ஆ... உனக்கேன் இத்தனை பொறாமை?''

''உனக்கு ஏன் இவ்வளவு கொழுப்பு?''

''யப்பா... சவியும் வந்த பிறகுதான் இந்த மாடி போர்ஷன் - ஏன், வீடே கலகலன்னு இருக்குது.''

படியேறியதில் சற்று மூச்சிரைத்த மாமி வாயாரச் சொன்னார் -

அலமு மாமிதான் வீட்டின் உரிமையாளர் -

கணவருக்குக் கோவாவின் பிரபல பள்ளி ஒன்றில் ஆசிரியராக வேலை கிடைத்ததும் இந்தக் கடற்புரத் திற்கு முப்பது வருடங்களுக்கு முன் வந்தவர்கள். ஓய்விற்குப் பின்னும் அங்கிருந்து விலக மனமின்றித் தங்கியாயிற்று. அவர் பள்ளி,ட்யூஷன் என்று மும்முரமாய் இருக்க, தமிழ் பேசும் இளைய தலைமுறைக்கு மாடியின் இரு அறைகளை வாடகைக்கு விட்டு, அவர்களுக்கான சிசுருஷை செய்து உடனே சம்பாஷித்து மகிழ்வது மாமியின் பொழுதுபோக்கு. அதுவும் தன் சமையலை ரசிக்கும் நீளநாக்குள்ளோர் கிடைத்து விட்டால் மாமியின் உற்சாகம் கரை புரளும்...

'வாடகைக்கு வாங்கும் இரண்டாயிரத்தை நீ அவங் களுக்குச் சமைச்சுப் போட்டே திருப்பித் தந்திடுவ

போலியே, மண்டு அலமு...' என்று கேலி பண்ணுவார் கணவர்.

குழந்தை குட்டி இல்லாத தம்பதி என்பதாலோ என்னவோ அத்தம்பதிக்கு ஒருவர் மேல் மற்றவருக்குச் சற்று அதிகப்படியான வாஞ்சை...

'வேறென்னத்தைக் கண்டுவிட்டான்... போகட்டும்...' என்ற இளக்கம். ஆக வாடகைக்கு இருப்பவர்களுக்குப் பருப்பு உசிலி, மசாலா தோசை, டோக்ளாவுடன் வெல்லச் சட்னி, பகோடா என்று அடிக்கடி அமர்க்களமான டிபன்தான்.

''உக்காருங்க மாமி...சவி ஆடப் போறதில்லையாம்!''

''ஏண்டிம்மா? உன் சகாக்கள் வந்து அத்தனை பிரியமாய் வேண்டிக் கேட்டுட்டாளே!''

''இன்னும் முதலாளியையே சந்திக்க வாய்க்கலை...''

இதற்குத் தஞ்சைப் பொம்மை போலத் தலையசைத்த ஜானகியைப் பார்க்காதது போலப் பேச்சைத் தொடர்ந்தாள் சங்கவி...!

''வந்த வேலையைத் தொடங்கக் கூட இல்லாமல் நானை ஸ்டாஃப் விருந்தப்ப நான் ஒரு புதுமுகம், இடுப்பை வளைச்சுட்டு நின்றால் கௌரவமாய் இருக்குமா, மாமி? தவிர நான் ஒன்னும் பிரமாத டான்ஸரில்லை...''

''பொய் - நளினமான அசைவுகள்... கூடவே சவியின் முகபாவம் - அப்படியே அள்ளிக்கும் மாமி - 'மறைந்திருந்தே பார்க்கும் மர்மமென்ன'ன்னு ஒரு பழைய பாட்டு...''

''அதென்ன பழசுங்கறே? அது பத்மினி அபிநயம் பிடிச்ச எவர்க்ரீன் சாங் இல்லியோ?''



''அதுக்கு இவ ஆடினப்ப முகத்தில் காட்டின சிணுங்கலும் சிருங்காரமும்... அபாரம்...''

''இப்பவும் அதுக்கே ஆடப் போறாளா?''

''நோ... நோ... வெறுமே மியூஸிக்தான்... ஆனா அதற்கும் ஏற்றாற்போல பாவனை காட்டலாமே...''

''காட்டலாம்... ஆனா இங்கே நான் வந்தது கம்ப்யூட்டர் ஸாப்ட்வேர் உருவாக்க...''

''அதென்ன சங்கவி?''

''சக்ரா க்ரூப்பிற்கு இந்தியாவில் நாலு ஹோட்டல்கள் தான் மாமி. இப்ப கோலாலம்பூரில் அடுத்தது எழும்புதாம்... ஆனால் நட்சத்திர அந்தஸ்திலுள்ள சொகுசு ஹோட்டல்கள் என்பதால் அங்கு தங்குபவர்கள் எல்லாம் பெரும் புள்ளிகள்...''

''பின்னே நான் ஒன்றுக்கு எட்டு, பத்தாயிரம்ன்னு தந்து மாளணுமே!''

''அப்படி வர்றவங்க மறுபடி மறுபடி வர்றதுண்டு... அதை ஒரு சர்வே மூலம் உறுதிப்படுத்தியாச்சு.''

''அப்ப சரக்கு நல்லாயிருக்குன்னு அர்த்தம்!''

''அப்படிப்பட்ட சர்விஸை மேலும் மேம்படுத்த முயற்சிக்கறாங்க... அதற்கு நான் ஒரு ஐடியா தந்தேன்... அதாவது எங்க கம்பெனியின் மூலம், வரும் பெரும்புள்ளிகளின் விருப்பு, ரசனை, வெறுப்பு, பழக்க வழக்கங்களை எல்லாம் குறிப்பெடுத்து கம்ப்யூட்டரில் பதிவு செய்திடணும்... அந்தத் தகடுகள் ஐந்து ஹோட்டல்களிலும் இருக்கும். அவர் இரண்டாம் முறை,எந்த சக்ரா க்ரூப் ஹோட்டலில் தங்கினாலும் அவரைப் பற்றிய குறிப்புகளைக் கொண்டே அவரைக் குளிப்பாட்டிடலாம்...!''

''அதாவது ரொம்பப் பரிச்சயமான இடத்திற்கு வந்துட்
டோம்ற உணர்வை விருந்தாளிக்கு ஏற்படுத்தி,
'நீங்க எங்களது அதி முக்கிய விருந்தினர்!' என்ற
உபசரிப்பை இவர்களும் தந்து... கச்சிதமான
ஐடியாதான்!'' ஜானகி சிலாகித்தாள்.

''அதை பாஸிற்கு...''

''அதாவது திரு சக்ரவர்த்தி அவர்களுக்கு...?''

''ம்ம்... விளக்கி, அவரது எதிர்பார்ப்பையும் புரிந்து செயல்படணும்... கெஸ்ட்-சார்ட் இருந்ததை வாங்கிப் பார்த்தாச்சு...''

''வேலை ஒரு மாசம் ஆகுமா?''

''இப்பவே... ஏதும் ஆரம்பிக்காமலேயே மூணு நாள் ஓடிடிச்சு... இன்னும் ரெண்டு நாள் காத்திருந்து முதலாளியைச் சந்தித்து, விளக்கி... அவரது விருப்பம் தேவையறிந்து...

''ம்க்கும்...'' விஷமமாய்க் கனைத்தாள் ஜானகி.

முறைத்தபடி எழுந்தாள் சங்கவி.

''சரி... நான் காவ்யாவைப் பார்க்கக் கிளம்பறேன்...''

''அவதான் உன்னைப் பார்க்க ஆர்வங் காட்டலைன்னியே - பிறகேன் பறக்கற? எங்கே உங்க மீட்டிங்-பாய்ன்ட்?''

''டவுனில் 'ராஜ்தானி தாபா'ன்னு ரெஸ்டாரன்ட் இருக்காமே?''

''பிரபலம்தான்... அவம் போடற 'தம்' பிரியாணி அபாரம்பா இவர்...''

''சார் நான்-வெஜ் சாப்பிடறதுண்டா, மாமி?''



''நானே வறுத்த மீன் விடறதில்லை... பிடிச்ச நேரமே வறுத்தது கார அல்வாவாட்டம் தொண்டையில வழுக்கிண்டு இறங்குமே...''

சிரித்தபடி கூந்தலைக் கோதிச் சிலவானாள் சங்கவி. மனது நிறையப் பள்ளித் தோழியைக் காணப் போகும் ஆர்வம்... ஆனால் இந்தச் சந்திப்பு தன் வாழ்வையும் சேர்த்து இழுத்துப் புரட்டப் போவதை அவள் அறியத்தானில்லை...!

## 3

ஷெனாய் வாத்தியத்தின் சோக இசையில் மூழ்கியிருந்தது, அந்த உணவகம்.

மணி பன்னிரண்டரை என்பதாலோ என்னவோ அதிகக் கூட்டமில்லை. காவ்யா ஏற்கெனவே வந்திருப்பாளோ என்று அவசரமாய் விழிகளைச் சுற்றியவள் தனியே பெண் யாரும் அங்கே இருக்கவில்லை என்பது தெரிந்ததும் சாவகாசமாய்க் கைகழுவித் துடைத்தபடி இடதுபுற மூலையில் கிடந்த இருவருக்கான சிறுமேசைப்புறமாய்ப் போனாள்.

ஓட்டுக்கூரையும் மரங்களின் அடர்த்தியுமாய்ச் சேர்ந்து மதிய வெயிலையும் கூட வடிகட்டியிருக்க, அந்த இடம் இதமான அரை இருட்டிலிருந்தது... நான்கு சுவர்களிலும் வெவ்வேறு போர்த்துகீசிய நாட்களை நினைவுபடுத்தும் ஓவியங்கள்.

இவளுக்கு மிக அருகே ஒற்றைக் கண்ணைக் கறுப்புத் துணியால் மூடிய ஒரு கடற் கொள்ளைக்காரன் கள்ளச் சிரிப்புடன்...!

உடனே கண்ணியமான முறுவலுடன் பேசப் பார்த்த அந்தச் சக்ரவர்த்தியின் நினைவு வந்தது...!

பார்த்த மூன்று நாட்களில் முப்பது முறையேனும் அவன் நினைவு...! மனதிற்கு மிகத் தித்திப்பானவனாய் இருக்கிறான் போலும்... நினைவு ஈக்கள் அவனை மொய்த்துத் தள்ளுகின்றன...!

கட்டுப்பாடற்ற கற்பனைகள்...

ஆனால் பள்ளி நாட்கள் கடும் கட்டுப்பாடானவை. கற்பனை கூடச் செய்திருக்க முடியாது - தான் ஐந்தாறு ஆண்டுகளில் வேலை நிமித்தம் தனியே கோவா போவோம் என்று... வாயைத் திறக்கவே யோசிக்கும் காவ்யாவிற்கு இங்கு டிராவல்ஸில் பயணிகளுடன் கலகலவென்று பேச வேண்டிய உத்தியோகம்!

"நீ ரொம்ப அழகுடி!" என்று தோழிகளின் பாராட்டிற்கே வெட்கித் தலை குனியும் பெண் அவள்.

அவளுமே தனியே சில வருடங்களை இங்கே தங்கிச் சமாளித்து விட்டாளே...

தேவலை... இந்தியாவில் பெண்களின் நிலையில் முன்னேற்றம்தான்.

இங்கு புகைக்கத் தடை கிடையாது போலும்... புகைக்கு நடுவே ஒவ்வொரு மேஜையிலும் ஃபெனி என்ற மது பாட்டில்களும் நிற்க, கொறித்துக் கொண்டிருந்தனர் சிலர்.

தனியே அமர்ந்திருப்பது சங்கோஜப்படுத்த, காவ்யா சீக்கிரமாய் வந்தால் தேவலை என்ற தவிப்புடன் இருந்தாள். வேலை பிடித்து வைத்திருக்கிறதோ?

மதியம் இரண்டு மணி நேரம் கூட விடுபட முடியாமல் அப்படியா வெட்டி முறிக்கிறாள்?



எரிச்சலுடன் சற்று மாறி அமர்ந்தாள். கவரிலிருந்த கடற் கொள்ளைக்காரன் வேறு கோணத்திலிருந்து சிரித்தான்!

அரை மணி நேரங் கழித்து அந்த உணவகத்தில் நுழைந்த ஒரு உருவம் இவளது மேஜையை நோக்கி மெள்ள வந்தது... முதலில் அசுவாரஸ்யமாய்ப் பார்த்த சங்கவியின் முகம் சற்று உன்னிப்பாகிப் பின் வெளிறியது...

வருவது... காவ்யாவா... இருக்காது... ஆனால் வெகு வாய் ஒத்த ஜாடை... அதே நயக்க நடை... ஆனால் இத் தனை பருமனும், சதை தொங்கிய கன்னங்களும், தளர்வுமாய்... ஒரு வேளை காவ்யாவின் சித்தியாய் இருக்குமோ?

"சங்கவி..."

தோழியின் குரலேதான்.

குழைந்த கால்களைச் சமாளித்து எழுந்தாள்.

"காவ்யா...?"

"ம்...ம்..."

நீண்ட இருவரது கைகளும் ஒன்றை ஒன்று இறுகப் பற்றின...

அந்த நேச அழுத்தத்தில் விழிகள் ததும்பின.

"நான்... நினைக்கலை... நீ மாறிட்டே... அதான்..."

வெறுமே தலையசைத்தாள். விசும்பி விடுவோமோ என்ற பயத்தில் அவள் பேசாதது புரிந்தது.

"உக்காரு, காவ்யா...உன்னைப் பார்க்க ரொம்ப ஆவலாயிருந்தேன்..."

"ம்...ம்... முதல்ல சாப்பிட ஏதேனும் ஆர்டர் பண்ணிடுவோம்." பணியாளரிடம் எளிய சில பதார்த்தங்களைக் கொண்டு வரச் சொன்னபின், ஒருவரை ஒருவர் மறுபடி ஆர்வமாய் ஆராய்ந்தனர்.

''ரெண்டு வருஷமேனும் இங்கே இருக்கேல்ல, காவ்யா?''

''முதல்ல தொடர்பு கொண்ட நீ பிறகு வேலையில் ரொம்ப மும்முரமாயிட்ட போல?''

''ம்ப்ச்... வேலை இருக்கறதால்தான் சமாளிக்கறேன்...''

''உங்கப்பா எங்கே இருக்கார்?''

''போயாச்சு.''

''கடவுளே... அதான்... வந்து...''

''நான் அவருக்கு அவமானம் சேர்த்துட்டதாய்ச் சொன்னார், சவி...''

கண்ணீர் பெருகி வழிய ஆரம்பித்தது.

அதிக வெளிச்சமற்ற மூலையில் இருந்தது பற்றிய நிம்மதியோடு, தோழியின் தோளைத் தட்டினாள்.

மேற்கத்திய நாகரீகத்தின் தயவில் அங்கிருந்த யாரும் இவர்கள் புறமாய்த் திரும்பிப் பார்வைகளால் துளைக்க வில்லை.

''அழாதே, காவ்யா.''

''அப்பா செத்தப்பகூட எனக்கு அழுகை வரலை, சவி... அத்தனைக்கு ஒரு ஷாக்... 'நினைச்சேன்... உன்னைப் பெத்ததுக்கு அவமானப்படப் போறேன்னு!' ஃபோனில் கத்தியவர் விஷம் சாப்பிட்டுட்டார்... போஸ்ட் மார்ட்டம், போலீஸ் விசாரணை... எல்லாத்துக்கும் மேல மற்றவங்க தூஷணை, 'எல்லாம் மகளாலதான்' நிந் தனைன்னு... எல்லாத்தையும் மரம் போல நின்னு கேட்டுகிட்டேன்...''

''ஷ்...'' பேப்பர் நாப்கினை நீட்டினாள். ''துடைச் க்கோ... இப்ப சாப்பிடு... பிறகு உன் அறையில் போய் மனசாரப் பேசலாம்...''



''எனக்குப் பேசக்கூட இப்ப யாருமில்ல, சவி...''

''ஏன் தொடர்பில்லை காவ்யாவிடமிருந்துன்னு நான் தவிச்சேனே - ஃபோன் நம்பர் தெரிஞ்சிருந்தால் நிச்சயம் பேசியிருப்பேன்... சரி... ஏன் உடம்பு பெருத்துடுச்சு... உடம்புக்கு ஏதுமா?''

''ம்ப்ச்... அதெல்லாம் இல்லை...''

''உன் அழகைப் பற்றி அத்தனை பேசினேனா, என் ஃபிரண்ட் ஜானகிக்கும் உன்னைப் பார்க்கணும்னு ஆசை.''

''ம்... உன் காலெஜ்-மேட் இல்லியா?''

''அவதான் உன் ஃபோன் நம்பரைக் கண்டுபிடிச்ச சி.ஐ.டி.!'' லகுவாய்ப் பேச முயன்றாள் சங்கவி.

''டிரெக்டரியில் என் பெயர் இருக்காது...''

''அவளுக்கு வேண்டிய டெலிஃபோன் எக்ஸ்சேன்ஜ் ஆள் மூலம் கெஞ்சி எடுத்துட்டா - புது நம்பர் லிஸ்டில் இருந்ததாம்...''

''தாங்க்ஸ், சவி... எம் மேல் இத்தனை அக்கறை காட்டுவேன்னு நினைக்கலை...''

''எட்டு வருஷங்களாய்ச் சேர்ந்து படிச்சோமே... நாம ரெண்டு பேருமே சற்று உயரங்கறதால் பின் பெஞ்ச் வேற - தூங்க, சாப்பிட, குறும்பு பண்ண வசதியாய்...''

பள்ளி ஞாபகங்கள் காவ்யாவின் முகத்தில் புன்னகை யாய்த் தெரிந்தன.

''சிரிச்சா... உன் கன்னக் குழியில் பழைய அழகுக் காவ்யா தெரியறா...''

''அழகு தேவையில்லாதது, சவி... அதற்குப் பதில் கடவுள் எனக்கு என் அம்மாவைத் தந்திருக்கலாம்...''

''அது மாதிரியான கண்டிஷன்ல் போடற நிலையில் மனுஷன் இல்லையே...''

''ஆனா அளவில்லாத கஷ்டங்களை அனுபவிக் கணும்னா... இட்ஸ் நாட் ஃபேர்.''

''அழகு மிகப் பலமான ஒரு சிபாரிசுக் கடிதம்'னு மேல்நாட்டு அறிஞர் சொல்லியிருக்கார் -அழகுப் பெண்கள் எங்கே போனாலும் 'எஸ் மேம்'னு யாரேனும் வந்து அசடு வழிய, நம்ப வேலை நடந்திடுதில்ல!''

''பிறகு ஆண்கள் தங்கள் வேலையைக் காட்டிட... நமக்கு அழகு ஆபத்துதான், சவி...''

இவளுக்குப் புரிந்தது போலிருந்தது.

''அதான் கண்டபடி சாப்பிட்டு இப்படிப் பெருத் திட்டியா?''

பருத்த தோள்கள் குலுங்கின.

''நான் அதை வெறுத்ததால் அழகு தானே என்னை விட்டு விலகிடுச்சுன்னு நினைக்கறேன்... விரக்தியில் சதா சாப்பிட்டேன்... மனசு விட்டுப் பேச முடியாத வாயைச் சதா மெல்ல வச்சேன்... என் அறையை ஒரு மாசமாய் நான் பெருக்கக் கூட இல்லை.''

''டிப்ரஷன்... மனச்சோர்வில விழுந்திருக்கே, காவ்யா... அதுக்குத்தான் சிகிச்சை எடுத்துக்கலாமே...''

''எடுத்துகிட்டேன் - இப்ப மறுபடி அறை சுத்தமா யிருக்கு... ஆனா, வாழ்வு போனது போனதுதானே!''

''உன்னைப் பாராட்டறேன், காவ்யா!'' - அழுத்தமாய்ச் சொன்னாள்.

''ஏன்னு பார்க்கறியா? யாருமற்ற தனிமை... ஏதோ கொடுமை, இழப்பு நேர்ந்திருக்கு... கூடவே அப்பாவின் தற்கொலை வேறு... பார்த்தவங்க எல்லாரும் பாராட்டின



உன் அழகும் சற்றுக் குலைந்த பிறகும்... நீயும் தற் கொலைன்ற அசட்டுத்தனத்தைச் செய்யாமல், துணிஞ்சு நிற்கிறயே... பெருமையாய் இருக்குடி...''

''சாக நமக்கு உரிமையில்லைன்னு பட்டது... ஆனாலும் இங்கே தனிமையில் கிடந்தது... கொடுமைதான்.''

''எங்க யார் நினைப்பும் வரலியா, காவ்யா?''

ஆவி பறந்த உணவை ஸ்பூனால் கிளறியபடி கேட்டாள்.

''நீங்களும் என்னை நிச்சயம் வெறுத்திடுவீங்கன்னு நினைச்சேன்!'' கீழுதடு வேதனை தாளாமல் துடித்தது.

''அப்படி என்னதான் நடந்தது?''

''அதுவாய் ஏதும் நடக்கலை... அசட்டுத்தனமாய் என் தலையில் நானே அள்ளிப் போட்டுகிட்ட மண்.''

இவள் கேள்வியுடன் பார்த்திருக்க, காவ்யா மிக மெள்ளச் சொன்னாள் - ''நான் கர்ப்பமாயிட்டேன், சவி!''

வாயிலிட்ட உணவை மெல்ல, முயற்சி தேவையா யிருந்தது...

''அப்ப... உன் குழந்தை?''

''மூணாம் மாசமே கலைஞ்சிருச்சு...'' கண்ணீர் கரகரவெனக் கொட்டியது.

''ஸாரி காவ்யா... அழாதே ப்ளீஸ்... நீ விரும்பியவர் ஏமாற்றிட்டாரா... அவர் தப்புக்கு நீயேன் தவிக்கற?''

''தப்பு என்னதுதான்... ஏமாற நான் தயார்ன்னு நின்னேனே... அதுவரைக்கும் பொத்திப் பொத்தி உலகம் காட்டாமல் வளர்த்து விட்ட அப்பா, அவருடைய சிநேகிதர் இங்கேயுள்ள ட்ராவல் ஏஜென்ஸியில் நல்ல சம்பளத்தில் வேலை, தங்குமிடம் எல்லாம் இருக்குன்னு சொன்னதும், மறுபேச்சே இல்லாமல் என்னை ரயிலேற்றி விட்டுட்டார்.''

''காலெஜில் டூரிஸம்தான் படிச்சேல்லியா?''

''ஆமா.. உள்ளூர்லியே படிச்ச எனக்கு அதுவரை கட்டியிருந்த கண்கட்டை அவிழ்த்துவிட்டது போலானது... வாழ்வு ரொம்ப கவர்ச்சிகரமானதுன்னு பட்டது...''

''ம்...''

''அந்த சமயம்தான் அவரைச் சந்திச்சேன்... சிங்கப்பூருக்கு டிக்கெட் புக் பண்ண அவரே ஆபிஸிற்கு வந்தார்...''

''யார்?'' வறண்ட தொண்டையிலிருந்து மெள்ளவே கேள்வி வந்தது....

''சக்ரவர்த்தி.''

''யா... யாரு?''

''சக்ரா க்ரூப்ஸின் முதலாளி சக்ரவர்த்தி!''

## 4

''ஜானு... நான் தயார்!'' - சங்கவி அறிவித்தாள். பள்ளி நோட்டுக்களைத் திருத்திக் கொண்டிருந்த ஜானகி பிடரியை நீவியபடி நிமிர்ந்தாள் -

''சாப்பாடும் தயார்தான் - சாப்பிடலாமா?''

''நோ ஜோக்ஸ்... நான் ஆடத் தயார்னேன்... அந்த மியூஸிக் காஸெட்டை நீதானே வச்சிருந்தே - போட்டு விடு... ஆடறேன்.''

''நாளை மறுநாள் சக்ரா ஹோட்டலில் நடக்கும் பணியாளரின் இரவு விருந்தில் ஆடுவதற்கான ஒத்திகையா? நீதான் அங்கே வேலை செய்யவே ஆரம்பிக்கலையே, சவி?''

''வேணும்னே என்னை உரசறே... அந்தச் சக்ரவர்த்தியின் பாக்கெட்டிலிருந்துதானே எனக்குச் சம்பளம் வரும்... அதான்...''



''மாறிடாதேன்னு சொல்லித்தானே உன்னை அனுப்பினேன்?''

பதிலில்லை!

''நான் ஸ்கூல் முடிஞ்சு வரும்போது நீ படுத்திருந்தே... சரி, அலைந்த,உண்ட களைப்பில் தோழி தூங்கறான்னு விட்டேன்... எழுந்த பிறகு காவ்யாவைச் சந்திச்சது பற்றி கதை கதையாய்ச் சொல்லப் போறேன்னு காத்திருந்தால், கேட்ட கேள்விக்கு 'ம்ம்' - 'இல்லை'ங்கற ரெண்டே வார்த்தைகள்தான் வருது... இப்ப இந்த அறிவிப்பு... என்ன நடக்குது?''

''நீதானே முதல்ல ஆடு ஆடுன்னே?''

''உன் சகாக்கள் வந்து கேட்டுக்கிட்டதால் சொன்னேன்... ரெண்டே நிமிஷ டான்ஸ் - நாடகத்தின் நடுவே வரும் ஒரு மிருதங்க பீட்டிற்குச் சின்ன அசைவுகள் போதும்னாங்க... நானும் உன் திறமையைக் கொஞ்சம் அதிகப்படியாகவே தாளிச்சுத் தள்ளினேன்.''

''அதில் மயங்கிச் சம்மதிச்சிட்டேன்னு வை...''

''ஆஹா? மங்கை மயங்க இத்தனை நேரமா? அப்பவே மயங்கித் தலையாட்டி இருக்கறதுதானே?''

''வந்து... இப்ப ஒரு காரணம் கிடைச்சது...''

''அப்படி வா, வழிக்கு! சொல்லு... என்ன காரணம்?'

''இப்ப ஏதும் கேட்காதே, ஜானு... நீ என்னை நம்பறேல்ல?''

''நீ என்னோடு தங்கினாலும் என் புடவை, நகையெல்லாம் பத்திரமாயும், என் உயிர் பாதுகாப்பாயும் இருக்கும்ற நம்பிக்கை இருந்ததால்தான் இங்கே உன்னை வரச் சொன்னேன்.''

கண்களை உருட்டி 'வெடுவெடு' என ஜானகி சொன்னதை ரசித்துப் புன்னகைத்தவள் -

''நன்றி... அதே போல அநாவசிய வம்பிற்குப் போக மாட்டேன் - வந்த தும்பை விட மாட்டேன்னும்...''

''நம்பலாம்தான்... இந்த திடீர் பல்டிதான் சந் தேகத்தைக் கிளப்புது.''

''நீ ரொம்ப மக்கு இல்லைன்னு நினைச்சேன்...''

''சொல்லட்டுமா... காவ்யாதான் காரணம்.''

''புரியுதுல்ல... கிளறாதே ஜானு... நான் ஆடறேனே?''

'என்னை எதுக்குக் கெஞ்சறே?' என்றவள், எழுந்து கேஸட்டைச் செருகி டேப்பைச் சுழல விட்டாள். புல் லாங்குழல் இனிமை ஆரம்பிக்க, பின்னர் மிருதங்கமும் தவிலும் சேர்ந்தமைந்த இசை வடிவம் அது.

ஹோட்டல் அறைகளின் பராமரிப்புப் பணிப் பொறுப் பாளரான அரவிந்தன், கல்கத்தா மேடை நாடகங்களில் பங்கேற்ற அனுபவத்தால், வசனமில்லாத ஒரு நாடகத்தை நாளை மறுநாளுக்காக அமைத்து ஒத்திகையும் பார்த் திருக்க, அதில் நாயகன் மோக வயப்படுவதைக் குறிக்க ஒரு நடனம் தேவைப்பட்டதாம்...

அங்கிருந்த பெண்களெல்லாம் கூச்சத்துடன் மறுத்து விட்டார்கள் - 'சாதாரண நடனமே அறியோம்... இதில் மோகத்தைக் குறிப்பது போல நாங்க பாவனை காட்ட முயன்றால் -

'வயிற்று வலியால் தவிக்கிறாள் போலும்!' என்று பார்வையாளரின் பரிதாபந்தான் மிஞ்சும்!'' என்று.

சங்கவியின் அழகிய முகமும், நடனமாடக் கூடியவள் என்ற தனித்தோடு உடலும் கண்ணில் பட்டதும், அரவிந்தன் நேரே வேறு சில பெண் சிப்பந்திகளுடன்



வந்து ஜானகியையும் மாமியையும் பார்த்துப் பேசி விட, அப்போது தீர்மானமாய் மறுத்தவள் சங்கவி.

இப்போது மிகத் தீவிரமாய் இசையைக் கவனித்து, விரல்களை, தோள்களை, இடையை அதற்குத் தோதாய் அசைத்துக் கொண்டிருந்தாள்.

பாலோடு தேன் கலந்தது போல இசையோடு, தகுந்த அசைவுகள் சேர்ந்து சுவை கூடிக் கொண்டிருந்தன.

''தோ பாரு, சங்கவி தேவி - ஊரில் உங்கப்பா, அம்மா எல்லாம் என்னோடு ஃபோனில் பேசி -

'சவியைப் பத்திரமாய்ப் பார்த்துக்கம்மா... உன்னை நம்பித்தான் எங்க மகளை அனுப்பறோம்'ணாங்க.''

''இல்லேன்னு சொன்னேனா? நானே உன்னைத்தானே நம்பி வந்தேன்!''

''போச்சு... ரொம்ப ஆபத்தான இடத்தில் கால் வைக்கறே போல... இல்லைன்னா எனக்கு இப்படி 'ஐஸ்' வைப்பியா?''

''எங்கப்பாவின் புஸ்தக அலமாரியில் 'பதஞ்சலி யோக உரை'ன்னு ஒரு புஸ்தகமுண்டு.... அதில் ஒரு வரி எனக்குப் பிடிக்கும்.

'நாம் உலகில் முறையாக விளையாடத் தெரிந்து கொள்ள வேணும். அதைத் தெரிந்து கொள்ளாதவர்களை உலகம் விளையாட்டிலிருந்து விலக்கி விடும்,'ன்னு.''

''ஓஹோ?''

''முறையாக விளையாடாதவர்களுக்கு ஒரு பாடம் கற்றுத் தரணும், ஜானு...''

''உப்பைத் தின்றவன் தண்ணீர் குடிச்சுதான் ஆகணுங் கறது உலக நியதி. அதான் 'யோகமே' புட்டு வைத்திடுதே - இல்லைன்னா உலகம் உன்னை விலக்கி விடும்னு.''

''உலகம்னா எது... யாரு? நாமதானே?''

''அடடே... அப்ப அம்மா நீதி தேவதை ஆகப் போறீங்க?''

''ப்ளீஸ் ஜானு - பிரச்சனையில் மாட்டிக்க மாட்டேன்... ஒரு சின்ன நாடகம்...''

''நாட்டியம்னே?''

''ஐயோ... உனக்குப் புரியறதற்குள்...''

''புரியுது புரியுது- இந்த நாட்டியம் உன் நாடகத்தின் ஒரு பகுதி...''

''ஆரம்பம்... பிறகு எப்படிப் போகுமோ? ஆரம்பமே கூட நமத்த பட்டாசாய் ஒன்றுமில்லாமல் கிடக்கலாம்...''

''மூஞ்சில வெடிச்சிடப் போகுது - கவனம்.''

''நீ உதவ வேண்டாம், ஜானு... ஆனா இப்படி உபத்திரவப்படுத்தப் போறேன்னா நான்... நான் வேற இடம் பார்த்துப் போயிடறேன்...''

சங்கவி தங்குவதற்கு ஹோட்டல் சக்ராவே அறை தருவதாய்ச் சொல்லியும் கூட, பெற்றவர்களுக்கு அதில் திருப்தி இல்லை. வழக்கம் போல -

'வயசுப் பொண்ணு ஹோட்டல் ரூமில ஒரு மாசம் தங்கறதாவது?' என்ற வசனம்தான். ஜானகியின் பேச்சில் தான் மனம் மாறினார்கள் - அப்படிக் கோவா வந்துவிட்டு, 'நான் கிளம்புகிறேன்,' என்று மூன்றாம் நாளே சொல்வதற்குச் சங்கவிக்கு மனமில்லைதான்... ஆனாலும் அது காவ்யாவின் மேல் அதீதமாய் இளகிக் கிடந்ததே...

''மிரட்டலா? புது ஊருக்கு வந்தவள் போலவா பேசறே? லோக்கல் தாதா டைப்பில் மிரட்டறே?''

''நல்லது செய்யற தாதான்னு வையேன்... சொல்லு, ஜானு... ப்ளீஸ்...''



''எதுவும் செய்துக்கோ... பத்திரமாய் இரு... பழுதில்லாமல் ஊர் போய்ச் சேரு...''

''உத்தரவு, ராணியாரே!''

''ரொம்ப குதிக்க ஆடாதே... அப்புறம் மாமியும் வந்து சேர்ந்து ஆட ஆரம்பிச்சா வம்பு.''

இருவரும் இணைந்து சிரித்தனர்.

அமைத்த எளிய ஆனால் நளினமான அசைவுகளை பலமுறை ஆடிப் பார்த்து, பல நாட்களால் வளையாத உடம்பிற்கு அதைப் பழக்கினாள்.

ஆட ஆட மனசு சற்றுஅடங்கியது. மாலைதோழிகள் இருவரும் கலிங்கோட் கடற்கரைக்குச் சென்றார்கள் - கண்களுக்கு எட்டிய தூரம் வரை தூய வெண்ணிற மணல் - அந்த வெண்மையை மிஞ்சும் நீலக் கடலின் செல்ல அலைகள் - கடலின் மடியில் அமிழத் தொடங்கியிருந்த ஆரஞ்ச் சூரியன்... அத்தனை அழகுமாய்ச் சேர்ந்து அவளை மேலும் அமைதிப் படுத்தின - சங்கவிக்குக் கடவுள் நம்பிக்கை அதிகம்.

இத்தனை அநியாயம் செய்தவனை அவர் சும்மா விட்டுவிடப் போவதில்லை என்ற நிச்சயம்.

தன்னைக் கடவுள்தான் அக்கயவனைத் தண்டிக்கக் கருவி யாகப் பயன்படுத்த நினைத்து விட்டார் என்ற நினைப்பு வேறு...

ஆக எதுவும் தப்பாய்ப் போய் விடாது...

கறுவிய நெஞ்சில் கலக்கமும் இருந்தது.... முதன் முதலாய் அந்தச் சக்ரவர்த்தியைக் கண்டதும் ஏற்பட்ட சிலிர்ப்பு ஞாபகத்திற்கு வந்தது...

தன்னை வருடிய அவன் பார்வை தன்னை மிகவும் பாதித்ததே... எதனால்...?

அங்கிருந்த நூறு பேரில் தன்னை மட்டுமே அவன் அப்படிப் பார்த்தது ஏன்? இல்லை, காரணம் தற்போது புரிந்து... அவளைக் கூசவும் வைத்தது.

ஏனெனில் அவன் ஒரு பொறுக்கி...

பெண்களை வெறித்து வெறி கொள்ளும் பித்தன்!

காவ்யாவுடன் பழகி, அவளைக் கர்ப்பமாக்கிக் கைவிட்ட சூழ்த்தரமானவன். மறுபடி நெஞ்சில் வலித்தது...

அப்படி முறையற்றுப் பழகுபவனா அவன்?

கவர்ச்சியிலும் கண்ணியமாய் அல்லவா தோன்றினான்?

ஆனால் எந்தப் புற்றில் எப்படிப்பட்ட பாம்போ? காக, கவர்ச்சி, கண்ணியமான தோற்றம் எல்லாமே கலந்து தெரிந்த அவனுக்குள் காமப் பாம்புகள் நெளிந்திருப்ப தான கற்பனையில் மறுபடி அவளுக்குச் சிலிர்த்தது...

''என்ன, சவி... குளுருதா?''

''இல்ல, ஜானு...'' அவளை மீறி வடிந்தது ஒரு பெருமூச்சு.

''அந்தக் காவ்யா சரியில்லை...''

பயத்துடன் தோழியை ஏறிட்டாள்.

''அவனைப் பார்த்ததிலிருந்தே நீ சரியில்லை... இத்தனை அற்புதமான சூரிய அஸ்தமனத்தைப் பார்த்துச் சோகப் பெருமூச்சு விடற... அதோடு மட்டும்னால் பரவால்ல... டான்சும் ஆடுவேன்னு....''

''ஒத்தைக் காலில் நிக்கறேனா - இடதுபாதம் தூக்கிஆட, அப்படித்தானே நிற்க நேரும்? அப்புறம் ஜானு... பொருத்தமாய் டிரஸ் வேணுமே...''

''டிரஸ்ஸா?''

''பிறகு ஜீன்ஸ், ஸல்வாரில் மேடைக்குப் போய் ஆடினால்... எடுக்காதே!''



''பின்னே? கச்சையும் சல்லாத் துணியுமாய் ஏறப் போறியா? நோ... நோ...''

''அதெல்லாம் வேணாம்ப்பா...சேலை போதும்.... சற்று மெல்லிசாய்...''

''செக்ஸியாய்?'' உருண்டன ஜானகியின் கண்கள்.

''இல்லை... சஜஸ்ட்டிவ்வாய்... அதாவது இலை மறைவு காயாய்...''

''நான் கௌரவமான டீச்சர்... அப்படிப்பட்ட சேலை யெல்லாம் உடுத்தறதில்லை...''

''ஜானு மாமியிடம்?''

''இருக்கும்... ஒன்பது கெஜத்தை வாங்கிச் சுத்திக்கோ... பார்க்கறவங்க கற்பனையைத் தூண்டி விட்டே உருக்கிடு...''

''போ, ஜானு...ஒரு நல்ல ஷிபான் ஸாரி... தவிர முத்துல ஜிமிக்கி, ஒரு நீள ஆரம்... கொலுசுன்னு...''

'அதெல்லாம் எங்க ஸ்கூல் காஸ்ட்யூம் கப்போர்டில் இருக்கலாம்... ஸாராவிடம் கேட்டு இருக்கறதில் பொருத்தமாய் ஏதேனும் எடுத்திட்டு வர்றேன்...''

''வெள்ளை அல்லது க்ரீம் நிற உடைன்னா புகை போல ஒரு மாயத் தோற்றத்தை ஏற்படுத்தலாம்... கூடவே பூச்சரம் இருந்தாலும் கூட... இங்கே கொத்து ரோஜாக்கள் மட்டுந்தானே கிடைக்குது...''

''ம்ம்... எல்லாத்தையும் சாதிச்சுக்கற....''

''நீ யிருக்க என்ன குறை?''

''ஐஸ் வேற வைக்கப் படிச்சிருக்கே.''

''இல்லைன்னால் காரியம் ஆக மாட்டேங்குதே...'' என்றபடி தோழியைக் கட்டிக் கொண்டாள், சங்கவி.

கடற்காற்றும் பெருகி அவர்களைச் சுற்றி வளைத்தது...

# 5

''ஸ்ஸ்.... ஆ.... மாமி! வலிக்குது...''

''பொறுத்துக்கோடியம்மா... இப்ப என்ன உனக்குப் புதுசாவா மூக்குக் குத்தறேன்? போட்டிருந் தநதைக் கழட்டி சித்த பெரிசாய் ஒன்னை நுழைக்கறேன்.''

''வைர மூக்குத்தி ஆசையில் ரெண்டு வருஷங்களுக்கு முன்னே குத்தினது. பிறகு கழட்டவேயில்லை...''

''போட்டதுதான் போட்டே... ஒரு கடுகு அளவிலாவது போட்டுக்கப்படாதா? குண்டூசி முனையளவில் அப்பப்ப மினுக் மினுக்குங்குது... உன் மாடர்ன் லுக்குக்கு அதுதான் தோது போல...! ஆனா இந்தப் பூ மூக்குத்தி அற்புத டிசைனில்ல?''

சன்னமான தங்கத்தில் சாமந்திப் பூ டிசைனில் எட்டுப் பொடி வைரங்களைப் பரத்தி இதழ்களாய் அமைத்த பழங்கால மூக்குத்தி அது.''

''இது என் பாட்டியோடது... பொடி வைரம்னாலும் என்னா ஜாலமாய் வெட்டுது பார்... ரங்கோன் வைரம், செட்டி நாட்டு ஆசாரியோட திறமை.... எம் பாட்டி பழுத்த சுமங்கலியாப் போய்ச் சேர்ந்தா... ஆக ராசியான நகைதான்...''

பேச்சுத் தந்தபடியே திருகாணியையும் திருகி முடித்த மாமி, சங்கவியை நான்கு அடி தள்ளி வைத்துப் பார்த்தாள் -

''ஈஸ்வரா... உனக்குன்னே செய்தது போலிருக்கேடி பொண்ணே. சௌகார் ஜானகி பாடினது மிகையில்ல -

'எட்டுக் கல்லு பேஸரி போட்டா எடுப்பாயிருக்கும் மூக்கு...'ன்னு எள்ளுப் பூப் போல உன் சின்ன நாசியும்



இதைப் போடவும் எடுப்பாயிடுத்து... போ. அதற்குத் தோதாய் உன் நெற்றிப் பொட்டைக் கொஞ்சம் அகல மாக்கி... ம்ம்... துளி மையும் கண்ணுலிட்டா... பாரேன்...''

தன் சுண்டுவிரலை மைடப்பியில் ஒட்டிய மாமி அதை இவளது விழியின் கீழ்ப்புறத்தில் ஒட்டினாள்.

''இப்பல்லாம் பொண்கள் கண்ணுக்கு மேலாய் ஒரு கோடு இழுக்கறதோட சரி. அதுல இந்த ஜொலிப்பு வருமோ? பாரு...''

கண்ணாடியில் தெரிந்த தன் பிம்பத்தை -

'இது தான்தானா?' என்ற வியப்புடன் பார்த்திருந்தாள் சங்கவி.

''பிறகு தலைமுடியை இப்படி அவிழ்த்துப் பரத்தப் படாது... நேர் வகிடுதான் முகத்துக்கு லட்சணம்... எடுத்து இப்படி வாரிப் பின்னினா... அடடே.... நீ வந்ததுமே அழகுப் பொண்ணுன்னு நினைச்சேன்டிம்மா ஆனா இப்ப நீ பேரழகு போ...''

''இப்ப எங்கம்மா கூட என்னை அடையாளங்காண ஒரு முழு நிமிஷமாகும், மாமி...''

''பான்ட், சூடி எல்லாம் ஆம்பிளைத்தனமான டிரஸ்... தழையச் சேலை கட்டி சூளியான கை நிறைய வளை யலும் அடுக்கினால்...''

''நிச்சயம் அப்படி ஸ்டைலில் உங்களுக்கு ஒரு நாள் உடுத்திக் காட்டிடறேன்... மாமி.''

''முதல்ல உன்னை நீயே அப்படிப் பார்த்துக்கோ... பிறகு இந்த ஸல்வார், ஜீன்ஸைத் தொடவும் மாட்டே...''

''இப்ப இந்த சேலையை எப்படிக் கட்டறது...''

''இது சேலை இல்லடீ... தாவணி. கோபியர் ஆட்டத்திற்குத் தோதாய் ஸ்கூல் காஸ்ட்யூமிற்குத் தைத்தது போல.... க்ரீம் ஸாடின் பாவாடை, ஜமுக்கி வச்ச ரவிக்கை... ஜிகினா தாவணின்னு...''

முக்காடு போலச் சுற்றிய தாவணி, ரவிக்கையில் செருகப்பட்டது. ''நிஜ மல்லிகைப்பூ போலவே இருக்கே மாமி - இந்தச் சரம்?''

''மதுரைக் கட்டு... நாங்கூட இப்படி ஒன்னு வாங்கி வச்சிட்டா பட்டும் பிச்சோடாவுமாய் இங்குள்ள விருந்து விசேஷங்களுக்குப் போறச்ச சூடிக்கலாம்... பூரணமா யிருக்கும்...''

''பாண்டிபஸாரில் கிடைக்கும் மாமி- ரகம் ரகமாய் ஊர் போனதும் உங்களுக்கு வாங்கி அனுப்பறேன்...''

''கலர் குங்குமமும் கிடைச்சால் வேணும்டிம்மா... எங்க பாட்டி எம்.எஸ். ப்ளுவில் பட்டுக் கட்டினா, அந்தக் கால நாலணா சைஸுக்கு அதே நிறத்துல இட்டுப்பா. அவ தாழம்பூச் சருமத்துக்கு அப்படியே கண்ணைப் பிடுங்கும்... வாடாமல்லி கங்கடிக்கும் அதே நிறத்துல குங்குமம். பச்சை ஆரணிக்குப் பச்சைக் குங்குமம்... கையில தங்கத்தோட ஒன்னிரண்டு கண்ணாடி வளைவி... நெளி நெளியான கூந்தலைப் பின்னிக் கொண்டையாய்ச் சுற்றி, அதில் இணுக்குப் பூதான் இருக்கும்.. ஆனாலும் தெய்வமாட்டம் நிற்பா...''

''கேட்க எனக்கே அப்படி டிரஸ் பண்ணிக்க ஆசை வருதே, மாமி... வசதி, நாகரீகம்ன்ற சாக்கில் நமக்கான தனி அழகைத் தொலைச்சுட்டோம்னு படுது....''

''புத்தி வந்திடுத்தோன்னோ... மாறிடு!'' உடுத்தி விட்டபடி சிரித்தாள் மாமி... ''எங்கிட்ட விதவிதமான ஸில்குகளில் புடவை யிருக்கு. சிறு வயசில் டஜன் டஜனாய் வாங்கியடுக்கின கண்ணாடி வளையல்கள் எல்லாம் சீந்துவாரில்லை. எல்லாம் எடுத்துப் போட் டுக்கோ... சமையல், கோலம், அலங்காரம் எல்லாம் பகவான் பெண்களுக்குன்னே தந்த வரம்டி. அதன்மூலம்



ரசனையை வளர்த்துக்கணும் நாம... உலகத்தை அழகு படுத்த வேண்டிய பொறுப்பும் நமக்குத்தான்.''

கழுத்து, காது, கைகளில் மேடைக்கான நகைகள் ஏறித் தகதகக்க, இவளுக்கு வெட்கமானது...

''இதெல்லாம் ஆடறதுக்குப் பத்து நிமிஷம் முன்னே அங்கே போய்ப் போட்டுக்கலாமே, மாமி...''

''இப்ப ஜானு வந்திடுவ... நானும் அவளுந்தான் பாக்கட்டுமே... இன்னைக்குன்னு பேரன்ட் - டீச்சர் மீட்டிங்னு ஸ்கூல்ல இழுத்தடிக்கறா.... உனக்குக் கார் வருதோல்லியோ?''

''ஆமா, மாமி...''

''ஆடி முடிச்சு நீ வந்ததும் உனக்குச் சுத்திப் போடணும்... நாழியாயிடுச்சுன்னா அதை ஜானுவைச் செய்யச் சொல்லிடறேன்...''

''அதெல்லாம் அவசியமில்லை மாமி. நிகழ்ச்சி நல்லா நடக்கணும்னு மட்டும் வேண்டிக்கோங்க...''

''இதென்ன போட்டியா என்ன...சும்மா ஒரு 'குஷிக்குத்தான்!''

''ஆனாலும் பெரியவங்க வாழ்த்து வேணும்...''

படபடக்கும் நெஞ்சுடன் கைகுவித்தாள்.

சிங்காரிப்பில் தான் மோகமூட்டக்கூடிய ஒரு பெண் ணாய் நிற்பது புரிந்தது... இதோடு இசையும், அதற் கொத்த சன்னச் சிங்கார அசைவுகளும் சேர்ந்தால்...

விமான நிலையத்தில் சாதாரண உடையிலிருந்த தன்னையே விழுங்குவதுபோலப் பார்த்தவன் இன்று..?

அவனை முழுக்கச் சாய்க்கத்தான் வேண்டும்.

மோகத்தில் சாய்ந்தவனை விடாமல் கிறக்கவும் வேணும். தேனில் ஒட்டிய ஈயாய் அவனைத் தத்தளிக்கச் செய்து பின் அந்தத் திரவத்தில் அவனை மூழ்கடித்துக் கொல்ல வேணும்!

கண்களுக்கு மேலும் கருமை கூட்டி, இதழ்களைக் கோவைப் பழமாக்கினாள். வந்து, தோழியைச் சர்வ அலங்காரியாகக் கண்ட ஜானகியின் முகம் சற்றுக் கடுத்தது- முகம் கவலையைக் காட்டியது...

''ரொம்ப வசீகரமாய்த் தெரியறே சவி...''

''போச்சு... உடனே பொறாமையா?'' கேலி பேச முயன்றாள் -

''ஜாக்ரதை. இது பெரிய இடம்... பரிச்சயமான ஊரு மில்ல... ஆக நாம ரெட்டிப்பு கவனத்திலிருக்கணும்...''

''நிச்சயமாய். வரட்டா?'' என்றபடி காரில் ஏறிக் கொண்டாள். நிகழ்ச்சிக்கான ஹாலில் போய் இறங்கிய வளுக்கு முதலில் தப்பான இடத்திற்கு வந்து விட் டோமோ என்ற குழப்பம். அதுவரை சீருடைகளில் பார்த் தவர்கள் சகஜமான, சற்று மிடுக்கான உடைகளில் மிக வித்தியாசமாய்த் தோன்றியதே காரணம்.

இவளையும் கண்ட கண்கள் முதலில் விரிந்து பின்பே சகஜமாய்ச் சிரித்தன.

''வாவ்... இங்கு வி.ஐ.பி.க்கள் வருவது சகஜம்தான்... ஆனால் உலக அழகிகள் சொல்லாமல் கொள்ளாமல் வருவதில்லையேன்னு கொஞ்சம் திகைச்சுட்டோம்!''

''ரொம்ப கேலி பண்ணாதீங்க...''

''ரீல் இல்லை, ரியல்! இந்த உடையலங்காரத்தில் 'தேவதாஸ்' படத்தில் வரும் ஐஸ்வர்யாராய் போலவே இருக்கீங்க...''



கூச்சத்தை மறைக்க, ''அதற்கு நான் என் ஒப் பனைக்குத்தான் நன்றி சொல்ல வேணும்!'' என்றாள்.

நிகழ்ச்சிகளைப் பொறுப்பேற்ற அரவிந்தன் வணங்கி வரவேற்றான்.

''ஒப்பனையில் கழுதை குதிரை ஆகிடாதே, சங்கவி. உங்க உயரம், ஒயில், முக அமைப்பு எல்லாம் பார்த்துமே ஆசைப்பட்டேன் - இந்த நடனத்தை நீங்க ஆடறது பொருத்தம்னு... ஆனால் இத்தனை சிரத்தை எடுத்துக் கிட்டதற்கு நன்றி.''

''நீங்களும் உரிமையாய் அழைத்ததற்கு நன்றி. ஒரு மாசம்தானே இவளுக்கு இங்கே வேலைன்னு ஒதுக்காமல்...''

''நன்றி நவிலலை மாறி மாறிச் சொல்லிட்டே போகலாம்.... ஆனா முதல்ல சாப்பிடுங்களேன்...''

ரகம் ரகமான பதார்த்தங்கள் பரப்பப்பட்டிருந்தன. ஸ்பெய்ன், தாய்லாந்து, மெக்ஸிகன், சீனம், இத்தாலி என்று பல நாடுகளின் சுவைகளும் அங்கு கூட்டணி அமைத்திருந்தன. சூடான குலாப்ஜாமூனில் குளுகுளு வென்ற வெனிலா ஐஸ்க்ரீமை இட்டுக் கலந்து சுவைப்பது இவளுக்கு மிகப் பிடிக்கும்.... ஆனால் இன்று நாக்கு மரத்த கட்டை போலிருந்தது.

யோசித்துப் பார்த்தால் எடுத்திருக்கும் முயற்சி மிக நாடகத்தனமானது... ஆபத்தும் கூட...

வெற்றி நிச்சயம் என்று சொல்ல முடியாது...

முதலாளி சக்ரவர்த்தியைக் கவர வேண்டும் என்று விசப்படும் தூண்டிலை அம் மீன் கண்டு கொள்ளாமலே போகலாம்...

கண்டாலும் கவ்வ வேண்டுமென்ற நிர்பந்தமில்லை... உலகம் சுற்றும் அவனுக்கு இவளது அழகு கிள்ளுக்கீரை.

அப்படி இவன் அவனில் கிளர்ச்சியைக் கிளப் பினாலும், அந்தத் தாகத்தை உடனே தணித்துக் கொள்ள முயலுவானே ஒழிய.... இவளது காலைச் சுற்றி வந்து... உதை வாங்கத் தோதாய் நிற்கப் போவதில்லை, அந்தச் சக்ரவர்த்தி!

இப்போது எல்லாமே சிறுபிள்ளைத்தனமாய், வேண்டாத விபரீதமாய்ப் பட்டது...

அரவிந்தன் இவளருகில் வந்து,

''எம்.டி. வந்தாச்சு, சங்கவி.... நீங்க உங்க உணவைப் பக்கத்து ஒப்பனை அறையில் உட்கார்ந்து சாப்பிடுங் களேன்... அவர் உங்களை இப்போதே பார்க்கக்கூடாது... நீங்கதான் நம்ப நாடகத்தின் ஸ்டார் அட்ராக்ஷன்... திடும்னு ஒரு புது முகத்தை... அதுவும் இத்தனை அற்புத முகத்தைப் பார்த்து அவர் இன்ப அதிர்ச்சியாகட்டுமே!'' சொன்னதற்கு இவள் மறுப்புச் சொல்லவில்லை.

சில பாடல்களுக்குப் பிறகு நாடகம் ஆரம்பமானது. மேடையின் பக்கவாட்டிலிருந்து இவளும் அந்த நூதன நாடகத்தை ரசித்தாள்.

அரவிந்த் சமிக்ஞை செய்தான்.

அது தனக்கு என்பது புரிந்த இதயம் எம்பித் துடித்தது. ஆனால் பின் வாங்க வழியில்லை...

ஆழ மூச்செடுத்தவள், மனதுள் நடன அசைவுகளை வரிசைப்படுத்தி ஓடவிட்டாள். அந்த ஹாலில் எழுபது பேர் இருக்கக்கூடும்... திரை மறைவிலிருந்து பார்க்க - முன்னாலிருந்த கனத்த தேக்கு நாற்காலியில் ஒரு அரசனின் கம்பீரத்துடன் அமர்ந்திருந்தவனிடம் சிக்கியது இவள் பார்வை.



கருநீல முழுக்கை சட்டை.... தளர்த்தி விடப்பட்டிருந்த பிஸ்கட் நிறப் பட்டு டை. மேற்புறம் திறந்து விடப் பட்டிருந்த சட்டை வழியே மார்பின் ரோமச் சுருள்கள் எட்டிப் பார்த்தன. கறுப்பு பான்ட் - கண்ணாடியின் பளபளப்புடன் கறுப்பு லெதர் காலணிகள் - நாள் முழுக்க ஒரு முக்கிய கான்ஃபரன்ஸில் கலந்துகொண்ட களைப்பு கூட அவனது முகக் கவர்ச்சியைக் குறைக்கவில்லை....

முகத்தின் இரு கண்களைக் கூர்ந்து ஆராய்ந்தாள். இல்லை, அவற்றில் கள்ளம் கபடமில்லை...

காமம் வழியவில்லை...

பிறகேன் அப்பாவி காவ்யாவை ஏமாற்றினான்?

ஆனால் தோழியே சொன்னாளே - 'நானாய்ப் போய் நின்று ஏமாந்தேன். சவி... யானை தன் தலையில் தானே மண்ணள்ளிப் போட்டாற் போல' என்று...

தன்னையே உலுக்கிக் கொண்டாள்.

இவனுக்காக ஏன் தன் மனம் பரிகின்றது? காலை முன் வைத்தாயிற்று. இனி...

''யுவர் டைம், சங்கவி... அசத்துங்க...''

அரவிந்தனின் குரல் தள்ள, புல்லாங்குழலின் இனிய கசிவுடன் இவள் மேடைக்குள் சுழன்று போனாள்... இணைந்த மிருதங்கத் தட்டலுக்கு ஏற்றபடி அசைய ஆரம்பித்தது அவளது இடை.

## 6

அவளது கண்களின் பிரகாசம் அவனை எரித்தது... தானாமல் தாழ்த்திக் கொண்ட விழிகள் பாராட் டாய் நீண்ட அவனது கைகளில் பதிந்தன.

மிக ஆரோக்கியமும் அழகுமான கைகள்... விரல்கள்.. நகங்கள்

''க்ரேட்...''

இந்தக் கைகள்தானே காவ்யாவிடம் அத்து மீறின...? இப்போது தன்னைப் பாராட்டிக் கைகுலுக்கத் தயாராய்... விரல்கள் நடுங்கக் கைகுவித்தாள் -

''நன்றி...''

''ஓ.... தமிழா? உங்களை இங்கே இதற்கு முன் நான் பார்த்ததே யில்லையே...?'' சுதாரித்துக் கைகூப்பியபடி விசாரித்தான்.

அந்தக் கேள்வியிலிருந்த ஆர்வத்தைக் கவனித்துக் கொண்டாள்.

சின்னப் புன்னகையுடன் மிக மென்னப் பதிலளித்தாள்.

''இங்குள்ள ஒவ்வொரு பணியாளரும் உங்களுக்குத் தெரியக் கூடுமா என்ன?''

இன்னும் அவனைச் சங்கவி நிமிர்ந்து பார்க்கவில்லை... கண்ணோடு கண்ணைப் பொருத்த அவன் தவிப்பது புரிந்தது...

''உங்களைப் போல ஒரு பெண்ணை நான் மிஸ் பண்ணியிருக்கவே முடியாது....''

''நன்றி...'' சின்னத் தலையசைப்பு.

''அது... ஒட்டு மூக்குத்தியா?''

விசித்திரமான அக்கேள்வி அவளை நிமிர வைத்தது...

''ஏன்...? இல்லை... மூக்கு குத்தியிருக்கேன்...''

''ப்யூட்டிஃபுல்...'' சன்னமாய் உச்சரித்தன அவனது உதடுகள்... அது தன் மை விழிகளைப் பார்த்தே என்பது புரிய, முகம் சிவக்க மறுபடி தலை கவிழ்ந்தாள்...



''ரொம்ப காலமாச்சு... அதாவது நாகரீகப் பெண்களை மூக்கு குத்தி பெரிய பொட்டும் பின்னலுமாய்ப் பார்த்து... ரொம்பப் பெண்மையோடு... அற்புதமாயிருக்கிங்க...!''

இவள் விரிக்க வேண்டிய வலையை அவனுடைய வார்த்தைகளே இவளுக்காய்ப் பின்னித் தந்தன.

ஆக அவனுக்குப் பாரம்பரிய உடையலங்காரம் மிகப் பிடிக்கும்.

''எப்ப வேலையில் சேர்ந்தீங்க, சங்கவி...?'' தன் பெயர் அவனுக்குச் சங்கீதம் போலக் கேட்டது.

''என் பெயர்...?''

''கேட்டுத் தெரிஞ்சுகிட்டேன்... மற்றவற்றை உங்களிடம் கேட்கலாம்னு நினைச்சா... நீங்க நிமிரக் கூடயில்லை... ஸாஃப்ட் வாய்ஸ்... ஆனா பிரமிப்பா இருக்கு... சந்தோஷமாயும் கூட... இப்படிக் கூச்சமும் அடக்கமுமாய் ஒரு பெண் இந்த யுகத்தில் இருப்பது... ரிஸப்ஷனில் வேலை பார்க்கறீங்கன்னு நினைக்கறேன்... எப்படி உங்க சுபாவத்திற்குச் சமாளிக்கறீங்க?''

''நான் கம்ப்யூட்டர் ப்ரோக்ராமிங்குக்காக வந்திருக்கேன்... கெஸ்ட் ரிப்போர்ட் என்ற ஸாஃப்ட்வேர்.சேர்ந்து ஆறு நாள்தான் ஆச்சு ஸார்...''

அவள் பேசுவதைக் கேட்க அவன் குனிய வேண்டியிருந்தது... ஆனால் அவன் நெருங்க அவள் பதறி விலகினாள்.

அதுவும் கூட அவனுக்குப் பிடித்திருந்தது போலும் -

தன்னை மருண்டு நோக்கியவளிடம் -

''எனக்கு ஒரு கவிதையை நினைவு படுத்தறீங்க, சங்கவி -

'எத்தனை அழகிய முரண்பாடு! உன் விழிகள் பேசுகின்றன. இதழ்கள் பார்க்கின்றன!'

''சங்க கால நாயகி போல ஒரு பெண்ணைச் சந்திப் பேன்னு... அதுவும் புத்திசாலியான அழகியைச் சந்திப் பேன்னு எதிர்பார்க்கலை. உங்க வீடு..?''

''பக்கத்தில்தான்...''

''கேன் ஐ டிராப் யு?''

''ஐயோ... வேணாம்... நாளைக் காலை உங்களை ஆஃபீஸில் பார்க்கிறேன் ஸார்...''

மறுநாள் காலை குளித்து உடுத்தியவளைப் பார்த்த ஜானகியின் விழிகள் விரிந்தன.

வெண்பட்டு, குங்குமப் பொட்டில் வேலைக்குக் கிளம்புபவளை வேறெப்படிப் பார்ப்பது?

''என்ன மூக்குத்தியைக் கழற்ற வரலியா? பேசாம நான் கொண்டு வந்து தந்ததை வலது பக்கம் போட் டிருக்கலாம். மாமியின் மூக்குத்தியைத் திணித்து, இப்ப அதற்குத் தோதாய் இந்த வேஷம்...'' ஜானகியின் கண்கள் யோசனையாய் இடுங்கின... ''ஒருவேளை நாடகம் இன்னும் தொடருதோ?''

இதற்கும் மேல் தோழியிடம் மறைக்க மனமில்லை.

''சொல்லிடறேன், ஜானு... வா உட்கார்... உனக்கும் சேர்த்துப் பொங்கல் பரிமாறிட்டேன்.''

கொறித்தபடி மொத்தத்தையும் கேட்டாள், ஜானகி.

''எதற்கும் மறுபக்கம் உண்டு, சவி...'' என்றாள் முடிவில். ''சரி, இப்ப இந்தப் புடவைக்கும் சக்ரவர்த் திக்கும் என்ன சம்பந்தம்?''

''புடவைக்குப் பின்னே அவன் மோப்பம் பிடித்துத் திரிந்ததுதான் சம்பந்தம்!'' என்று சொல்ல நினைத்துச் சொல்லாமல் விட்டாள்.



தான் நடனத்திற்காகப் போட்ட வேஷம்... அவனை மிகக் கவர்ந்ததால் அதையே தொடருவதாகவும் சொல்ல வில்லை...

''மடிசஞ்சி போலிருந்தால் நம்மை நெருங்க மாட் டார்ன்னு ஒரு நம்பிக்கை...''

''ஓஹோ... அப்படி ஜாக்ரதையாய் இருக்கறவதான் சிங்காரிச்சுட்டு மேடையில் ஆடினியாக்கும்!''

''முதல்ல காவ்யாவை ஏமாற்றியவனை வீழ்த்தணும்ற ஒரு வெறி... பிறகு அவர் உச்சத்தில் இருக்கும் ஆள்... வீழ்த்துவதை விட்டு விலகிடறதுதான் சரின்னு புரிஞ்சு...''

''நீ சிறு பெண்ணில்லை, சவி... புரிஞ்சு நடந்துக்கோ...''

மிகக் கவனமாய்த் தன் ஒவ்வொரு காயையும் நகர்த்த வேண்டுமென்ற கூர்மையுடன்தான் அன்று சக்ர வர்த்தியின் முன் போய்த் தன் கோப்புகளுடன் நின்றாள். தன் வேலையைத் தெளிவாக்கினாள்.

''புரியுது... இதை எதிர்பார்த்துதான் உங்க நிறுவனத் திற்குச் சம்மதம் தெரிவித்தோம்... அழகும் அதற்கேற்ற அறிவுமான உன்னை அனுப்பியிருப்பதில் ரெட்டை சந்தோஷம்...''

''அறிவு இல்லைன்னா இங்கே வேலைக்கு நான் வந்திருக்கவே முடியாது, ஸார்...''

''உன்னை அப்படி நினைக்க முடியலை, சங்கவி... அதாவது ஒரு ப்ரொஃபஷனல் பெண்ணாக நீ தெரியலை...''

''நீங்க இப்ப ஒரு முதலாளி போலப் பேசலைன்னு படுது...''

மிக மிருதுவாகவே சொன்னாள்.

''புரியுது... நானும் ப்ரொஃபஷனலாய்ப் பேசலை...''

சிறு சங்கோஜத்துடன் புன்னகைத்தவனை வியந்து பார்த்தாள். இரையைப் பிய்த்துக் குதறி உண்ணும் ஒரு புலி போல அவனை உருவகித்திருந்தது ஏனோ பொருந்தவில்லை.

''சில விருந்தினருக்குச் சில எண்கள் ஆகாது... அதை நாம் தெரிந்து வைத்திருப்பது அவசியம். என்ன ரூம் டெம்பரேச்சர் அவர்களுக்கு சௌகர்யம், காலை எழுந்ததும் அவர்கள் பருகுவது காஃபியா அல்லது டீயா... உணவுப் பழக்கங்கள்... அதாவது அவர்கள் சைவமா அல்லவா என்பதிலிருந்து காரம், இனிப்பு எவ்வளவு எப்படிப் பிடிக்கும்ன்றது வரை குறிப்பெடுத்து வைத்துக் கொண்டோமென்றால்...''

''மறுமுறை நம்ப கெஸ்ட் அசந்துதான் போவார்... உன்னைப் பற்றியும் நான் அறியட்டும், சங்கவி... உன் குடும்பம் இருப்பது...?''

''சென்னையில்... அப்பா, அம்மா ஒரு தங்கை..''

''குட்... கோவா பிடிச்சிருக்கா?''

''நான்... அதிகம் வெளியூர் போனதில்லை... அதனால் ரொம்ப வித்யாசமாய்ப் பிடிச்சிருக்குது, ஸார்...''

அவளது கண்கள் மேலும் கனிந்தன -

''அப்ப அனுப்ப யோசிச்சிருப்பாங்களே வீட்டில்?''

''ரொம்ப... ஆனா என் தோழி ஜானு... அவளுக்குத் தெரிஞ்ச மாமின்னு இங்கே இருந்ததால் சம்மதிச்சாங்க... ஆனால் அவங்க பயத்திலும் நியாயமிருக்கே ஸார்.. பசுப் போலத் தெரிபவங்க கூடச் சில விஷயங்களில் புலியாகிப் பாய்ஞ்சுடறாங்களே...''

''உலகம் கொஞ்சம் பொல்லாததும்தான்... ஆனால் இங்கே நீ பாதுகாப்பாய் இருப்பே, சங்கவி...''



சொன்னவனை வஞ்சக ஓநாயாய் உருவகிக்க முயன்றாள். முடியவில்லை.

''ம்ம்... என் ஃபிரெண்ட் ஒருத்தி கோவாவில் இருக்கா... ரொம்ப பயந்த, பண்பான சுபாவம்... ஆனா பெரிய ஆபத்தில் சிக்கிட்டா...''

''ஆபத்துன்னா?''

''வந்து... அவ கர்ப்பமாயிட்டா...''

அவனது முகம் சற்று இறுகியது.

''நீங்க சில மாதங்களாய் இங்கே இல்லை போலவே ஸர்... வேலை நிறையத் தேங்கிடுச்சு போல...''

''ரெண்டரை மாதங்களாய்... இது குடும்பத் தொழில் என்பதால் யாரேனும் மாறி மாறிப் பார்த்துக் கொள்வதால்... சலிப்பதில்லை... ஆனா இனி ஒரு மாசமேனும் இங்கேயே இருப்பதாய் முடிவு செய்துட்டேன்!'' என்ற புன்னகையில் தேடிப் பார்த்தும் பசப்புத் தெரியவில்லை - இளம் பிரியம் மட்டுமே...

''வீட்டில் கல்யாணப் பேச்சை ஆரம்பிச்சிருப்பாங்களே!'' சட்டென அவன் கேட்க, அதை எதிர்பாராத அவள் முகம் சிவந்தது...

''கல்யாணம்ங்கற வார்த்தையிலேயே வெட்கம் கொள்ளும் பெண்ணை நான் இப்பதான் பார்க்கிறேன்...'' என்றான் வியந்து...

'வெட்கம் - காதல் உணவுக்குச் சுவை கூட்டும் உப்பு - மிக அதிகமானாலும் சரி, சற்றுக் குறைந்தாலும் சரி, சுவைக்காது... குளிர்ந்து கிடக்கும் தந்திக் கம்பிகளைச் சூடேற்றி சூடேற்றிச் சுருதி கூட்டுவது வெட்கம்!' போன்று ரசித்து வாசித்த வரிகள் இப்போது அவளுள் ஓடிச் சூடேற்றின.

மெள்ள நிமிர்ந்து, வியந்த அவனது முகத்தைப் பார்த்தவளுக்குள் ஜானுவின் குரல் பாடியது...

'நெஞ்சத்திலே நீ நேற்று வந்தாய்...

நேற்று முதல் ஓர் நினைவு தந்தாய்...'

உள்ளே அச்சம் முளைத்துக் கிளைகளை விரைவாகப் பரப்பியது...

இவளுக்குத் தூண்டில் வீசுவதாய் நினைத்த தான்... அவனது வலையில் விழுந்து கொண்டிருப்பது போன்ற விநோத விதிர்ப்பு...!

## 7

''அடடே... அபாரம்... இங்கே தங்கும் பல விருந்தினருக்குப் பிடித்த பழ, பூ வகைகளையும் கூடப் பதிவு செய்திருக்கிறாயே, சங்கவி... அவர்களை வரவேற்கும் விதமாக அவர்களது அறையில் வைக்கும் மலர் அலங்காரம், பரிமாறும் பழ ரசத்தை அவர்களது நோக்கம் போலச் செய்தால் அக மகிழ்ந்துதான் போவார்கள்...''

''இதற்கு நீங்க மிஸ் மாலினியைத்தான் பாராட்டணும், ஸார்... பல வருடங்களாய் வந்து தங்கும் பல விருந்தினரின் நோக்கம் புரிந்து வைத்தவர், அந்தத் தகவல்களை எனக்கும் தந்து உதவியதற்காய்....''

விளக்கியவளின் கண்கள் அவன் மீது மொய்த்தன. இளம் பிஸ்கட் நிறத்தில் 'போலோ நெக்' எனப்படும் கழுத்து வரை பொத்தான்களே இல்லாது ஏறிய சட்டை - அதே நிறத்தில் பேண்ட் - இடையே மெல்லிய கருப்பு லெதர் பெல்ட்...



இடது கையில் கடிகாரத்தைத் தவிர, அவன் மீது எந்த ஆபரண அலங்காரங்களுமில்லை என்பதை முன்பே கவனித்திருந்தாள். பணம் இருந்தும் அதைப் பகட்டாய் வெளிக்காட்டாத தன்மை. கையில் பணம் புரள ஆரம்பித்ததும் கண்டு விரலிலும் கூட ஒரு பவுன் மோதிரத்தைச் சுற்றிக் கொள்ளும் ஆண்களை அவள் கண்டதுண்டே!

''நல்லது, சங்கவி. விருந்தினர் புக் செய்ததுமே உன் பதிவுகளைப் பார்த்துத் தயாராகிவிட்டால்... பிறகு நம் விருந்தினர் நம் ஹோட்டலைத் தவிர வேறெங்கும் தங்கவே மாட்டாங்க... அபாரமான திட்டம்... வாழ்த்துக்கள்...''

''என் திட்டம் ஒரு சிறு பொறிதான்...'' அடக்கமாய்ச் சொன்னாள்.

''பாஸ்கெட் பால் கேமில் முன்பு கோல் போடும் கூடைக்குக் கீழ்த் திறப்புக் கிடையாதாம்... ஆக, கோல் போடப்பட்டால், ஒரு ஏணியை வைத்து ஏறிப் பந்தை எடுக்க வேணும். சில கில்லாடிகள் ஏணியிலேயே ஏறிக்கூடக் கோல் போடக் கூடும்...''

இவளுக்குத் தாள முடியாமல் சிரிப்பு வந்தது.

''ஆக ஏணியைக் கோலின் அருகேயும் வைக்க முடியாது!'' என்றாள்.

''இப்படி ஏணியும் கையுமாய் அலைந்த ஒருவனுக்குத் தான் பொறி தட்டியதாம் - வலையின் அடிப்புறம் திறப்பாகவே இருந்துவிட்டால் பந்து தானாய் நழுவிக் கீழே விழும் என்று...''

''ஒத்துக்கறேன், ஸார்... சிறு பொறியும் கூடப் பெரிய உபயோகம்தான்!'' சிரித்தபடி வெளியேறினாள்.

மதிய உணவினைத் தட்டில் பரிமாறிக் கொண்டு, ஓரளவு பரிச்சயமான பமீலாவின் அருகே உட்கார்ந்தவள், பேச்சை அங்கும் இங்குமாய்ச் சுற்றி மூக்கைத் தொட்டாள்.

பமீலாவின் புருவங்கள் உயர்ந்தன.

''நம்ப பாஸைப் பத்தியா கேட்கறே? தானுண்டு தன் வேலையுண்டுன்ற ரகம் அவர். அதே சமயம் நம்மோடு இலகுவாயும் பழகுவார்... நம்ப ஸ்டாஃப் கெட்-டு கதருக்கு ஸீனியரை அழைத்திருந்தால் - வந்து அரை கப் காஃபியைச் சிப்பியபடி நின்றுவிட்டுப் போய் விடுவார். இளையவர் முழுக்க இருந்து புரோக்ராமைப் பார்த்துப் பாராட்டினாரே...!''

ஆக நல்ல பெயரைச் சம்பாதித்திருக்கிறான் - காவ்யாவை இக்கட்டில் மாட்டி விட்ட ஸ்த்ரீ லோலனைப் பிறர் இப்படி நல்லபடி பேசுவது புதிராய்த்தான் இருந்தது.

விருந்தாளிகள் நிரப்பித் தர வேண்டிய ஒரு கேள்வித் தாளையும் இவள் உருவாக்கிக் கொண்டிருந்தாள் - இதையும் வருபவர்கள் நிரப்பித் தந்து விட்டால், அவர்களின் தேவைகளைச் சிறு குறையுமின்றி நிறைவேற்றி விடலாம் என்ற அளவிற்கு யோசித்து யோசித்துக் கேள்விகளை அமைத்தாள்.

அதற்கு அரவிந்தனின் உதவியும் தேவைப்பட்டது.

''மிஸ்டர் அரவிந்த்! இங்குள்ள அறைகளின் அமைப்பை நான் ஒரு முறை சுற்றிப் பார்த்து விட்டால் அது பற்றிய குறிப்போடு விருந்தினர் விருப்பம் அறிய உதவும்... அதாவது அவர்களுக்கு ஸ்விம்மிங் பூல் அருகேயுள்ள அறை பிடிக்குமா என்பது போல...''

''ரைட்... சிலர் வாசல் பக்கம் உள்ள காட்டேஜ்களே பசதின்னுவாங்க... பலருக்குக் கடற்கரையைப் பார்த்தபடி ...ள்ள அறைகள் எ மஸ்ட்...''



''அதேதான்... ஒரு தரம் நானும் சுற்றிப் பார்த்தாக்கன்னா...''

''வொய் நாட்?''

ஆனால் சில ஏக்கர் பரப்பில் வெவ்வேறு கோணங்களில் நின்ற அறைகள், குடில்களைப் பார்வையிட்ட பின் இவளுக்குத் தொண்டை உலர்ந்து போனது...

இரு கோப்பைத் தேநீரேனும் குடித்தால்தான் உயிர் மீளும் என்று துவண்டவளை இன்டர்காம் மூலம் சக்ரவர்த்தி அழைத்தான்.

ஒரு குவளை தண்ணீரைப் பருகிவிட்டு ஓடியவளை அவனது கண்கள் கரிசனையுடன் பார்த்தன.

''அலைச்சலா?''

''ஆமா, ஸார்..''

''முதல்ல உட்கார் - இந்த ஃப்ளாஸ்க்கில் டீ இருக்கு... இதில் பிஸ்கட்.''

பிகு இன்றி ஊற்றிக் கொண்டாள்.

''ஸார்... உங்களுக்கு?''

''யெஸ் ப்ளீஸ்.''

முதல் கோப்பையைக் குடித்துக் கூச்சமின்றி மேலும் ஒரு கோப்பை ஊற்றிக் கொண்டவள் -

''நன்றி ஸார்... ஆனால் எல்லாரிடமும் நீங்க இத்தனை இதமாய்ப் பழகுவீங்கன்னு...''

''இல்லைதான்.... ஆனால் நம் உடல் சார்ந்த வாழ்விற்குத் தண்ணீர் அடிப்படைத் தேவை என்பது போல, மனதிற்கான தேவைகளும் உண்டு... இப்படி நம் மனதுக்கு உகந்தவர்களோடு பழகுவதும் தேவைதான்... இல்லையா?''

இவள் ஏதும் பேசவில்லை.

''அலட்டலே இல்லாத உன் சுபாவம், கல்வி பற்றியும் கர்வமில்லாமல், முக்கியமாய் உன் அழகு... அதைப் பகட்டாய் இல்லாமல் பழமை கலந்து பரிமளிக்க வைக்கும் விதம்... எல்லாம் எனக்கு இதமாய்ப் படுகின்றன... தவிர முன்பே உன்னைப் பார்த்திருக்கிறேனோ என்றும் ஒரு சந்தேகம்...''

''ஸாரி ஸர்... பூர்வ ஜென்ம நினைப்புகளில் எனக்கு நம்பிக்கை இல்லை...'' சிரிக்க முயன்றாள் -

ஆனால் தன்னில் முதல் முறையே அவன் பதிந்தது போல, அவனும் தன்னைப் பதிவு செய்திருந்தானோ?

''குங்குமமும் மூக்குத்தியுமாய்.... இதெல்லாம் இப்ப மிக அபூர்வமில்லையா... எங்க அம்மாகூட இப்படித்தான்...''

''ஓ... எங்கே இருக்காங்க?''

''போட்டோவில் மட்டுமே பார்த்திருக்கேன்... அவங்களைப் பார்த்து வளரும் பாக்கியம் எனக்கில்லை...''

இவளது மனம் மீண்டும் அவனுக்காய் இளகத் துவங்கியது...

''மாமி மோர்க்குழம்புக்கு இவ்வளவு தேங்காய்த் துருவல் போதுமா?''

''போதும்டீம்மா - அரைச்சு விட்டாச்சன்னா எல்லாம் ரெடி... எப்ப வருவா உன் காவ்யா?''

''ஒரு மணிக்குள்ளே வந்துடறேன்னா, மாமி... இங்கே வந்து ரொம்பக் கஷ்டப்பட்டுட்டா...''

''நான் வாயே திறக்கலம்மா - தாய் தகப்பனில்லாதவோ... பட்ட சிரமத்துக்கு எம் மோர்க் குழம்பு பரிகாரமா இருக்கட்டும்... நான் ஏதுங் கேட்டு அந்தக் குழந்தையைக் கொடையலை...''



''நல்லது மாமி...''

வந்த காவ்யாவின் முகம் முன்பை விட வற்றித் தெரிந்திருந்தது.

''ரெண்டு கிலோ குறைஞ்சிருப்பே போல...''

காவ்யா கூச்சத்துடன் புன்னகைத்தாள்.

''மூலிகைத் தேநீர்னு பக்கத்துக் கடையில் கிடைக்குது... அதை அடிக்கடி குடிக்க உடம்பின் நச்செல்லாம் போய், பேய்ப்பசி கூடக் குறைஞ்சிடுச்சு சவி...''

''ஸாரிப்பா - உனக்காக மோர்க் குழம்பெல்லாம் தயாராக்கின பிறகு ஹோட்டலிலிருந்து கார் வந்தது... கிரிஸ்னு ஒரு ஆஸ்திரிலேயத் தம்பதி என் வேலையில் ஈடுபாடு கொண்டிருப்பதாய்ச் சொல்ல, போய்ப் பேசிட்டு வர வேண்டியதாயிடுச்சு.''

''நோ பிராப்ளம் - ஜானகி அத்தனை பிரியமாய் என்னோட பேசிட்டிருந்தா - மாமி வேற தேன்குழல், மோர்னு... அன்பான உபசரிப்பு...''

பேச்சும் சிரிப்புமாய்ச் சேர்ந்து சாப்பிட்டு, சற்றுப் படுத்தும் எழ, ஜானகி கேட்டாள்.

''பீச்ல ஒரு நடை போடலாமா?''

சங்கவிக்குத் 'திக்'கென்றது - காவ்யாவுடன் தான் நடை போடுவதைத் தன் முதலாளி பார்க்க நேர்ந்தால்... தான் நடத்திக் கொண்டிருக்கும் நாடகத்திற்குப் பெரிய திரையாகப் போட்டு விட வேண்டியதுதான்... தவிர தன் மூக்குத்தி, பட்டுப் புடவைத் தோற்றம் பற்றி வேறு காவ்யாவிடம் வேறு சரடைத் திரித்து விட்டிருந்தாள்.

''மாமிக்குப் பெண் பிறக்கலையே... அவங்க ஏக்கத்தைப் போக்க அவங்க ஆசைக்கு இப்படி வகைவகையாய் உடுத்திக் காட்டறேன்!'' என்று.

ஆனால் தன் புளுகெல்லாம் எப்போது பல்லைக் காட்டுமோ என்று உள்ளே பிராண்டியது.

காவ்யாவும் நடக்க ஆர்வங் காட்டியதால் மறுக்க முடியாமல் கடலோரமாய் நடக்கலானார்கள்.

''மெரீனா போல இங்கே தேங்காய் மாங்காய் கலந்த சுண்டல் கிடைக்காது - வெறும் வறுத்த மீன்தான்...''

''அதாவது மாமி பாஷையில் கார அல்வா!''

''பாவமில்ல, அவங்க...! பெண்ணில்லாத ஏக்கத்துல சவியை இப்படி அலங்காரம் செய்து ரசித்து..''

'ஓஹோ! அப்படி விட்டிருக்கிறாயா கதையை!' என்றது ஜானகியின் பார்வை.

இவள் புரியாதது போல வெண்மணலில் இளம் வெயிலில் காய்ந்து கொண்டிருந்த அயல் தேசத்து ஜோடிகளைப் பார்த்திருந்தாள் -

''யாருமே குடும்பமாய் வரலை, கவனிச்சியா... ஜோடிகள் மட்டும்தான்!'' அது உண்மைதான். இங்கே போலத் தாய் தந்தையின் கைகளைப் பற்றி, நடுவே தொங்கும் சுட்டிகள், பெரியவர்கள் கூப்பிடக் கூப்பிட அலைகளை நோக்கித் திமிறி ஓடும் வாண்டுகள் ஒருவரும் இல்லை... இளவயது, நடுத்தரம், முதிர்ந்த என்று எந்தப் பருவத்திலும் ஜோடிகள் மட்டுமே... ஒருவருக்கு ஒருவர் சூர்யக் கதிர்களிலிருந்து பாதுகாக்கும் லோஷனைத் தடவியபடி... அல்லது மல்லாந்த மோனத்தில்...

அத்தேசத்தின் பழக்க வழக்கப் பண்பாடு வேறு.

இந்தக் கலாச்சாரத்தைக் கண்டு பழகியவனுக்கு, வலிய விரும்பி வரும் பெண்ணோடு பழகி... அவள் கர்ப்பமானதும் உதறி விடுவது தப்பாய்த் தெரியவில்லையோ? கவனமாய் இருக்க அறியாத பெண் என்று முகம் சுழித்திருப்பானோ? தாயற்ற வளர்ப்பு வேறு...



''இன்று எங்க பள்ளியில் எட்கூ போட்டி.''

''அதென்ன... கேம்?''

''கவிதைடி மண்டு. ஹைக்கூ போல. ஆனால் சமகால நிகழ்வை விமர்சிக்கும் மூன்றே வரிகள் - மாதிரிக்கு ஒரு பிரபல எட்கூவைச் சொல்றேனே -

'நான் இந்தியனாக

வாழவே விரும்புகிறேன்.

சிலிக்கான் வேலியில்...'

தன் எண்ண ஓட்டத்தை இக் கவிதையில் கண்டாள் சங்கவி. சக்ரவர்த்தி இருப்பது இந்தியாவில் என்றாலும், அவனுள் மேற்கத்தியப் பாதிப்புகள் என்பது போல...

''காவிரி அணை திறக்கப்

பேச்சு வார்த்தை!

மனசு திறக்கவில்லை!''

காவ்யா சொன்ன வரிகளை ரசித்துக் கைதட்டினார்கள் மற்ற இருவரும் - ''வாவ்... அபாரக் கற்பனைத் திறன்.''

''இதுவும் நான் வாசித்து ரசித்ததுதான்... சவி. உன்னிடம் நான் இதையே சொல்ல விரும்பறேன்...''

''எதை?''

''ஜானகியிடம் நீ சொன்னியாம்... அவரை... அதான் சக்ரா ஹோட்டலின் எம்.டி.யைச் சந்தித்து, பேசி, அவர் தவறை உணர வைக்கப் போவதாய்...''

ஜானகியைக் கடுமையாய் முறைத்த சங்கவி அடுத்துத் தோழியிடம் மன்னிப்பும் கோரினாள் -

''மன்னிச்சிடு, காவ்யா... உன்னைப் பற்றி எதையும் நான் ஜானுட்ட சொல்லியிருக்கக் கூடாதுதான்...''

''நானேதான்... அந்த.... அதாவது நான் அவரிடம் ஏமாந்த பேச்சை எடுத்தேன்... நீ வர நேரமானதால் பேசினதில் மனம் திறந்து...'

''மாமியிடம்...?''

''இல்லை.... ஏதும் சொல்லலை... தவிர அவர் வெளிநாட்டில் இருக்கார் - உன் வேலை இன்னும் ரெண்டு, மூணு வாரங்களில் முடிஞ்சிடும்... ஆக உனக்கு அவரைப் பார்க்கக் கூடச் சந்தர்ப்பம் அமையாது...''

ஆக ஜானகி முட்டாள்தனமாய் அத்தனையும் கொட்டிக் கவிழ்க்கவில்லை... ஆறுதலாய் ஏதோ பேசினதோடு சரி... தான் சக்ரவர்த்தியின் முன் மோகன அலங்காரத்தில் ஆடியது, பேசிப் பழகுவது எதையும் இந்த அபலை, அப்பாவியிடம் போட்டுக் கொடுக்க வில்லை...''

''சரி காவ்யா... நீ சொல்றபடியேதான்...'' மணலைத் தட்டி விட்டபடி நடந்தாள் -

தன் காதலன் இப்போது மற்றவளிடம் குழைந்து கனிவது தெரிய வந்தால் துடித்தல்லவா போவாள்.... வழக்கமாய்க் கடற்காற்றில் லேசாகும் மனம் இன்று மிகக் கனத்தது...!

## 8

'**கா**தல் என்பது மணல் கடிகாரம் போன்றது - நெஞ்சு நிரம்ப நிரம்ப மூளை காலியாகிறது!' என்ற காதல் மொழி சற்றும் மிகையில்லை.

இவள்தான் அதை அனுபவித்துக் கொண்டிருக்கிறாளே! இல்லையெனில் முதலாளியின் அழைப்பை ஏற்று இப்படி உணவகம் ஒன்றிற்கு அவனோடு தனித்துப் போவானேன்?



அது ஒன்றும் அவனது முதல் அழைப்பல்ல...

ஒவ்வொரு முறையும் வெவ்வேறு காரணங்களைச் சொல்லித் தவிர்த்தாள்.

'ல்ல... அம்மா ஃபோன் பண்றேன்னாங்க.''

'அப்பாக்குக் காய்ச்சல்... எனக்கு மனசு சரியில்லை, ஸர்...'

'மாமிக்குப் பிடிக்காது - சமைச்சு வச்சது வீணாகுதுன்னு வருத்தப்படுவாங்க...' இப்படி ஏதேனும் சொல்லி நழுவியிருக்கிறாள்.

அவனும் வற்புறுத்தவில்லை.

உறுமீன் போலத் தகுந்த சந்தர்ப்பத்திற்காகக் காத்திருந்தானோ? இம்முறையும் ஒரு சால்ஜாப்பை யோசித்துச் சொல்லியிருக்கலாம் - அது அவளது மூளைக்கு ஒரு பெரிய சவாலே அல்ல.

ஆனால் சம்மதித்து விட்டாள்... காரணம் மனதின் வலிமைக் குறைவு...

சலனம்... அவனோடு பேசிப் பழகப் பழகத் தானும் அவனில் தேனில் விழுந்த ஈ போல ஒட்டிக் கிடப்பது புரிந்தும்.... அதைத் தடுக்க முடியாத தடுமாற்றம்.

ஜானகி சொன்ன சில வார்த்தைகள் அந்தத் தடுமாற்றத்திற்கு உரம் சேர்த்தன.

'காவ்யா பாவம்தான்... ஆனால் அவனோ சக்ரவர்த்தி தன்னைக் கெடுத்ததாய், ஏமாற்றியதாய்ச் சொல்லவில்லையே... தானாய்ப் போய் அழிந்ததாய்த்தானே புலம்பினாள்? ஆக எதற்கும் ஒரு மறுபக்கம் உண்டு, சவி... ஆக உன் நாடகம் முட்டாள்தனம்... வந்த வேலையை முடிச்சிட்டு ஊருக்குப் போ...'

ஆனால் இவன் போனதெல்லாம் தன் முதலாளியுடன் 'ராண்ந்தேஷு' எனும் பிரெஞ்ச் உணவகத்திற்குத்தான். முழுவதும் இளம் பச்சையும் நீலமுமான அதன் நிற அமைப்பு, கடலுக்குள்ளேயே வந்து உட்கார்ந்திருப்பது போன்ற ஒரு பிரமிப்பைத் தந்தது - சுவர்களில் சங்கும் சிப்பியும், விசித்திரமான கடல் ஜந்துக்களின் சிற்பங் களுமாய்...

அத்தனையையும் ரசிப்புடன் பார்த்திருந்தாள் - அவன் பார்வை தன்னில் மட்டுமே நிலைத்திருப்பது உணர்ந்து, கூச்சத்துடன் தலை கவிழ்ந்தாள் -

''இதன் அலங்காரம் அறிந்தேதான் நீ உன் அலங் காரத்தைச் செய்து கொண்டாயா சங்கவி?''

''இப்ப... இப்பதான் முதல் முறையாய் இங்கே வர்றேன்...'' சிறு நீலப் புள்ளிகளிட்ட தன் வெண்ணிற ஜார் ஜெட்டையும் சிறு குழப்பத்தோடு பார்த்தாள்.

''நீலக்கடலின் அபூர்வ முத்து போலத் தெரியறே...''

''பச்சை வயலில் நிற்கும் கொக்காய்க் கூடத் தெரியலாம்...''

''நீ சற்று உயரம்தான் என்றாலும் அதற்கேற்ற நளினம்.... ஆக அன்னம்னு சொல்லலாமே தவிர கொக்கில்லை...'' வாய்விட்டுச் சிரித்தவனை ஆர்வமுடன் பார்த்திருந்தாள்.

'நெருப்பு சுடும் என்று தெரிந்திருப்பது அறிவு. தீக்குள் விரலை வைத்தல் அனுபவம். அதைத் 'தீண்டும் இன்ப மாகக் காண்பது ஞானம்!' இவன் நெருப்பு என்பதைத் ,தெரிந்து கொண்டாயிற்று. இதோ இப்படி ஒன்றாக உட்கார்ந்து பேசிச் சிரிப்பது தீக்குள் விரலை வைக்கும் அனுபவம்...

அந்த அனுபவம் அவளைச் சுட்டுப் பொசுக்கிப் பதறச் செய்யாமல் இன்புறச் செய்வதுதான் ஞானமற்றதாய்ப் படுகின்றது!



அத்தனையும் மறந்து இவனோடு பேசியபடியே இருந்து விடலாம், இவனது பாராட்டில் மயங்கியே கிடக்கலாம் என்ற மயக்கத்திலிருந்து எப்படி மீள்வது?

இளநீலச் சட்டையில் மழுமழுவென்று மழித்த ஆரோக்கியமான சருமத்துடன் தன் முன் பிரியமான புன்னகையுடன் உட்கார்ந்திருப்பவன்தான், தன் தோழி காவ்யாவைக் கர்ப்பமாக்கிப் பின் கைகழுவியவன் என்பதைச் சதா நினைத்திருக்க வேணும்.

அதே ஆங்காரத்துடன் அவனை மயக்கி, அவன் மல்லாந்து கிடக்கையில் நடுநெஞ்சில் கத்தியாய் வார்த்தைகளைச் செருக வேணும்...

'மன்னிக்கனும், மிஸ்டர் சக்ரவர்த்தி... ஏதோ அன்பும் அனுசரணையுமாய் உங்களிடம் பழக வேறு யாருமில்லை என்று சொன்னதால் நானும் பழகியது உண்மைதான்... ஆனால் உங்களைக் கல்யாணம் செய்து கொள்ளும் எண்ணமெல்லாம் துளியும் கிடையாது... என் திருமணம் எங்கம்மா அப்பாவின் பொறுப்பு...' என்று எடுத்தெறிந்து அவனை வீச வேணும்...!

ஆனால் அவன் 'கல்யாணம்' என்ற பேச்சுக்கே போகாமல், வெறுமே 'கட்டிலுக்கு வா' என்றால்...?

தன் எண்ணங்களில் அமிழ்ந்திருந்தவளை அவனது விரல்கள் சொடக்கிட்டு எழுப்பின.

''எ பென்னி ஃபார் யுயர் தாட்ஸ் - மேலைநாட்டில் அடிக்கடி பயன்படுத்தும் வாக்கியம் இது - கேள்விப்பட் டிருப்பியே... உன் நினைப்பு உண்மையாகட்டும் என்பது போல...''

''நோ...வேணாம்...''

''ஏன் பதறுறே? அப்படி மோசமாய் என்ன கற்பனை?''

குறும்பாய் வளைந்தன அவனது உதடுகள்.

'நீ என்னைக் கட்டிலுக்கு... கட்டிக் கொள்ள மட்டுமே கூப்பிடுவது போலக் கற்பனை செய்தேன்!' என்று சொல்லக் கூடுமா?

சிவந்த கன்னங்களுடன் குனிந்து சமாளித்தாள்.

"நீ காதலை உணர்ந்ததுண்டா, சங்கவி...?"

இவள் நிமிரவேயில்லை.

"ஓ... நீ ரொம்பக் கூச்ச சுபாவி, இல்லையா? நான் என்னைப் பத்திச் சொல்லவா? நான் காதலில் விழுந்து எழுந்தவன்னு இதுவரை நினைச்சிட்டிருந்தேன்... ஆனா இப்பதான் புரியுது... அது காதலில்லை. பருவ வயதில் ஏற்படும் ஈர்ப்பு... அவ்வளவுதான்."

"அந்தப் பெண்?" தடுமாறினாலும் கேட்டாள்.

"அது நேர்ந்தது என் கல்லூரி நாட்களில்... எனக்கு அப்ப இருபத்தோரு வயசு.... அழகான சின்னப் பொம்மைப் போலிருந்த மஞ்சுளா ரொம்பச் சலனப்படுத்திட்டா... காலை கண் விழிச்சதும் மனசும் அவ நினைப்பில் விழிச்சுக்கும்... அவளுக்கு என்ன பிடிக்கும்... எதெல்லாம் பிடிக்காது என்றே மனசு சக்கரமாய்ச் சுழலும்... ஆனால் காட்டுத் தீ போல எப்படி ஆரம்பித்ததோ அப்படியே அந்த வெப்பம் அதே வேகத்தில் அணைஞ்சும் போச்சு... இப்போது... எனக்குள் நிதானமாய் முத்துச் சுடர் போல ஒளி வீசுவது... அப்படி அணைஞ்சுடாதுன்னு புரியுது..."

ஏன் இப்படி எல்லாம் தன்னிடம் பேசுகிறார்?

தொண்டை இறுகியது... கவிதை போல இவர் சொல்வதில்... காவ்யாவைப் பற்றி ஏதுமில்லையே... அப்படியானால், பாவம்! அவள் கணக்கிலேயே வரவில்லையா?



இப்போது முத்துச் சுடராய் நெஞ்சுள் ஒளி சேர்ப்பது தானா?

திகைப்பைக் காட்ட விரும்பாமல் சகஜமாகவே பேச்சைத் தொடர்ந்தாள் -

"இப்ப... அவங்க... அந்த மஞ்சுளா?"

"கல்யாணமாகிக் குழந்தையும் பெத்துகிட்டதாய்க் கேள்வி."

"நீங்க ஏன் இன்னும் திருமணம் செய்துக்கலை...?"

"வேலை என்னை முழுசாய்த் தனக்குள் சுருட்டி வைத்திருந்தது - தவிர என்னை முழுக்கக் கவர்ந்த பெண்ணையும் சந்திக்கலை, இல்லையா?"

இன்றும் என்ன சாப்பிட்டோம் என்ற உணர்வோ, நினைவோ இல்லை அவளுக்கு... மேலும் இதே பாணியில் பேச்சைத் தொடருவது ஆபத்து என்பது புரிய விரல்களை நாப்கினில் துடைத்தபடி கேட்டாள் -

"நேரமாச்சில்லையா?"

"என்ன - மாமி காத்திண்டிருப்பாங்களா?"

கேலியாய்க் கேட்டான்.

"இல்லை, ஆபிஸில் ஒன்னரை மணி நேர பர்மிஷன் தான் வாங்கியிருக்கேன்."

கரும் பச்சையில் அரக்கு கோபி டிசைன் தெளித்த பழங்கால ஆரணிப் பட்டு. அரக்குச் சாந்து கொண்டு கச்சிதமாய்த் தீட்டிய கோபி. நெற்றியில் வலதுகையில் வளையல்களை அடுக்குவது வேலைக்கு இடையூறு என்பதால், அரக்குப் பட்டு வளையல்களை இடக்கையில் அடுக்கியிருந்தவளின் மறுகையில் சன்னக் கடிகாரம் மட்டுமே.

தன்னையே விழுங்கி விடுவது போலப் பார்த்த சக்ரவர்த்தியை உணராததுபோலக் கருமமே கண்ணாய்ப் பேசினாள்.

'''கொஸ்டினியர்' ஏறக்குறைய தயார் ஸார், ஒரு தரம் சரி பார்த்துடறீங்களா?''

சன்னமான குரலில் கேட்டபடி, பணிவாகவே தானே நீட்டினாள். அவளது கவனம் சற்றுச் சிரமத்துடனேயே தாளில் பதிந்ததைக் கவனித்தவனுக்கு இப்போது ஏனோ கர்வமாய், களிப்பாய் இல்லை... தன் மீதே கசப்பு எழுந்தது...

''குட், நம் விருந்தினரின் பிறந்த நாள், கல்யாண நாள் கூடக் குறிப்பிடக் கேட்டிருக்கிறாய்...''

''யெஸ் ஸர். ஒரு வேளை அவை அவர்கள் நம்மோடு தங்கும் சமயமாய் வாய்த்தால் ஒரு கேக் அல்லது மலர்க் கொத்து தந்து வாழ்த்தலாம். ஒவ்வொருவருக்கும் உலகில் மிக இனிமையானது தங்களின் பெயர்... தவிர அவர்களின் பிறந்த நாள் போன்றவற்றை நாம் நினைவு வைத்திருந்தால்...''

''உருகித்தான் போவார்கள். தவிர ஒவ்வொருவரும் தன்னை ஒரு நவாப் போல உணர வைக்கலாம்!'' இப்போது இருவரது கண்களும் ஒன்றையொன்று பார்த்துப் பின் சிரித்தன.

இருவருக்குமே நேற்றைய பேச்சு நினைவு வந்தது தான் காரணம். மதிய உணவிற்கு அவளைக் கூட்டிச் சென்றான். சங்கவி -

'எனக்கு வொர்க்- லஞ்ச் போதும் ஸர்... ச்சீஸ் சாண்ட்விச் அண்ட் காஃபி,' எனத் தீர்க்கமாய் மறுத்தாள்.

'நோ நோ... வரும் முன்னே நான் நமக்கான லஞ்ச்சை ஃபோனில் ஆர்டர் பண்ணிட்டேன். லாப்ஸ்டர் ஸூப், ஃப்ரைட் நூடில்ஸ், ப்ரான் வறுவல், மயோனிஸ் சாலட்.... இதெல்லாம் இங்கே அற்புதமாய்த் தயாரிப்பாங்க...'



'ஆக நான் அதைத்தான் சாப்பிடணும்னு முடிவு பண்ணிட்டீங்க.'

'ஏன் - அதிலென்ன தப்பு... அதற்காகத்தானே உன்னை இங்கே அழைத்து வந்தேன்?'

'சமீபத்தில் ஒரு கட்டுரை வாசிச்சேன் - 'இந்திய நவாப்ஸ்'ன்னு.

'அவங்களின் ஆட்சிக் காலம்தான்...'

'இன்னும் நடந்துட்டு இருக்குது ஸர்...' என்றாள் ஒரு குறுஞ்சிரிப்புடன். 'இங்கே ஒவ்வொரு ஆணும் தன்னை ஒரு நவாபாய் எண்ணித் தர்பார் நடத்தறாங்க என்றது ஒரு கருத்துக் கணிப்பு... பெண் நயமாய்ப் பதமாய்ப் பேசிப் பழகுவது அவளின் குணாம்சம்... அதையே தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு அவளுக்கென்று எந்த விருப்பும் வெறுப்பும் இல்லாதது போல ஆண் ராஜாங்கம்...'

'ஒரு சிறு திருத்தம் - சர்வாதிகாரத்தனம் செய்வது சகிக்கத்தான் முடியவில்லை....'

அவனை மட்டம் தட்ட நினைத்தவள் ஆரம்பித்த பேச்சு, சரசமாகிச் சிரிப்பில்தான் முடிந்தது -

இப்போது மறுபடி நினைத்து இருவரும் இணைந்து சிரிக்குமளவில்... தன் நாடகம் சரியான திசையில் நகரவில்லை என்பதை மறுபடி புதுப் பயத்துடன் உணர்ந்தாள் சங்கவி.

## 9

மூன்றே வார்த்தைகள்தான் -

அதில் அரிய உண்மையை

அடைத்து விட்டார்களே நம் முன்

னோர்கள் -

'கெடுவான் கேடு நினைப்பான்!' தன் தோழிக்கு நன்மை செய்வதான நினைப்பில் தான் கெட்டுக் கொண்டிருப்பது புரிந்தது...

ஒருவனை விழ வைப்பதற்காகத் தன் அழகு, அறிவு, நடிப்பாற்றலைப் பயன்படுத்தித் தான் தோண்ட ஆரம்பித்த பெரிய குழிக்குள் இப்போது தானே விழுந்த அவல நிலை!

பிறரை நியாயம் தீர்க்க நீ யார்?

உனக்கந்த உரிமையை யார் தந்தது - என்று கடவுளே கற்றுத் தந்த படிப்பினை இது போலும்.

நேற்றிரவு இவளை அலைக்கழித்த கனவுகள் அத்தனையும் கேடானவை! கால்வாசிக்கும் குறைந்த உடையில் இவளிருக்க, சுற்றிலும் நாக்கை நீட்டி இவளை முத்தமிட முயலும் சர்ப்பங்கள்...

மறுபடி மறுபடி விடாமல் தொடர்ந்த பாம்புகள் இவளைச் சுற்றி வளைத்து, பின்னி, ஊர்ந்து வெல வெலக்க வைத்ததில் மறுநாள் அலுவலகம் போனதும் இவள் கணினியில் தேடி மேய்ந்த தளம் -

'கனவுகளும் காரணங்களும்'தான். பாம்பு பாலுணர்வோடு தொடர்பு படுத்தப்பட்டிருக்க... குறுகிப் போனாள்... கூடவே பயமும் சேர்ந்தது.

ஆகச் சக்ரவர்த்திக்குக் குழி வெட்டுகிறேன் என்று ஆரம்பித்தபோது கிளர்ந்த வெறுப்பும் வெறி உணர்வும் இப்போது இல்லை... இப்போது எஞ்சியிருப்பது விருப்பமும்... வேண்டாத சபலக் கனவுகளுமே.

கனவிற்கான காரணம் பொய்யுமல்ல... உடுத்தும் போது, பொருத்தமாய்ப் பொட்டிடும் நேரம், வளையலும் மையுமாய் அலங்கரிக்கும் சமயமெல்லாம் இது அவருக்குப் பிடிக்குமா என்ற பரிதவிப்பு...



அவனது கண் முன்பு போய் நிற்கத் துடிக்கும் ஆவல். அவனைப் பார்த்ததும் கண்ணை விலக்க முடியாத ஆர்வம்... கண் நிறையப் பார்த்து அவனை அப்படியே நெஞ்சில் தேக்கிய பின்பு அவனது உடை, பேச்சு, புன்னகை, பாவனை... அசைவுகள் ஒவ்வொன்றையும் எடுத்து மறுபடி மெல்லும் கற்பனைச் சுகம்...

வீராப்புடன் கிளம்பிய தன்னையே சக்ரவர்த்தியின் கவர்ச்சி இப்படிச் சாய்க்க முடியுமென்றால்... மற்றப் பெண்களைக் குறை சொல்லுவானேன்? முக்கியமாய் அவனைக் குற்றப் படுத்துவானேன்?

'என்னைப் பார் - கொஞ்சு - எடுத்துக் கொள்!' என்று கெஞ்சிக் கரையும் பாவையரின் நடுவே, அவன் இத்தனை நாள் ஒண்டியாய் நிற்பதே ஆச்சரியம்...

திருமணத்தின் தேவையை அவன் உணரவும் தேவையில்லையே... ஆரம்ப நாட்களில் 'செந்நாய்களின் சதுரங்கம்' என்று தான் வாசித்ததைச் சக்ரவர்த்தியைப் பழிவாங்குவதோடு ஒப்பிட்டுப் பேசியதை இன்று நினைக்கும்போது, குரூரமாய்ப் பட்டது.

'பெரிய இடத்தில் மோதுவது சரியில்லை... புத்திசாலித்தனமில்லை!' என்று எச்சரித்த ஜானகியிடம்தான் வம்படியாய்ப் பேசினாள் -

'இந்தியக் காடுகளில் திரியும் புலி, சிறுத்தைகளை ஒன்றரை அடி உயரம் கூட இல்லாத செந்நாய்கள் கொன்று விடும், தெரியுமா? ரெண்டு மூன்றாய்க் கூட்டுச் சேரும் செந்நாய்கள் முதலில் புலியின் வாலைக் கடிக்க, கோபமூண்ட சிறுத்தை துடித்து நாலா புறமும் சீறிப் பாயும்.. செந்நாய்கள் விடாமல் அதைச் சுற்றி வியூகம் அமைத்து அங்கும் இங்குமாய்க் கடித்துப் பிடுங்க, அந்த அவமானத்தில் அசந்து படுத்து விடுமாம் சிறுத்தை -

பிறகு அவை அரைக் கொன்று சாப்பிட்டும் விடும்... இது காடு நமக்குத் தரும் பாடம் ஜானு...'

'அதான் காட்டுமிராண்டித்தனமாய் இருக்குது - போதும்...'

''என்ன அம்மா முகம் டல்லடிக்குது... என்ன விஷயம்?'' தன் கொண்டையை அவிழ்த்து விட்டு, முடியைக் கோதியபடி வினவினாள், ஜானகி. இவளோடு இது ஒரு பிரச்சனை... தன்னைக் கண்ணாடி போல ஊடுருவிக் கணித்து விடும் இல்லாடி!

''இல்லியே ஜானு...''

மற்றவள் விடவில்லை -

''மறுப்பும் கூடச் சுரத்தில்லாமல்ல வருது?''

''சும்மா யோசனை...''

''ஆபிஸைப் பற்றித்தானே... அதுவும் உன் பாஸைப் பற்றி...'' அநாயசமாய்க் கேட்டுவிட்டு முகம் அலம்பத் துவாலையுடன் ஜானகி போய் விட்டாலும், இவளுக்குள் குமைந்தது -

கனவைத் தவிர இன்று மற்றொரு அதிர்ச்சியும் நேர்ந்திருந்தது-

இவளது மேசை முன் வந்து நின்று அந்தச் செய்தியைச் சக்ரவர்த்தியே சொன்னான் - ''நான் மலேஷியா போறேன், சங்கவி.''

''ஓ... எப்போ?''

''நாளையே - இதுவரை தயார் செய்தவற்றில் ஒவ்வொரு காப்பி வேணுமே - அப்பாவிடமும் காட்டினால் சந்தோஷப்படுவார்...''

''ஷ்யூர் ஸர். ஆக வேலை விஷயமாய்ப் போறீங்க?''

''வேறென்ன? நீயும் கூட வந்தால் அதையே விடுமுறை ஆக்கலாம்!''



உல்லாசமாய் அழைத்தவனது புன்னகை உறுத்தியது. சும்மாவே காந்தமாய்த் தன்னை ஈர்ப்பது போதாது போல, இப்படி அழைக்க வேறு வேண்டுமா?

'அவசியமில்லையே ஸர்... இந்த ஸாஃப்ட்வேரை நீங்க உங்களது எந்த ஹோட்டலுக்கும் பயன்படுத்திக்கலாம்... எல்லாம் தெளிவாகவே தயாரிச்சிருக்கேன்...' என்றாள் புரியாத பாவனையுடன்.

அவனிடமிருந்து பதிலில்லை என்றாலும் குறும்பான புன்னகை வந்தது... இவள் மனதைக் கொத்தித் தின்றது...

இப்படிக் குழப்பத்துடனேயே மறுநாளும் வீடு திரும்பியவளை மாமி வெகு உற்சாகமாய் வரவேற்றாள் -

''பரவால்ல... அப்படியே புஷ்பமாட்டம் வாடாமத்தான் வந்திருக்கே! இல்லைன்னா உன்னை முகம் அலம்பிண்டு வரச் சொல்ல இருந்தேன், சவி...''

மாமி முகத்தின் சிரிப்பின் அளவிற்குக் குறைந்து தழைந்தது குரல். உள்ளே யார் இருக்கிறார்கள்?

''ஏ.ஸி... அறையிலதான் மாமி வேலை... ஆக அலுப்பில்லை... என்ன மாமி திடீர்னு?''

''நல்ல காரியமெல்லாம் திடீர்னுதானே தகையுது? வா, வந்து தட்டையுங் காப்பியும் சாப்பிடு.''

மாமியைத் தொடர்ந்தவள் அங்கு கிடந்த தேக்கு மர நாற்காலியில் அமர்ந்திருந்த வாலிபனைக் கண்டு தயங்கினாள்.

''எல்லாம் நமக்கு வேண்டப்பட்ட பிள்ளைதான் - வா சங்கவி...''

புன்முறுவலுடன் எழுந்து நின்றான் அந்த இளைஞன். இயல்பான ஆனால் நேர்த்தியான உடை - அதற்குத் தோதான முகம்.''

''நான் விஜய் - முன்னே மணி சார் கூட ஸ்கூலில் வேலை பார்த்தேன் - ஒரு வாரம் இங்கே தங்கினதும் உண்டு - அப்படி மாமியைப் பழக்கம்...''

'இப்போ மும்பையில் காலேஜ் ப்ரொபஸரா விட்டான்...'' மாமி உற்சாகமாய்த் தகவல் தந்தாள்.

''ஸ்கூலில் ரெண்டு வருஷம் வேலை பார்த்ததால் கோவா மேல் தனிப் பாசம்... அற்புதமான ஊரில்லையா இது?''

''உண்மைதான்...''

''ஆக ரொம்ப வேலை அழுத்தாத வீக் - என்ட்ஸை இங்கே கழிக்க அப்பப்ப வர்றதுண்டு...''

''ம்ம்... நான் வேலை நிமித்தம் ஒரு மாதம் இங்கே வந்திருக்கேன்...''

''தெரியும்... மாமி சொன்னாங்க...''

''பேரை என்ன அப்படிச் சுருக்கிட்ட... அது விஜய் நந்தனில்லியோ?''

''மும்பைக்குத் தோதாய்ச் சுருங்கிடுச்சு, மாமி...'' என்றவன், சங்கவி புறமாய்த் திரும்பிச் சொன்னான் -

''உங்கப்பா கூட எனக்குப் பழக்கம்தான்...''

இவளது ஆச்சரியத்தை ஒரு கணம் ரசித்துவிட்டுத் தொடர்ந்தான் - ''ஃபைனான்ஸ் கம்பெனி மானேஜர் திரு சுந்தரம்...''

''ஆமாம்...'' என்றாள், ஆச்சரியம் அகலாமல்.

''எங்கம்மா வழியில் நீங்க தூரத்துச் சொந்தமுமாம்.''

''அவங்ககூட ஒரு தரம் இங்கே நம்மாத்துல தங்கின துண்டு... அருமையான மனுஷி... இப்ப கூட ஃபோன் போட்டுப் பேசினா...'' என்ற மாமி பட்டென வாயை



மூடிக் கொண்டதையும் சற்று ஆச்சரியத்துடனேயே கவனித்தாள் சங்கவி.

ஆனால் விஜய்யின் இயல்பான பேச்சில், அவனுக்குத் தங்களின் குடும்பம் பரிச்சயம் என்றானதில், இவளும் தயக்கமின்றியே பேசினாள்.

அவனுக்கு உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் -

கல்லூரி மாணவர்களுக்கும், பள்ளிப் பிள்ளைகளுக்கும் படிப்பிற்கிடையே உள்ள வேற்றுமை ஒற்றுமைகள் பற்றி... அவசர மும்பை வாழ்க்கை - சொந்த ஊரான கடையநல்லூருக்குக் கடைசியாய் எப்போது போனான் என்று... எல்லாம் பேசினார்கள்.

மாமி சூடான வெங்காயப் பஜ்ஜிகளைக் கொண்டு வைக்கவும், சங்கவி எழுந்தாள்.

''ஒரு நிமிஷம்... ஜானுவைக் கூட்டிட்டு வந்துடறேன்...''

''அது யாரு?''

''அவ இன்னும் ஸ்கூல்லேர்ந்து வல்லியே...''

''ஓ... ஏதோ ஸ்பெஷல் கிளாஸ்னு சொன்னானோ... என் ஃபிரண்ட் ஜானகி - கல்லூரியில் சேர்ந்து படிச்சோம்... அவ மாமி வீட்டைப் பற்றி எடுத்துச் சொன்னதால்தான் இந்த வேலையை எடுக்க எங்க வீட்டில் அனுமதி கிடைச்சது..''

''அவ வருவா... நீங்க ரெண்டு பேரும் பஜ்ஜியைச் சாப்பிடுங்கோ... பிறகு அப்படியே பீச்சுல நடந்துண்டு வர்வோமே...''

சற்றுத் திகைத்தவள் நழுவ முயற்சித்தாள் -

''கொஞ்சம் வேலை இருக்குது. மாமி... ரூமிற்குப் போகணும்.''

''வேலை இருக்கத்தான் செய்யும். ரூமிற்குப் போய் ஃபிரஷ்ஷாயிட்டு வா - பிள்ளையாண்டான் என்னோட பேசட்டும்... என்ன விஜய்?''

மாமியின் உத்தரவு இவளுக்கு விநோதமாய்ப் பட்டது. மணி சாரின், அதாவது மாமியின் கணவரோடு முன்பு வேலை செய்ததன் மூலம் இந்த விஜய் இக்குடும்பத் திற்குப் பழக்கம் - சரி.

தான் வேலையிலிருந்து வந்ததும் வராததுமாய் மாமி தன்னை இழுத்து வைத்து உபசரிப்பதும் கூட அவரது சுபாவத்திற்கு மாறில்லை.

தமிழர்கள் இப் பகுதியில் சொற்பம் என்பதால் கிடைத்தவர்களைக் கூட்டி அளவளாவி ஆனந்தப்படு வதும் சகஜமே. ஆனால் வந்த புதியவனும் தானுமாய்ச் சேர்ந்து பிச்சோரம் போவதுதான் சற்று இடித்தது.

''மன்னிக்கணும், மாமி... எடுத்து வந்த குறிப்புகளை மறப்பதற்கு முன்னமே வரிசைப் படுத்தினால்தான் நாளை காலை அலுவலகம் போனதும் நான் அவற்றைக் கம்ப்யூட்டரில் ஃபீட் இன் செய்யலாம்... இப்படி முறையாய் நான் தினமும் வேலை பார்த்தால்தான் அதை இந்த மாசத்திற்குள் முடித்து வீட்டிற்குத் திரும்பலாம்...''

மாமியோடு விஜய்க்கும் சேர்த்தே இத்தனை தகவல்களையும் தந்தவள், தன் வேலை தொடர்பாய் அவன் கேட்ட சில கேள்விகளுக்கும் பதிலளித்த பின்பு தன் அறைக்குப் போகப் படி ஏறினாள்.

ஓரளவு வேலை இருந்தது பொய்யில்லை என்றாலும், தனித்திருக்க வேண்டியதிருந்ததே முக்கியமான உண்மை.

திடீரெனச் சக்ரவர்த்தி அயல்நாடு கிளம்பியது அவளை வெலவெலக்கப் பண்ணியிருந்தது.



ஊர் விட்டு ஊர் போவது தன்னைப் போன்ற சாமான் ளியர்களுக்குப் பெரிய மாற்றமாய் இருப்பினும், சில நாட்கள் அயல் தேசம் போவது முதலாளி வர்க்கத் தினருக்குச் சர்வ சகஜம்தான். ஆனால் அவனில்லாத அச்சில நாட்கள் தனக்கு மிகுந்த சிரமத்துடன், வெறுமை யுடன் நகரப் போவதும் புரிந்தது.

அதில் புதிதாய்ச் சந்தித்த விஜய்யை, அசாதாரண உற்சாகத்துடனிருந்த மாமியை எல்லாம் பொருட் படுத்தவே தோன்றவில்லை. கீழிருந்து பேச்சும் சிரிப்பும் கேட்டன.

ஜானகி வந்து விட்டாள் போலும்...

பெருமூச்சுடன் தன் உலகிற்குள் சுருண்டு கிடந்தாள் சங்கவி...

## 10

எண்ணெய்க் குளியலுக்காகச் சற்றுச் சிரமப்பட்டே அகன்ற மூக்குத்தியைக் கழட்டியிருந்தாள் சங்கவி - சில துளி எலுமிச்சஞ்சாறு சேர்க்கப்பட்ட வெதுவெதுப்பான நல்லெண்ணெயை உச்சந்தலையின் மயிர்க் கால்கள் தேய்த்து நீவியவள், முகத்திலும் எஞ் சியதைத் தடவினாள். பளபளத்த முகத்தைக் கண்ணாடி யில் ஆராய, ஆபரணத்தினால் மூக்கின் ஓட்டை சற்று விரிந்து, விகாரமாய்ப் படுவது போலத் தோன்றியது.

சக்ரவர்த்தி ஊர் திரும்ப, இன்னும் நான்கு நாட்க ளேனும் உண்டு. ஆக அவனில்லாத போது ஏன் இந்த வேஷத்தைத் தொடர வேணும்?

யோசனையுடன் உடம்பில் எண்ணெயைத் தடவி னாள். தேய்த்து இறக்க, எண்ணெய் உள்ளிறங்கிச் சருமத்தை

மினுமினுப்பாக்கியது. முடிவு செய்தாள் - வகிடும் பின்னலுமில்லாத கூந்தல், 'சிக்'கென்ற ஸிவ்ந்தடிக் ஸல்வார் - பேருக்குச் சிறு பொட்டு - இப்படியான அதாவது முன்பு செய்து பழக்கப்பட்ட தோற்றத்தில் போனால் என்ன? ஆனால் ஜானகிக்கு இவளது முடிவு தெரியாதே - ஆக, ''இதோ இந்த ஆரஞ்ச் ஆர்கன்டி உனக்கு அம்ச மாயிருக்கும், சவி. என் ரவிக்கையைக் கூடப் பிடிச்சு, சிறு சாக்கியிருக்கேன் - உங் கட்டிலில் வச்சிடவா?'' உதவினாள்.

இப்படி ஒசிப் புடவைகளிலேயே நாட்களை ஓட்டவா பெட்டி பிதுங்கப் பிதுங்க இத்தனை உடைகளைச் சுமந்து வந்தது? 'கோவா போறேன்' என்ற சாக்கில் இரு அழகிய புதுச் சுடிதார்களையும் கூட வாங்கினாளே.

''ஜானு... இன்னிக்கு இந்த மஞ்சள் சுடியைப் போடலாமான்னு ஒரு யோசனை... புதுசாய் வாங்கி... போடாமலேயே பெட்டிக்குள் கிடக்குது... என் உடைகளில் உனக்குப் பிடித்ததாய் ஏதேனும் எடுத்துப் போட்டுக்கோயேன்.''

''என் உடம்புக்குத் 'தொளதொள' ஸல்வார்தான் சரிப்படும். நீயானால் ரெடிமேட் தையலையும் பிரிச்சு உன் அளவுக்குச் 'சிக்'குனு சுருக்கிடறே... அதற்குள் என்னால் நுழைய முடியுமா என்ன?''

''காலைல தினம் முக்கால் மணி நேரமாவது 'விறுவிறு'ன்னு ஒரு 'வாக்' போ. தவிர மாமி தர்ற அத்தனை பலகாரத்தையும் அரைச்சுத் தள்ளணுமா என்ன? இந்த வயசில் வெயிட் போட்டால் பிறகு குறைப்பது சிரமம், ஜானு...''

''ம்ம்... நாலு கிலோ உடனடியாய்க் குறைக்கணும்னு தான் நினைச்சிருக்கேன்... ஆனா அறிவுரை எல்லாம் எனக்குத்தானா - காவ்யாவிற்குக் கிடையாதா?''



''அவ கதை வேறில்லையா? ஏமாந்த, இழக்கக் கூடாததை எல்லாம் இழந்த விரக்தி - டிப்ரெஷன் - அதை மறக்க அதீத உணவுதான் வழின்னு நினைச்சு...''

''அது மாறணுமே...''

''தெளிஞ்சுகட்டுதான் வர்றா...''

''எனக்குத் தெரிஞ்ச மனநல மருத்துவர், ஆலோசகர் உண்டு, சவி...''

''இந்த ஸன்டே நம்மைப் பார்க்க வர்றா...நீயே அது பற்றிக் கேளேன்...''

''கேட்கறதென்ன - தீர்மானமாய்ச் சொல்லிடுவேன் - அந்தச் சக்ரவர்த்தியை நினைச்சு ஏங்கி, எதிர்காலத்தைக் கோட்டை விட்டுடாதேன்னு...''

''நீ... நீ உண்மையாவே அவரைப் பற்றித் தப்பாய்க் கேள்விப்பட்டாயா ஜானு?''

''கேலி, கிண்டலாய் யாரோ என் காதில் போட்ட செய்திதான்.''

''எங்கப்பா, அம்மா உன்னிடம் எல்லாவற்றையும் விவரமாய் விசாரிச்ச பின்தானே என்னை இங்கே அனுப்பிச்சாங்க...''

''ஓ... அதாவது... விசாரிச்சவங்களிடம் உன் பால் ஒரு ஓநாய் - முயல் குட்டி போன்ற உங்க மகளை இங்கே அனுப்பி அவருக்குப் பலியிட்டுடாதீங்கன்னு ஏன் எச்சரிக்கலைன்னு விசாரிக்கறே?''

''ம்ம்...''

''காதில் விழுந்ததெல்லாம் வதந்திகள், சவி. தவிர அவரைக் கண்டு பாவைகள் மயங்குவதாய்த்தான் கேள்வி - அந்த 'ஓநாய்' அப்பாவி முயல்குட்டிகளை விரட்டிப் பிடித்து முழுங்குவதாய் அல்ல!''

சங்கவிக்குள் இதமாய் எழுந்தது ஒரு நிம்மதிப் பெருமூச்சு!

''தவிர எனக்கு உன்னைத் தெரியுமே, சவி... நீ எதற்கும் வேசில் சாயும் ரகமில்லை... அதாவது அப்படித்தான் நினைச்சேன்...''

ஜானகி இழுக்க, மற்றவள் முறைத்தாள் -

''பிறகென்ன? நீயோ உன் முதலாளிக்குப் பிடிச்சிருக்குன்ற நினைப்பில் செவந்திப்பூ மூக்குத்தி, ஜரிகைக் கட்டமிட்ட மாமியின் கொரநாட்டுப் புடவை, மேட்சிங் குங்குமம், கண்ணாடி வளையல்ல கலக்கிட்டிருக்கே....''

''அது... அதெல்லாம் எதற்குன்னு உனக்குத் தெரியுமே...''

''ம்ம்... முதல்ல அவரிடமிருந்து உன்னைக் காத்துக் கொள்வதற்கான கவசம் அதுன்னு காதில் பூச் சுற்றினே... பிறகு உண்மை வெளியானது. சக்ரவர்த்தியை இப்படியான அலங்காரத்தால் பின்னப்பட்ட வலையில் கவர்ந்திழுத்து... அதில் அவர் ஒட்டியதும் காலில் எட்டி உதைக்கப் போவதாய்...''

''ச்சே... ஏனிப்படிக் குரூரமாய்ப் பேசறே, ஜானு?''

''பின்னே - உன் ஏமாற்றுத் திட்டம் ரொம்ப நாகரீகமானதுன்னு நினைக்கறியா? தவிர உன் தலையை உரலுக்குள் விட்டுட்டே - எப்போ உலக்கை 'நச்'சுன்னு விழுந்து- உன்னை நசுக்கப் போகுதோன்னு எனக்குப் பயம்,சவி...''

''இப்படி அலசினால் கொஞ்சம் அசட்டுத்தனமாய்த் தான் தோணுது... இல்லையா?''

''கொஞ்சமா? ரொம்பவே... காவ்யாவிற்கு உதவணும்னால் நீ அவளை ஒரு மனநல ஆசாமிட்ட கூட்டிட்டுப் போயிருக்கணும் - மனசைத் தேற்றி, உடம்பைக் குறைக்க ஊக்கப்படுத்தி இருக்கலாம். கோவாவில் அவள்



இருந்தபடி பழசை எல்லாம் மறப்பது சிரமம்னு பட்டால், அவளுக்கும் சென்னையில் ஒரு வேலையைத் தேடிப் பிடிச்சு அங்கே கூட்டிட்டே போயிருக்கணும்... அவை தான் நியாயமான முயற்சிகள்... அதையெல்லாம் விட்டுட்டு, சக்ரவர்த்தியை மயக்கப் போறேன்னு கிளம்பினதைப் பார்த்தால்...''

இத்தனை விலாவாரியாய்த் தன் அசட்டுத்தனம் அலசப் பட, இவளது இதயம் படபடத்தது. தலைகூடச் சுழலுவது போல... ஆனாலும் கேட்டாள்: ''சொல்லு - பார்த்தால்?''

''உனக்கு அவரைச் சந்தித்ததிலிருந்தே சபலம். அவரது காந்தத்தில் ஒட்டத் துடிக்கும் இரும்புத் துண்டாயிட்டே! ஆகத் தோழிக்காக அவரை மயக்கறேன் - அவரை மயக்கித் தண்டிக்க நினைக்கறேன்னு ஒரு மாயையை உருவாக்கி... நீயும் அதை நம்ப முயற்சிக் கறேன்னு நினைக்கறேன்.''

சங்கவியின் கைகள் பலவீனமாய் மறுத்தன -

குரலும் குழறியது - ''ஜானு... நீ என்னை ரொம்பக் குழப்பறே...''

''ஆக உனக்கே உன் நோக்கத்தில் தெளிவில்லை - உன்னில் நம்பிக்கையில்லை...'' இந்த அறிவிப்புடன் ஜானகி பள்ளியிலிருந்து கொண்டு வந்த நோட்டுக்களைத் திருத்த உட்கார, இவள் தன் வேலையின் குறிப்புகளை வெறுமே கையில் வைத்தபடி உட்கார்ந்திருந்தாள்.

''நல்லா இருக்கில்லம்மா, இந்தச் சங்கு மாலை?'' கழுத்தில் மாலையுடன் கண்ணாடி முன்னின்று ரசிக்க, அவளது தாயார் சலித்தார்.

''குறத்தி சாயலடிக்குது... இதோடு, பட்டு மாக்ஸி, டாப்ஸ்னு இத்தனை பொருட்களைக் கோவா போய் ஒரே வாரத்தில் வாங்கி அனுப்பணுமா, உங்கக்கா?''

தன் மகள் கைநிறையச் சம்பாதிப்பதிலும், அதில் ஒரு பகுதியைப் பாசமுடன் குடும்பத்திற்காகச் செலவழிப்பதிலும், அந்தத் தாய்க்குப் பெருமையும் என்பது குரலில் தெரிந்தது -

''ஏன், உங்களுக்குத்தான் வீட்டுக்குச் சாமான் அனுப்பிருக்கா...''

''இல்லைன்னேனாடி? வேலைக்குப் போயிருக்கறது ஒரே மாசத்துக்கு. இடையிலே இத்தனையை கொரியர் மூலம் அனுப்பணுமா என்ன?''

''நான் இடையே காலேஜுக்குப் போட்டுப் போய் அசத்தத்தான்''

''வேண்டாமே... எனக்கும் கொண்டு வரச் சொல்லுன்னு ஆளாளுக்குப் பட்டியலிடுவாங்க...''

அப்பாவின் குரல் குறுக்கிட்டது.

''ராகவி - எனக்கொரு காஃபி போடேன்...''

ராகவிக்கு இந்த உத்தரவின் அர்த்தம் தெரியும்.

'நானும் உன் அம்மாவும் தனித்துப் பேச வேணும் - ஆக, 'மகளே ஒதுங்கு' என்பதுதான் அது.

சற்று முகத்தைக் கோணியபடி சமையலறைக்குப் போனாள் - ''கொரியரில் ஏதும் கடிதம் வச்சிருந்தாளா, சங்கவி?''

''நீங்கதானே பார்சலைப் பிரிச்சீங்க?''

''துணிமணிக்கு இடையே ஏதும் இருந்துச்சான்னு...?''

''இல்லீங்க... அதான் ரெண்டு நாளைக்கு ஒரு தரம் ஃபோனில் பேசிடறாளே - வேறென்ன எழுதுமளவு ...கவல்...''



''ல்ல... அந்தப் பையன் விஜய்யின் ஜாதகம் சங்கவியோடதோடு நல்லாப் பொருந்துது. தெரிஞ்ச நமக்கு ஈடு ஜோடான குடும்பம் - பையனும் பிகு பண்ணாம அவங்கம்மாவிடம், 'பொண்ணு கோவாவில் தங்கியிருக்கிற மாமி குடும்பம் எனக்குத் தெரிஞ்சவங்க - நானே போய்ப் பார்த்துக்கறேன்'னு சொல்லியாச்சு...''

''பார்த்திருப்பாங்க - என்ன அபிப்ராயம்னு தெரியணும் - அதானா?''

''ஆமா... சங்கவி ஏதும் எழுதுவாளோன்னு நினைச்சேன்...''

''அவளுக்கு விஷயத்தையே நாம காதில் போடலியேங்க - விஜயநாதன் தம்பி தன்னைப் பெண் பார்க்க வந்ததாய் யூகம் பண்ணியிருக்கவும் முடியாதே... அவளால்....''

''பெரிய பிராஜக்ட் பண்றாளாம். புதுப்புது ஐடியாவெல்லாம் வருதாம்... இதை யூகிக்க முடியலைன்னா எப்படி? உம் பொண்ணுக்கு உன்னில் பாதிச் சாமர்த்தியம் கூட இல்லியே!''

கிண்டலாய் அலுத்தார் சுந்தரம் -

''ஷ்ஷ்... என்னை வம்புக்கு இழுக்காம உங்களால் பேசவே முடியாதா?''

''பெண் பார்க்க வந்த என்னிடம் எப்படி ஜன்னல் வழியே ஒரு புன்னகையைப் பறக்க விட்டே! படியேறினதுமே இப்படிக் கவிழ்த்தின பிறகு, ஒருமாதிரி பேஸ்தடிச்சுப் போய்... பலக்கத் தலையாட்டிட்டேன்... சம்மதம்னு... இப்ப பாரு நம்ப நிலைமையை...''

''இப்ப மகளுக்கு மாப்பிள்ளை பார்க்கற பருவத்தில் இருக்கோம் - நினைப்பிருக்கட்டும்...''

''அப்பா! காஃபி!'' சற்று உரக்கவே குரல் கொடுத்தபடி வந்தாள் இளைய மகள் ராகவி.

அவர் ஒரு வாய் உறிஞ்சியதுமே ஃபோன் அடித்தது...

''நம்ப வீட்டு ஃபோனுக்கு கண்ணு இருக்குதோன்னு எனக்கொரு சந்தேகம்...'' அலுத்தார் -

''வாய் மட்டுந்தாம்ப்பா - அதான் கூப்பிடுது...''

''காபியோடு உட்கார்றதைப் பார்த்துதானே கூப்பிடுது?''

''மணிச் சத்தத்தைப் பார்த்தா... சலியா இருக்கும்னு தோணுது.''

எடுத்த தாயின் குரல் பரபரப்பானது.

முகத்தில் பவ்யமான ஒரு புன்னகையுடன் -

''அப்படீங்களா, தம்பி? நல்லது...'' என்று ஆரம்பித்து, ''சரி'', ''சரி'' என்று இடையே தலையாட்டியவள், பிறகு 'பேசி' கருவியைத் தன் கணவரிடம் தந்து, ''அந்த விஜய் தம்பி... உங்களோட பேசணுமாம்...'' என்றபோது முகம் சற்றுச் சுருங்கிக் குழம்பிக் கிடந்தது.

தானும் பேசி முடித்த சுந்தரம் மனைவியை ஏறிட்டார்.

''ந்தா ராகவி - காஃபி டம்ளரைக் கழுவி வச்சிடு.''

மறுபடி முகத்தை நொடித்தபடி சின்ன மகளின் தலை மறைந்ததும், ''நல்லபடிதான் பேசினான் - பிறகேன் உன் முகம் சரியில்லை?'' வினவினார்.

மனமொத்த தம்பதி சிறு மாற்றத்தையும் கவனித்து விடுவார்கள் அல்லவா?

''ஒரு ஸாஃப்ட்வேர் என்ஜினியர் உங்க மக - இத்தனை அடக்கமாய் பாரம்பரியப்படி இருப்பாங்கன்னு நினைக்கலன்னார்,... அந்தத் தம்பி.''

''ம்ம்...''

''பெரிய மூக்குத்தி, அகலப் பொட்டு, பட்டுச் சேலை, பின்னல்னு ரொம்ப வித்தியாசமான பொண்ணுன்னு...''



''அவ கோவாவிற்குப் பட்டெல்லாம் எடுத்துப் போனாளா - என்ன?''

''இல்லியே... ஜானகியுடைய புடவையைக் கட்டி னாலும்... அதென்ன பெரிய பொட்டு, மூக்குத்தின்னுற வேஷம்?''

இப்போது தந்தையின் முகத்திலும் சின்னக் குழப்பம்...

## 11

அலுவலகத்தினுள் நுழைந்தாள்.

அவனில்லாத ஆபிஸ்...

அழைப்பில்லாமல் நுழைந்திருக்கிறாள்... ஆனாலும் அங்கே நிற்பது ஏதோ அவனோடு இருப்பது போன்ற ஒரு ஆசுவாசத்தைத் தந்தது -

அதிகம் கலையாத அவனது மேஜையைத் துடைத்து மேலும் சீராக அடுக்கி வைத்து - பறித்து வந்திருந்த புது மலர்களைக் குவளையில் கவர்ச்சியாய் அமைத்தாள் - பக்கத்திலிருந்த கேபினையும் சுத்தப்படுத்த, அங்கிருந்த காஃபி கோப்பைகளில் ஒன்றில் லேசான விரிசல் ஓடுவதைக் கண்டு, வேறு ஒன்றைக் கொண்டு வருவதற்காய், அதனுடன் வெளியேற நினைத்தவளின் பார்வை மீண்டுமாய்ச் சக்ரவர்த்தியின் நாற்காலியில் பதிந்தது -

அவன் அதில் அமர்ந்திருப்பது போன்ற கற்பனையிலும் கூடக் கண்கள் கிறங்கின.

''ஹாய்... ஹூ இஸ் ஹியர்?''

உல்லாசமான ஆச்சரியத்துடன் கேட்ட குரலில் சுதாரித்துத் திரும்பினாள் - அங்கு நின்றது ஒரு மிக இளம் பெண். சிறுமி என்னுமளவிற்கு ஒடிசலான உடல்வாகு. துள்ளலான முகம்.

'ஐம் நீரஜா... நீங்க?''

''நான்... ஒரு டெம்பரரி ஸ்டாஃப்...''

''செக்ரடரி இல்லையே... பிறகு அத்தானின் அறையில் என்ன வேலை...?''

துச்சமாய் இல்லாமல் இயல்பாகவே கேட்டாலும், இவளுக்குத் திணறியது.

''ஸாரி... அறையை ஸர் வர்றதுக்குள் சுத்தம் பண்ணலாம்னு...''

''சின்ஸியர் ஸ்டாஃப்! குட்... எங்க கல்யாணம் முடிந்ததும் நானும் அவருக்கு இப்படி ஒரு சின்ஸியரான மனைவியாய் இருப்பேன்...''

சங்கவிக்கு உதடுகள் மட்டுமல்ல, இதயமே உலர்ந்து போனது...

''என்ன... அப்படிப் பாக்கறீங்க?''

''ல்ல... நீங்க எம்.டி.யைக் கல்யாணம்... எப்ப?''

திணறி வந்தன வார்த்தைகள்.

''உங்க எம்.டி., அதாவது என் சக்கு அத்தான் என் கையில் சிக்கினதும்! சிக்காமல் அங்கேயும் இங்கேயுமாய் ஓடறார்...''

விரல்களை ஆட்டிச் சிறு பெண்ணின் குதூகலத்துடன் பேசினாள் நீரஜா.

''ரொம்ப... சந்தோஷம்...''

மரத்த உதடுகளிலிருந்து மரியாதை நிமித்தம் வார்த்தைகளை வரவழைத்தாள் சங்கவி.

''எனக்குந்தான். வழக்கமாய்ப் பெரியவங்க எடுக்கும் முடிவுகளில் நமக்குத் திருப்தி இருக்காது... இதில்... அதான் எங்க திருமணத்தில் எல்லாருக்குமே பரம திருப்தி...''



''ஓ... சொந்தம் என்பதால்...''

''ரத்த சம்பந்தமான சொந்தமில்லை... ஆனால் குடும்ப நண்பர்கள்- கல்யாணம் செய்யப் போபவரை அத்தான் எனலாம்பாங்க பாட்டி... ஆக நான் சக்கு அத்தான்னே கூப்பிடறது... என்ன பிஸியாய் இருந்தீங்க போல... பூ அலங்காரம், சுத்தம்னு அறை ஜோராய் இருக்குது!''

நீரஜாவின் பார்வை அறையைச் சுற்ற, சங்கவியின் விழிகள் புதியவளை ஆராய்ந்தன.

மிக இளம் வயது... மிக அழகானவளும் கூட. சின்ன உடல், பெரிய கண்கள்... அந்த வயதிற்கு வேண்டியதை மீறிய மிடுக்கு... தன்னம்பிக்கை - இதுவும் பணம் உருவாக்கித் தந்தது போலும்...

ஆகத் திருமணத்திற்குச் சின்னச் செப்புச் சிலைபோல ஒரு பெண் நிச்சயிக்கப்பட்ட நிலையில்தான் சக்ரவர்த்தி காவ்யாவுடன் காதல் லீலைகளைப் புரிந்திருக்கிறான்...

ஏன், தன்னிடமே கூட எத்தனை விரும்பி, நெருங்கிப் பழகினான்... மலேஷியாவிற்கு வருகிறாயா என்று கூட அழைப்புத் தந்தானே! மறுபடி மென்று விழுங்க... மிகக் கசந்தது...! பளபளவென்று இவள் துடைத்திருந்த லெதர், சுழல் நாற்காலியில் உரிமையாய் உட்கார்ந்த நீரஜா, ஒரு சுற்று வந்தாள் -

அவனுக்கேற்ற கம்பீரத்துடன் உருவாக்கப்பட்ட அந்த இருக்கையில் இவள் பொருந்தவில்லை... மெல்லிய உருவம்... சுழன்றபடி ஆட்டிய அவளது மெல்லிய கணுக்காலில் தங்கமும் கிரிஸ்ட்டலும் கலந்த கொலுசுகள் சிலுப்பின.

மற்ற ஆபரணங்கள் - வெள்ளிபோலத் தோன்றினாலும் - பிளாட்டினமாய் இருக்க வேண்டுமெனப் பட்டது.

சேர்கின்றது...

ஆகப் பணத்துடன் பணம் சேர்கின்றது...

இரு குடும்பத்தாரின் ஆசிகளுடன்...

''உங்களுக்குக் குடிக்க ஏதேனும் கொண்டு வரவா?'' விடைபெறும் விதமாய்க் கேட்டாள்.

''அதெல்லாம் வேணாம்... ஆங்... இங்கே பெரிய பொட்டும் மூக்குத்தியுமாய் ஒரு தமிழ் ப்யூட்டி இருக்காளாமே... யாரது?''

கேள்வி இவளது கழுத்தை நெரித்தது - சில விநாடிகளுக்குப் பிறகே தான் நல்லவேளையாக அன்று அந்த அலங்காரத்தில் வரவில்லை என்பதும் உறைத்தது.

''அது... வந்து... நான் வேலைக்குப் புதுசு...''

''அவளும் புதுப் பெண்தானாம்... சக்குத்தான் வாழ்வில் பழைய பெண் என்றால் அது நான்தான். நான் பிறந்ததுமே ஆசையாய் என்னைத் தூக்கிக் கொண்டது அத்தான்தானாம்! அப்பவே நான் முடிவு பண்ணிட்டேன்னு நினைக்கறேன் - இவர் எனக்குத்தான்னு... எங்களிடையே பன்னிரண்டு வருஷ வித்தியாசம்... அதனாலென்ன?''

ஏ.ஸி. அறையிலும் இவளுக்கு வியர்த்தது -

''காஃபி அனுப்பி வைக்கவா, மேம்?''

''நீங்களும் அழகுதான் - உங்க பேர்?''

''சங்கவி.''

''தமிழ்தான் இல்லையா?''

அதுவரை ஆங்கிலத்திலேயே பேசிய நீரஜா தமிழுக்குத் தாவினாள்.

''ஆமாம்...''



''இத்தனை தீர்க்கமான முக அமைப்பு - நமக்குத்தான் அமையும் - அதாவது தமிழர்களுக்கு - அத்தானுக்குப் பாட்டி போல பூ, பொட்டுன்னு பாரம்பரிய அலங்காரத்துடன் உள்ள பெண்களைப் பிடிக்கும் - ஆனா அந்த ரகப் பெண்கள் இனிக் கிடைக்கமாட்டார்கள் - டினோஸார் போல அவர்கள் பூமியிலிருந்து அழிஞ்சாச்சுன்னு கூட நான் கேலி பேசியதுண்டு...''

''அப்படியா? ஆனா உங்களுக்கு அந்த... மூக்குத்திப் பெண்ணைப் பற்றி எப்படித் தெரியும்?'' பவ்யமாகவே கேட்டாள். அறியும் ஆவலை அடக்க முடியவில்லை.

''தன் சித்தியிடம் அத்தான் சொன்னாராம் - 'நீரஜாவிடம் சொல்லுங்க- அந்த அபூர்வ ரகம் அழியலை - இன்னும் பூமியில் அமோகமாய் அழகாய் வாழ்ந்துட்டுதான் இருக்காங்க!'ன்னு!''

வேறேதுமில்லையே என்ற நிம்மதி இருப்பினும் - தன்னைப் பற்றி வேறென்ன சொல்லியிருப்பான் என்றும் நெஞ்சில் குறுகுறுத்தது.

**வே**லை ஓடவேயில்லை... நொண்டியடித்தது - முதலாளியிடம், மற்றவர்களிடம் அறிய வேண்டிய விவரங்கள் எல்லாம் ஏறக்குறையச் சேகரித்தாயிற்று.

இனி மூளையும் கைவிரல்களும் ஒருங்கிணைந்தால் போதும்... சுலபமும் சுவாரஸ்யமுமாய் நடக்க வேண்டிய வேலை ஸ்தம்பித்து நிற்கின்றது...

சக்ரவர்த்தி போனதும் நிம்மதியாய்ப் பார்க்கலாம் என்று நினைத்தது நடக்கவில்லை.

ஒரு அலை வந்து படிந்த பின், பின்னாலேயே வேறொரு அலை எழும்பிப் புரண்டு வருவதைப் போல இப்போது நீரஜா வந்து, சதா தன் அத்தானைப் பற்றியே

வேறு பேச... மனது கொதித்துத் தடுமாறுகின்றது. நான்காம் நாள் ஜாறு கட்டிலில் வைத்த ஆரஞ்சு நிற ஆர்கன்டியைச் சுற்றிக் கொண்டாள். நெற்றியில் அளவான ஆரஞ்ச் நிற ஸ்டிக்கர் பொட்டு - பின்னலில் பத்து வாச வில்லி மலர்களைச் செண்டாய்க் கட்டிச் சூட்டி யிருந்ததோடு சரி.

சண்டிக் குதிரையாய்த் திமிறிய மனதை இழுத்து வேலையில் பூட்டிய சில நிமிடங்களில் மேஜையில் நிழலாட, நிமிர்ந்தாள். மொட்டாய் நிமிர்ந்த முகம், மறுகணம் விரிந்த தாமரையானது.

''நீங்க... நாளைதானே வருவதாய்... அதாவது இன்றிரவுதானே விமானம்...?''

''அதான் இன்று உன் அலங்காரம் கம்மியா, சங்கவி? ஆனால் அதே குறையாத அழகு! உன்னை ஒரு நாள் முன்னதாய்ப் பார்க்கும் ஆவலில் வேலையை அசுர ணாட்டம் செய்து முடித்தேன்...''

''அப்படியா ஸர்... உங்களுக்கு இங்கே...''

''ப்ளீஸ் சங்கவி - 'ஸர்'ன்னு கூப்பிடாதே இனியும்... நாம் அதை மீறிப் பழகியாச்சுன்னு நினைக்கறேன்... இப்பக் கிடைத்த பிரிவில்தான் இத்தனை தவிப்பேன் என்பது எனக்கே புரிஞ்சுது- உன் எதிர்பார்ப்பும் லேசில்லை என்பதற்கு என்னைக் கண்டதும் மலர்ந்த உன் முகமே சாட்சி... ம்ம்?''

சற்றே தலை சாய்த்து இடது புருவத்தை உயர்த்தி அவன் கேட்ட அழகில், மதி மயங்கியதுதான் - ஆனாலும் சமாளித்துப் பேசினாள் -

''சொல்ல வந்ததை முழுக்கச் சொல்லிடறேனே... உங்களுக்கு இங்கே ஒரு ஆனந்த ஆச்சரியம் காத்திருப்பது



புரிஞ்சுதான் சீக்கிரமே வந்திட்டேங்கன்றதைத்தான் சொல்ல வந்தேன்...''

''என்னது... ஆனந்த ஆச்சரியம்?''

சரசமாய் வளைந்தன அவனது உதடுகள்.

''உங்க பியான்ஸி வந்திருக்காங்க...''

''வாட்?''

வார்த்தை துப்பாக்கிக் குண்டு போல அவனது வாயி லிருந்து வெடித்தது.

''பியான்ஸின்னா... உங்களைக் கல்யாணம் பண்ணு வதற்காய் நிச்சயிக்கப்பட்ட பெண்...''

''எனக்கு இங்கிலீஷ் பாடம் நடத்த உன்னைக் கேட் கலை, சங்கவி. யார் தன்னை உன்னிடம் அறிமுகப் படுத்தியது என்பதுதான் கேள்வி...''

''உங்க... நீரஜா...''

''அவ எப்ப இங்கே வந்தா?''

''வந்து ரெண்டு நாளாச்சுது, ஸர்... சதா உங்களைப் பற்றியேதான் பேசறாங்க...''

புன்னகையுடன் ஊசியேற்றினாள்.

''இப்ப அவ எங்கே?''

''பெரியவங்க உங்க கல்யாண நாளை நிச்சயிக்கச் சொன்னதாயும், அது பற்றி உங்களோடு பேசவே வந் திருப்பதாயும் சொன்னாங்க, ஸர்.'' இப்போது சங்கவி சரளமாய்ப் போட்ட 'ஸர்'களை அவன் ஆட்சேபிக்கும் நிலையிலில்லை!

''ஓ... எங்க திருமண நாளை நிச்சயிக்கணுமா? அதை அறிய நீ ஆவலாய் இருக்கிறியா என்ன?''

''வாழ்த்துவேன், ஸர்...''

அவன் முகம் இறுக, இவளுக்கோ மனதுள் தோழி காவ்யாவின் உப்பிக் கலங்கிய முகம் வந்தது.

சற்று முன் அவனிலிருந்த மகிழ்வு, சரசச் சீண்டல் எல்லாம் தொலைந்து போய், வெறுமே வறண்ட குரலில் சொன்னான் -

''ஆனால், உன் கல்யாணம் நிச்சயமானது... தெரிந்தால் என்னால் நிம்மதியாய் வாழ்த்த முடியாது, சங்கவி...''

''அந்தப் பயமே வேணாம், ஸர்... எது எப்படின்னாலும் நான் எடுத்த வேலையை, இந்த காண்ட்ராக்ட்டை முடிச்சிடுவேன்... அரைகுறையாய் வேலையை விட்டுட்டுப் போகமாட்டேன்... அந்தக் கவலை உங்களுக்கு வேணாம்..''

புரியாதது போல இவள் தந்த பதிலில் மேலும் அவன் முகம் கடினமுற, அங்கிருந்து விலகினான் சக்ரவர்த்தி.

மதியத்திற்கு மேல்தான் அவனிடமிருந்து அழைப்பு வந்தது - அதுவரை செய்திருந்த வேலை பற்றிய குறிப்புகளுடன் அவனது அலுவலக அறைக்குள் நுழைந்தாள் -

அவனது முகம் இன்னும் தெளியவில்லை.

''மலர் அலங்காரம் எல்லாம் திறமையாய்த்தான் செய்திருக்கே! ஆனால் வார்த்தைகளின் பசப்புதான் சரியில்லை...''

விழிகளைச் சற்று அப்பாவித்தனமாய் விரித்து, பின் வழக்கம் போலக் குனிந்து கொண்டாள்.

''மூக்குத்தி எங்கே, சங்கவி?''

''போட்டிருக்கேனே ஸர்..''

''கண்ணுக்கே தெரியாமல் ஒரு துணுக்குப் போல... சங்கவி, நாம சற்று தனியே பேசணும்...''



''நீரஜா மேம் அதற்காகக் காத்திருக்காங்க...''

''இப்படித் தரையை, தடுக்கைப் பார்த்து நீ பேசினால் எனக்கு உன் மனசு, உன் உணர்வுகள் புரியவேயில்லை.. முன்பும் இதையே நான் சொல்ல,

'எங்க பாட்டி, தாத்தாவின் முகத்தை அவங்களுக்குக் கல்யாணமாகி ஒரு வருஷங் கழிச்சுதான் முழுசாய்ப் பார்த்தாங்களாம். அந்நிய ஆண்களை நேரே பார்ப்பது முறையில்லை!'ன்னு ஏதேதோ கதை விடறே...''

''கதை இல்ல ஸர், நிஜம்! அதனால்தான் இப்படி டினோஸர் போல அழியாத வம்சமாய்ச் சிலரேனும் இன்னும் புடவை, பின்னல், மூக்குத்தியோட நிக்கறோம்...''

''ஓ?'' தடுமாறியவன் தொடர்ந்து பேசினான் - ''ஸாரி... நீரஜா ஏதும் சொன்னாளா? வேண்டாததையும் உளறி வச்சிருக்காப் போல... தானும் குழம்பி, பிறரையும் ஏன் குழப்பறான்னு தெரியலை...''

ஆனால் சங்கவிக்குக் குழப்பமின்றிச் சில புரிந்தன - முதலாவதாய்ச் சக்ரவர்த்திக்கு நீரஜா இங்கு வந்து சேர்ந்ததில் சந்தோஷமில்லை... நீரஜாவுடன் அவன் இன்னும் பேசியதாயும் தெரியவில்லையே...

இரண்டாவது தான் காவ்யா என்ற ஒரு தாயற்ற அப்பாவியின் வாழ்வைக் குழப்பி மட்டுமல்ல, சிதைத்தே போட்டதைச் சக்ரவர்த்தி இன்னும் உணரவில்லை என்பது...

மேலும் யோசிப்பதற்குள் உள்ளே வந்த நீரஜா இவளிருப்பதையும் பொருட்படுத்தாமல் சக்கரவர்த்தியின் மார்பில் தஞ்சமாக, அவசரமாய் வெளியேறினாள், சங்கவி...

## 12

கடற்கரைக் காற்றுக்கே பிரத்தி யேகமாய் அமைந்த உப்புக் காற்றின் மணத்தை, சொரசொரப்பான குளிர் காற்றை அனுபவித்தபடி நடந்தாள் - உடன் வந்த அரவிந்தன் திறந்து விட்ட நாகரிகக் குடிலைச் சற்று விநோதமாய்ப் பார்த்தவள் கேட்டாள்.

''இங்கு வர்றவங்க கடற்காற்றை அனுபவிக்கத்தானே வர்றாங்க, அரவிந்த்- பிறகேன் இதை ஏர் கண்டிஷன் செய்திருக்கீங்க?''

''இந்த நட்சத்திர ஹோட்டலில் தங்குபவர்கள் எல்லோருமே பணக்காரர்கள். அவர்கள் பெரும்பாலும் இருப்பது குளிர்பதனப்பட்ட அறை. அலுவலகங்களில், கடைகளில் அல்லது கார்களில். தான் கடற்காற்றை அனுபவிக்க நினைக்கும் போது, பால்கனியில் வந்து உட்காரலாம் - வெயிலில் காய ஆசைப்பட்டால், கடல்மண்ணில் படுத்திட வேண்டியது.''

'வெயிலைப் போல அழகான பதார்த்தம் வேறில்லை'ன்னு பாரதியார் சொன்னதைப் புரிஞ்சவங்க, ஐரோப்பியர்கள்தான்.''

''பாரதியார் அப்படிக்கூடச் சொல்லியிருக்காரா?''

''ஜகத்சித்திரம் என்ற அவரது கவிதையில்! ஆனால் இந்த சாகசங்கள் எல்லாம் முடிந்த பின் அவங்களுக்குச் சொகுசும் வேண்டியிருக்கிறது- பிய்த்தடிக்கும் கடற்காற்றும், அலையின் இரைச்சலும் கலைக்காத தூக்கம் அவசியம்...''

''புரியுது - தவிர கோடை மாதங்கள் வெக்கையாய்த்தான் இருக்கும்...''



''நிச்சயமாய்... அப்போது நீச்சல் குளம் நிரம்பி இருக்கும்... மனிதர்களால்...''

''ம்ம்... ஏக்கர் கணக்கில் பரந்திருக்கிற ஹோட்டலின் பாதி அறைகளைச் சுற்றிப் பார்ப்பதற்குள் எனக்கு வியர்த்திடுச்சு...''

'உட்கார் சங்கவி - ஏதேனும் ஜூஸ் வரவழைக்கவா?'' இவள் சம்மதிக்கவும், பழரசம் வரவழைத்தவன், அந்த ஹோட்டலைப் பற்றி மேலும் பல தகவல்களைச் சொன்னான் - அங்கு சந்தித்த சுவாரஸ்யமான மனிதர்களைப் பற்றி...அவர்களைச் சுற்றிய சம்பவங்கள் எனச் சொன்னதை எல்லாம் ஆர்வமாய்க் கேட்டிருந்தாள்.

''கல்கட்டாவில் நாடக ஈடுபாடு கொண்ட நீங்க, எப்படி ஹோட்டலிலும் இத்தனை ஆர்வத்துடன்...''

''இதுதான் அம்மணி என் வயிறு வாடாமல் பார்த்துக்குது.... வருஷத்துக்குக் கிடைக்கும் ஒரு மாச லீவில் கலைத் தாகம் தணிக்கப்படும்... உனக்கும் நடிப்பு, நடனத் திறமை உண்டே சங்கவி... கல்கட்டா வந்து...''

''ஐயோ...'' அவசரமாய்க் கையாட்டிச் சிரித்தாள். ''அன்று மேடையில் ஆடியதையே இன்னும் என்னால் நம்ப முடியலை...தவிர பெற்றவர்களைக் கேட்காமல், அவங்க அனுமதியின்றி... நாடகம்னு நாட்களைக் கழிப்பது...''

''அது சரி - உங்க பெற்றவங்க உங்களுக்கு மும்முரமாய் மாப்பிள்ளை தேடிட்டிருப்பாங்க... ம்ம்? எனக்கு அந்தக் குஷாலெல்லாம் கிடையாது. எனக்கான வாழ்க்கைத் துணையை நான்தான் தேடிப் பிடிக்கணும்...''

தோள் குலுக்கியபடி சிரித்தவன் வெகு கவர்ச்சியாகவே தெரிந்தான் -

''கவலை வேணாம் அர்விந்த் - நீங்க அதிகம் தேட வேண்டியதிராது...'' சங்கவி சொல்லும்போதே இன்னுமொரு இளங்குரல் இடையே விழுந்தது -

''வாங்க அர்விந்த் - ஸ்விம்மிங் பூலுக்குள் போய் உங்களுக்கான தேவதை அங்கே மூழ்கி ஒளிஞ்சிருக் காளாங்கறதைப் பார்த்துடலாம்.''

சங்கவி சிறு சிரிப்புடன் திரும்பிப் பார்க்க, அரவிந்த் அவசரமாய் எழுந்து நின்றான்.

கருஞ் சிவப்பு ஸிங்கிள் -பீஸ் நீச்சலுடையில், இடையில் தொடைகளை மறைப்பதற்காய் முடியப்பட்ட சராங்குடன் ஒயிலாக நின்றது நீரஜா! மிக மெல்லிய உடல்வாகு என்பதால் சொற்ப உடையிலும் கூட அவள் ஆபாசமாய்த் தெரியவில்லை... ஆனாலும் சங்கவியும் கூச்சத்துடன் எழுந்து நின்றாள் -

வருங்கால எஜமானி அல்லவா?

''உங்க பேர் அர்விந்த்தானே? கேட்டுத் தெரிஞ்சு கிட்டேன். எனக்கும் ஒரு ஆரஞ்ச் ஜூஸ் வேணும் - பத்து நிமிஷத்தில் 'பூல்'லுக்கே கொண்டு வரச் சொல்லிடுங்க... அப்படியே நீங்களும் உங்க நீச்சல் உடைக்கு மாறிடுங்க அர்விந்த்... குளத்தில் மூழ்கி உங்க தேவதையைத் தேடணுமில்லையா?''

உச்சியில் முடிந்திருந்த கூந்தலை அவிழ்த்துச் சிலுப்பியபடி நீல நீரை நோக்கி நடந்தவளை இருவரும் விழித்து வெறித்தனர்.

''அவங்க வேடிக்கைக்குச் சொல்றாங்களான்னு தெரியலை... ஆனா நான் உடை மாற்றிக் குளத்தில் ஆஜராயிட வேண்டியதுதான்னு நினைக்கிறேன்!'' பாதி தனக்குள்ளாகவே பேசிய அரவிந்த் பழ ரசத்திற்கான



உத்தரவையும் வாக்கி - டாக்கி மூலம் சொல்லி விட்டு சங்கவியிடம் மன்னிப்புக் கோரினான்.

''ஸாரி- உன் வேலையை முழுக்க முடிக்கக் கூட வில்லை... இன்னொரு நாள் அத்தனை அறைகளையும் பார்த்துடலாம்...''

''ஆக இப்ப நீச்சலா?''

சற்று எரிச்சலாகவே கேட்டாள். தன்னை ஒரு பொருட்டாகவே மதிக்காததோடு, தன் வேலையையும் பாதியில் தடுத்துவிட்ட நீரஜா மேல் காட்டம் எழத்தான் செய்தது.

''வேறு வழி? பாஸே அவங்க சொல்லைத் தட்டுவதில்லை...'' ஆகச் சிடுசிடுத்தாலும் அலட்சியப் படுத்தினாலும் சக்ரவர்த்தி இறுதியில் நீரஜாவின் சொல்படி அவளது சின்னச் சங்குக் கழுத்தில் தாலி கட்டித்தான் தீர வேண்டும்...!

இத்தனைக்கும் வருங்கால எஜமானியாகப் போகும் அப்பெண் இப்போது ஏன் அரவிந்தனை ஜலக்கிரீடைக்கு அழைக்க வேணும்? சக்ரவர்த்தியின் மனதைச் சலனப்படுத்திய 'டினோஸர்' ரகப் பெண் தான்தான் என்றும் நீரஜா கண்டு விட்டதால்தான் இந்தப் பாரா முகமா?

குழம்பினாலும் தன்னை விட அரவிந்தனின் நிலைமை பரிதாபம்தான் என்ற நினைப்புடன் ஒரு பெருமூச்சும் விட்டாள்.

மறுநாள் காலை அரவிந்தனுக்கு அடுத்த சோதனை காத்திருந்தது!

அவனை அலுவலகப் பகுதிக்கு அழைத்த நீரஜா, ''அர்விந்த்! இன்னைக்கு என் ஃபிரெண்ட்ஸ் பத்துப் பேர் கோவா வர்றாங்க...'' ஆரம்பித்தான்.

''யெஸ், மேம்...''

''ஸ்டாப் காலிங் மி தட்! எல்லாருக்கும் நான் நீருதான் - இல்லைன்னா வர்றதுங்க எல்லாம், 'என்ன, எங்க முன்னே முதலாளிங்கற பந்தாவைக் காட்டறியா?'ன்னு பிச்சிடுவாங்க...''

''யெஸ், நீரஜா...''

பிழைத்துப் போ என்பது போலத் தோளைக் குலுக்கிக் கொண்டாள். ''சாயங்காலம் மண்டோவி ஆற்றில் படகுச் சவாரி இருக்குமே...''

''யெஸ்...க்ரூஸ்னு சின்னக் கப்பல் போன்றதில் ஒரு உல்லாசச் சவாரி- அதில் ஆட்டம் பாட்டமெல்லாம் கூட உண்டு.''

''எந்த க்ரூஸ் பெஸ்ட்டுன்னு பார்த்து- அதில் எங்களுக்கு டிக்கெட்ஸ் வாங்கிடுங்க, அர்விந்த்...''

''ஷ்யூர். வின்னிதான் நம் ஹோட்டல் ட்ராவல் மேனேஜர் - அத்தனையும் அவனுக்கு அத்துப்படி - அவனிடம் சொல்லி எல்லா ஏற்பாடுகளையும் செய்துடலாம்- கூட வர ஒரு நல்ல கைடுக்கும் சொல்லிடவா?''

''நோ நோ... பிறகு கண்டெலி போலக் 'கீச்கீச்'னு சதா பேசற ஒரு பயலை எங்ககூட அனுப்பிடுவாங்க... பயங்கர போர்... இப்ப நம்ம ஹோட்டல் ஒன்னும் நிரம்பி வழியலையே...''

''இல்லைதான்... ஆனா மெயின்டனென்ஸ் வேலை நடத்திட்டிருக்குது...''

''மானேஜர் ஸ்டாஃப்ன்னு அதுக்கு ஆளுண்டே, நீங்க எங்க க்ரூப்பைக் கவனிக்கணும், அர்விந்த்...''

''எம்.டி.யிடம் ஒரு வார்த்தை...''



''சொல்லிட்டேன் - நோ ப்ராப்ளம்...''

இந்த சம்பாஷணை கம்ப்யூட்டரில் கண்ணை மட்டுமே பதித்திருந்த சங்கவியின் காதுகளில் தெளிவாகவே விழுந்தது...

ஆனால் புரிதலில்தான் தெளிவில்லை...

சக்ரவர்த்தி வரும்வரை தன் அத்தானைப் பேசியே கொண்டாடி, அவனைத் தான் நினைவு தெரிந்த நாள் முதலாய் நேசிப்பதாய் டமாரம் கொட்டிய நீரஜா... உடனே திருமணத் தேதியை முடிவு செய்யப் போவதாய்த் தவித்ததென்ன... இப்போது ஹோட்டல் ஊழியனுடன் இப்படிச் சேர்ந்து சுற்றத் திட்டமிடுவது என்ன?

அந்தக் கேள்வி இவளது முகத்தில் எழுதப்பட்டிருந்தது போலும்... வந்து பத்து நாட்களில் காலை பதினோரு மணிக்குத் தரப்படும் தேநீர் சங்கவிக்குப் பழகி விட்டிருந்தது - தேநீர்க் கோப்பையுடன் ஒருபுறமாய் ஒதுங்கியவளைத் தேடிவந்தவன் வினவினான் -

''என்ன சங்கவி- தீவிர யோசனை போல?''

கருநீலச் சட்டையும் இளஞ் சாம்பல் நிற பான்ட்டுமாய்த் தன் முன் நின்ற முதலாளியைப் பார்த்தாள் -

அவன் கையிலும் ஆவி பறக்கும் தேநீர்க் கோப்பை -

''ஒன்னுமில்லையே, ஸர்...''

'''ஸர்' தேவையில்லை என்றேனே - நீ என் ஸ்டாஃப் எனக்கூட முடியாது. எங்கள் நிறுவனத்திற்கு உதவ வந்திருக்கிறாய்... பிறகென்ன?''

''வயசில், அந்தஸ்தில் பெரியவங்களை அண்ணா, மாமா அல்லது 'சர்'னு அழைக்கச் சிறுவயதிலேயே பழக்கப் படுத்திட்டாங்க. வயசில் மூத்தவங்களை ஒருமையில்

கண்டு விழும்...'' அந்த வலி கூப்பிட்டா உதட்டில் இன்னும் மறக்கவில்லை என்பதுபோலச் சுழித்தது அவன் முகம்.

ஒரு கணம் திகைத்துப் பின் வாய்விட்டுச் சிரித்தான் - வியப்பும் வாஞ்சையும் கலந்த சிரிப்பு!

''வெரி ஸ்வீட்! அருமையான வளர்ப்பு முறை-தமிழகத்தில் கூட இப்ப சற்று மேல் தட்டுக் குடும்பங்களில் எடுத்ததும் பெயர் சொல்லியே யாரையும் அழைப்பதும், அறிமுகப்படுத்தியதும் தோளை அணைப்பதும்னு... பழக்க வழக்கங்கள் மாறிடுச்சு. எங்க பாட்டி இன்னும் அம்சமாய்க் கைகுவித்து வணங்குவாங்க - சித்தி, அயல்நாட்டு நபர்கள் அறிமுகமானால் பட்டும் படாமல் கைகுலுக்குவதோடு சரி... ஸாரி - பேச்சு திசை மாறிடுச்சு - உன் குழப்பம் என்னன்னு ஆரம்பிச்சேன்...''

இவ்வளவு தூரம் அழுத்திக் கேட்பவனிடம் சொல்லி விட்டால்தான் என்ன?

துணிவைத் திரட்டியவள் கையிலிருந்த பீங்கான் கோப்பையையே பார்த்தபடி மென்னப் பேசினாள் - ''நீரஜா உங்களுக்காய் ரொம்ப ஆவலாய்க் காத்திருந்தாங்க - வந்த நீங்க அவங்களோடு பேசிப் பழகணும்னு... வந்து, பாவம்! இப்ப அவங்க பெரும்பாலும் தனியே இருக் காங்க... அல்லது நம்ப ஸ்டாஃப்புடன் பழக வேண்டிய நிர்பந்தம்...''

''வந்ததும் நீருவோடு பேசினேன். அவ இங்கே என் வேலைக்கு இடைஞ்சல் தராமல் இருந்தால் தங்கலாம் - இல்லைன்னா மூட்டை கட்டி என் பாட்டி அல்லது சித்தியிடம் அனுப்பிடுவேன்னு சொல்லியாச்சு. நான் வீணே, விளையாட்டாய் எதையும் சொல்வதில்லைன்னு அவளுக்குத்தெரியும்... அதான் ஒதுங்கி நிற்கறா...''



''ஆனா நாளையே உங்க மனைவியாகப் போறவங் களுக்காக நேரம் ஒதுக்க முடியலைன்னா...''

''நீ என் கல்யாண நாளை முடிவு பண்ண வேண்டாம், சங்கவி... தவிர நீருவை நான் மணக்கப் போறதில்லை... அவளைப் பிறந்த அன்றே தூக்கியவன் நான்...''

''சொன்னாங்க...''

''அத்தனை தூரம் தெரியுமா?'' என்பது போல ஒரு பார்வை பார்த்தவன் - ''நான் என் வீட்டில் கடைசிப் பிள்ளை - தங்கை, தம்பி இல்லைங்கற ஏக்கம் என்னுள் இருந்துருக்கும் போல... ஆக சுஜா ஆன்ட்டி கர்ப்பமாய் இருந்தப்போ,

'உன்னோட விளையாடக் குட்டிப்பாப்பா ரெடியாகிட் டிருக்கா'ன்னு சொல்லச் சொல்ல, என் ஆர்வமும் வளர்ந் திடுச்சு. ஹாஸ்பிடல் போய்ப் பிறந்ததுமே நீருவைக் கையில் ஏந்தினேன்...'' பழைய நினைப்பில் அவன் உதடுகள் சிறு புன்னகையுடன் வளைந்தன -

''ஆனா உள்ளங்கையில் பீங்கான் பொம்மையாட்டம் கிடந்தவளைப் பார்த்ததும்தான் இது நம்மோடு, நம் லெவலில் விளையாட ரொம்பக் காலமாகும்னு புரிஞ்சுது... நீருவிற்குப் பத்து வயசானப்ப நான் படிப்பை முடிச்சு வேலையில் இறங்கிட்டேன்...!''

''அப்படீன்னா... அவங்க ஏன்...?'' துருவிக் கேட்கக் கூடாது என்பது புரிந்தாலும் கேள்வி குதித்து விழுந்தே விட்டது.

''அப்பதான் அவ வாழ்வு திசை திரும்பிடுச்சு - ஜெர்மனிக்குப் போயிருந்த அவங்கம்மா அப்பா போன ஒரு கேபிள் கார் விழுந்து நொறுங்கினதில்...''

"ஐயையோ... நீரு அப்ப..."

"அநாதையாயிட்டா... அந்த அதிர்ச்சியை ஏற்க முடியவில்லை. பத்தே வயசுச் சிறுமியால் - ஆக அப்படி ஒரு விபத்தே நடக்கவில்லை என்பதாய்ப் பாவனை செய்தது அவளது மூளை!"

"விநோதம்... டாக்டர்ஸ் என்ன சொன்னாங்க?"

"மூளை அத்தனை பெரிய அதிர்ச்சியை ஏற்க மறுக்குது... மரணச் செய்தியை ஏற்று ஜீரணிக்க அதற்குரிய நேரத்தை நாம கொடுக்கத்தான் வேணும். அவளாய் உணருவாள் -

"துன்பங்களிலிருந்து தப்ப விரும்புபவன் இன்பங்களையும் இழக்கிறான் என்பதைத் தவிர வாழும் ஆசை அவளில் பெருக, அவளது புத்தி விழித்து, நிஜங்களை ஏற்றுக் கொள்ளும்னு..."

"ம்..ம்... வாழ்க்கை எனும் பரமபதத்தில் ஏணியும் ஆசைதான், பாம்பும் அதுவே'ன்னு கேள்விப்பட்டதுண்டு. பெற்றவர்கள் மேல் வைத்த பாசம் அவங்களைப் பாம்பாக்கிக் கொத்தியது போல..."

"என்மேல் வைத்த பாசம் அவளை ஏணியாக்கி மீட்டது! ஆக நாங்களும் அவளது பாசத்தைத் தடுக்கலை..." 'காதல்' என்று சொல்லாமல் 'பாசம்' என்ற வார்த்தையை அவன் பயன்படுத்தியது இவளது வயிற்றில் பால் வார்த்தது.

"எங்கப்பா அவளிடம், 'என்ன நீரு - அம்மாவிடமிருந்து லெட்டர் வந்ததா?'ன்னு கூடக் கேட்பார்... 'அம்மாக்கு டூர் போற ஜாலியில் என் ஞாபகமே இல்லை மாமா!'ன்னு அவ சிணுங்குவாள்!"

"கடவுளே... இன்னும் அவங்களுக்கு...?"

"ல்ல, ரெண்டு வருஷங்களுக்கு முன் திடுக்கிட்டு முழிச்சுகிச்ச அவ மனசு... எல்லா ஞாபகங்களும் பேரலை போல மூளையில் மோத, சிதறிட்டா... பைத்தியம் போல



பெற்றோரின் விபத்து பற்றியும், அவர்களது நசிந்த உடல்கள் சவப் பெட்டியில் வைத்து விமானம் மூலம் வந்திறங்கியது பற்றியும், புலம்பித் தீர்த்தாள் - நிறைய மனநலச் சிகிச்சைகள், ஆலோசனைகள், மனதைச் சாந்தப்படுத்தும் மருந்துகள் - பரிதாபமாய் இருந்தது அவளைப்பார்க்க... ஆக அவ என்ன சொன்னாலும் எங்க வீட்டில் மறுப்பே கிளம்பாது. ஆக அப்படி ஆரம்பிச்சதுதான் அவ என்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போறதென்பது... அவளைக் கடிந்து கண்டித்தால் மனசு மறுபடி தளர்ந்திடுமோன்ற பரிதவிப்பில்... அந்த நம்பிக்கையை வளர்க்க வேண்டியதாய்ப்போச்சு... ஆனால் மனநல மருத்துவர் -

'தொலைவும் மலைப்பும் நாம் நகராமல் இருக்கும் வரைதான் - நீரஜாவின் ஆசைகள், ஆர்வங்கள் வளர, விசாலமாக, இந்த அசட்டு ஆசை மறைஞ்சிடும்னார்..."

"அதுவரை நீங்க அவங்களைக் கொஞ்சம் கவனமாய்ப் பார்த்துக்கணும்...இன்று அரவிந்த் நீரஜாவை அவங்க பிரண்ட்ஸ்லோடு க்ரூஸ்ஸிற்குக் கூட்டிட்டுப் போறார்..."

"அரவிந்த்? ம்ம்..."

"பாவம்! அவருக்கு நடுக்கம்தான்... உங்க உறவினர் என்பதால் மறுக்கவும் முடியாமல்..."

"அரவிந்த் நல்லவன் - டீஸன்ட் கை... ஆனால்..." ஏதோ சொல்ல வந்தவன், சொல்லாமல் நிறுத்திக் கொண்டான்.

## 13

"மாமி! இதைப் போட்டு விடறீங்களா?"

"இம்முறை அத்தனை வலிக்காதுடி.. ஏற்கெனவே ஒரு வாரமாய்ப் போட்டிருந்த நகைதானே?"

கண்ணை இறுக மூடித் துளைக்கும் வலிக்காய்க் காத்திருந்தவள், மாமி திருகாணியை இட ஆரம்பிக்க, ஆச்சரியமாய் விழி திறந்தாள்.

''போட்டாச்சா?''

''ஆச்சு.... ஏது மறுபடி பூ மூக்குத்தி? அதுதான் உம் முகத்துக்கு எடுப்புன்னு யாரேனும்... பலரும் சொல்லி யிருப்பாங்க - அதான்?''

''நீ எப்படியிருந்தாலும் அழகுதான். சங்கவி... ஆனா அந்தப் பெரிய மூக்குத்தியில் நீ பண்டைக்கால ராணி போல, ஒரு தேஜஸ்... கம்பீரத்துடன் தெரியறே...''

சக்ரவர்த்தியின் பாராட்டை இவள் கேட்காதது போலத்தான் நின்றாள் எனினும் ஏனோ அவனை ஏமாற்ற மனம் வரவில்லை.

குழைவான கறுப்புப் பட்டில் கெம்பு நிற நாலும் ஜரிகையுமாய் நெய்த சின்னத் தாமரைப் பூக்கள். முழங்கை வரை மறைத்த ரவிக்கையில் கைநிறைந்த கெம்பு நிற வளையல்களில், அதே வண்ணக் குங்குமத்தில், கண்ணாடி யில் தெரிந்த பிம்பம், மெய்யாலுமே ஒரு ராஜகுமாரி போலத்தான் நின்றது.

முன் தினம் அலுவலகம் அருகே வேலையற்று அலைந்த நீரஜாவை அழைத்த சக்ரவர்த்தி -

'டெவில்ஸ் ஹார்பர் கேள்விப் பட்டிருக்கியா, நீரு?' என்றான்.

'என்னத்தான் அது?'

''மோட்டார் படகில் இருபது நிமிஷங்களில் போகக் கூடிய ஒரு தீவு. அங்கு நாளை இரவு எனக்கொரு கான்ஃபரன்ஸ். நமக்கென்று சிலஅறைகள் தரப்படுவதால் நீயும் கூட வரலாம்.''



நீரஜாவின் முகம் மலர்ந்த விதம் இவளையுமே நெகிழ்த் தியது. அவளைப் பற்றி அறிந்தபின், இரக்கங்காட்டுவது போல இல்லாமல் இயல்பாகவே நீரஜாவிடம் பேச்சுத் தந்து பழகினாள்.

'நீங்க நாள் முழுக்க பிஸியாய் இருப்பீங்களா, அத்தான்?'

'கருத்தரங்கிற்கு நீயும் வரலாம்... அல்லது தீவின் அழகை நீயும் சங்கவியுமாய்ச் சேர்ந்து ரசிக்கலாம்...'

ஏதோ வேலையாய் இருப்பதாகப் பாவனை காட்டிய சங்கவியின் தலை நிமிர்ந்தது -

'நான்... அங்கே... எதற்கு?'

'கோவாவில் அபூர்வமாய் ஏதேனும் பார்த்ததாய் ஊர் போய்ச் சொல்ல வேண்டாம்? ஒரே நாள்தான். நாளை மாலை போனால் மறுநாள் மதியம் திரும்பிடலாம் - நீரஜாவிற்குத் துணையாயிருக்கும்... இல்லைன்னா, பாவம்! அவ வர முடியாது... அரவிந்தனும் நம் ஹோட்டலின் சார்பாய் அழைக்கப்பட்டிருப்பதால், உங்களுக்கு போர் அடிக்காது...'

மறுக்க முடியவில்லை... ஆனால் அழைப்பு அலுப்புத் தராமல் ஆனந்தமாயிருந்ததை உணரவே செய்தாள். அந்த ஆனந்தத்தின் பிரதிபலிப்புதான் இன்றைய அலங்காரம்!

அறைக்கதவு அறைந்து மூடப்பட்ட சத்தம் சங்கவியை உலுக்கியது.

''என்ன மறுபடி இந்த அலங்காரம்?''

நிஜமான கோபத்துடன் கேட்ட ஜானகியை ஏறிட்டாள். வழக்கமான கரிசனையோ, கேலியோ இன்றி நிஷ்டூர மாய்த் தெரிந்தது தோழியின் முகம்.

''என்னாச்சு, ஜானு...''

''உங்கம்மாட்ட இருந்து ஃபோன் வந்தது...''

''ஓ... கேட்கலை... நீ என்னைக் கூப்பிடலையே...''

''உங்கம்மா பேச நினைத்தது என்னிடம்தான்!''

''என்ன சொல்றே...? வீட்டில எல்லாரும்...''

''குழம்பியிருக்காங்க! எதுக்கு சவி அந்த வேஷத்துல இருக்கான்னு விசாரிச்சாங்க ஆன்ட்டி...''

''என்ன சொல்ற ஜானு? பதறாமல் சொல்லேன்...''

திறந்த கதவும், வறுத்த பேச்சும் மாமியை மறுபடி மாடி ஏற வைத்தன. ஆனாலும் குறுக்கிடாமல் வாசலிலேயே நின்று விட்டார்.

''எதுக்கு சவி புடவையும், மூக்குத்தியுமாய் ஆபீஸ் போறா? என்ன நடக்குது அங்கேன்னு கேட்கறாங்க, உங்கம்மா...''

''என்ன சொன்னே?''

''சமாளிப்புதான். தமிழ்நாட்டிலேருந்து வேலையிலிருக்கற ஒரே பொண்ணு அவ... ஆக நம்ப உடையின் பிரதிநிதியாய் அப்பப்ப, என் உடைகளை இரவல் வாங்கிப் போட்டுக்கறான்னேன்...''

''ஆனா... என் உடையைப் பற்றி அம்மாட்ட யார் சொல்லியிருப்பாங்க?''

சங்கவியின் புருவங்கள் யோசனையாய்ச் சுருங்கின.

''விஜயநாதன்.''

''யாரது?''

''உனக்காக உங்கப்பா அம்மா தேர்ந்தெடுத்த மாப்பிள்ளை.''

இதைச் சொல்லுகையில் ஜானகிக்கு ஏனோ மூச்சிரைத்தது.



''மூணு நாள் முன்னே இங்கே வந்த விஜய்யா...?''

''மூணு நாட்களாய்த் தினமும் வர்ற அவரேதான்...''

''தினமுமா... நான் அவரைப் பார்க்கலியே?''

மாமி சடக்கெனக் குறுக்கிட்டார்.

''விஜய் யாரைப் பார்க்க வர்றானோ, அவ மட்டுந்தான் அவனைப் பார்க்கறா... பேசறா...,''

''நீங்களும் சேர்ந்து குழப்பாதீங்க, மாமி.''

''முதல்லியே சொல்லியிருந்தால் குழப்பமே வந்திருக்காது, மாமி!'' வெடுவெடுத்தாள் ஜானகி. ''உங்களுக்கு ஆரம்பத்திலேயே தெரிஞ்சிருக்கணும் - விஜய் வந்தது சவியைப் பெண் பார்க்கும் நோக்கத்தில்னு...''

''நாடகம் மாதிரி என்ன இதெல்லாம்?''

''சொல்றேன்டிம்மா - விஜய் ஜாதகம் சங்கவிப் பெண்ணோடதோடு பொருந்தியிருக்கு - அவங்கம்மா மகனிடம் விவரம் சொன்னதும்,

''மாமி ஆத்துல குடியிருக்கற பொண்ணா... நான் நேரே போய்ப் பார்த்துடறேன்னு கிளம்பிட்டான் அம்பி. ஆனா சவிக்குத் தன் மேல நோக்கமே இல்லைங்கறதும் அவனுக்குப் புரிஞ்சிடுத்து.''

''நான் மரியாதையாய்ப் பேசினேனே, மாமி...''

'மரியாதைக்காய்ப் பேசறது வேற... மனம் மகிழப் பேசறது வேறில்லியோ? அங்கேருந்து பிச்சிட்டு ஓடறதிலேயே நின்ன நீ...''

அன்று மாமி தங்களைக் 'காலாரக் காற்று வாங்கி வரச் சொன்னதின் அர்த்தம் இப்போதுதான் சங்கவிக்குப் புரிந்தது.

''அம்பியும் அதைப் பெரிசு படுத்தலை... ஆனா ஜானகி வந்ததும், பேச்சு சுவாரஸ்யமாயிடுச்சு...''

இப்போது ஜானகியின் முகம் ஆத்திரம், ஆற்றாமையினால் சிவந்திருக்கவில்லை... சற்றுத் தெளிந்திருந்தது.

சங்கவிக்குள்ளும் தெளிவுதான் -

'ஓஹோ... இனம் வேற ஐயா இங்கே வர்றாராமா?''

'ஓஹோ... இனம் வேற ஐயா இங்கே வர்றாராமா?'' என்றாள் புதுப் புரிதலுடன், பள்ளியின் எந்த விழா, பொறுப்புடனும் ஐக்கியமாகும் ஜானகி, இப்போது கட்டறுத்த கன்றாய்த் தனக்கு முன்பே வீடு வந்துசேரும் மர்மம் புரிந்தது.

இன்று காலை தன் தாயுடன் பேசியவள் பதறினதற்குக் காரணமும் பெரியவர்கள் சங்கவிக்காகத் தேடிப் பிடித்த வரனுடன் தான் பொழுதை வெகு சுவாரஸ்யமாய்க் கழித்தது முறையில்லையே என்ற பரிதவிப்பு...

மாமியின் பேச்சு மறுபக்கத்தைப் புரட்டிக் காட்டியது. சங்கவிக்கு விஜய் பற்றிய எதுவும் தெரியவில்லை - அவன் தன்னைப் பெண் பார்க்கும் கண்ணுடன் வந்தவன் என்பதுஉட்பட! தவிர அந்த இருவருக்கும் இடையே எந்த ஈர்ப்புமில்லை. முக்கியமாய் விஜய் மற்ற இரு தினங்களும் வந்தது தன்னைப் பார்க்க... அவன் வந்ததும் கூடச் சங்கவி அறிந்தாளில்லை...

''அவா அவாளுக்குன்னு பகவான் போட்டுற முடிச்சை அவிழ்க்க முடியுமா இல்ல, மாத்திட முடியுமா? சாப்பிட வார்றீங்களா பொண்களா - நேரமாச்சே...!''

தோழியைத் தொட்ட ஜானகியின் பார்வையில் குளிர்ச்சியிருந்தது - 'அநாவசியமாய் எகிறிட்டேன்' என்ற மன்னிப்புக் கோரலும் கூட.

ஆனாலும் சாப்பிடும் போது முருங்கை மரத்தில் மறுபடி வேதாளமாய் ஏறினாள் -



''மூணு, நாலு நாளாய் ஒழுங்காய் இருந்தியே... இப்பென்ன மறுபடி இந்த அம்மன் வேஷம்?''

முடிந்தளவு சமாளித்தவள் அன்றிரவு தாங்கள் போகும் இடம் பற்றியும் சொன்னாள் -

''நீங்க நாலு பேர் மட்டுமா?''

''கூட ரெண்டு பேர் இருக்காங்கல்ல... தவிர அது ஒரு கருத்தரங்கு... நூறு பேரேனும் இருப்பாங்க...''

''இப்ப வரைக்கும் என்னிடம் நீ மூச்சு விடலை...''

''நான் வீடு வந்தப்ப நீ உன் விஜயநாதனுடன் பீச்சுக்குப் போயிட்டே... ஆக மாமியிடம் மட்டும் சொல்ல முடிந்தது...''

''ஸாரி சவி... வந்து...''

''ம்ம்... பீச்சிலேருந்து திரும்பின பிறகும் கூட, காற்று வாங்கிய படலம் பற்றி மூச்சு விடலை, மேடம் ஜானகி!''

''ச்சும்மா... சாதாரணப் பேச்சுதான்...''

''இதுவும் சாதாரணக் கருத்தரங்குதான், ஜானு...''

ஜானகி பெருமூச்செறிந்தாள் -

''முள் இலையில் பட்டாலும் இலை முள்ளைத் தடவினாலும் சேதம் மென்மையான இலைக்குத்தான்...''

சாம்பார் ஒட்டிய விரல்களைத் தட்டில் வழித்துவிட்டு விரல்களைப் போதும் என்பதாய்க் காட்டியபடி, கைகழுவ எழுந்தாள் சங்கவி.

''பெண்களைத் தளிரான, கிழியக் கூடிய இலைக்கு ஒப்பிட்டதெல்லாம் அந்தக் காலம், ஜானு... இப்போ நாம அலங்காரக் கள்ளிச் செடி போலன்னு வைக்கலாம் - அதை உரசினால், காயம் தீண்டுபவர்களுக்குத்தானே தவிர, நமக்கில்லை...''

வீம்பாய்ச் சொன்னாலும் தன் மனம் சக்கரவர்த்தியைக் கண்டதும் முள்ளாய் அல்ல, மலராய்த்தான் மலர்கிறது என்ற கவலை அவளுக்குள் இருக்கத்தான் செய்தது.

கிளம்புவதற்கு முன் சங்கவி கேட்டாள் -

''நான் செய்யும் கெஸ்ட் ப்ராஜெக்ட் ஃபைலையும் எடுத்துக்கவா, ஸர்?''

''நோ நோ... அது நாம் பூதம் போலக் காக்க வேண்டிய வெற்றி ரகசியம்! நம் சக்ரா ஹோட்டலின் ஆக்யு பென்ஸி முழு வீச்சில் இருக்க, 'என்னதான் செய்றாங்க - இப்படி எல்லாப் பயலும் இறங்கி அங்கேயே மறுபடி மறுபடி ஓடுமளவிற்கு?'ன்னு சக ஹோட்டலியர்ஸ் தலையைப் பிச்சுக்க வேண்டிய ரகசியம் - இது இந்த சீஸனுக்கான வாடகை வழக்கம் போல்தானா, சற்று உயர்த்தலாமா, ஸ்டாஃப் பிரச்னை ஏதுமுண்டா என்பது போன்ற கருத்துக்களுக்காக மட்டுமே...''

ஆக வேலை என்றில்லாமல், உல்லாசமாகவே கைவீசியபடி கிளம்பினாள் - படகின் சிறுபயணம் கூட நூதனமாய் இருந்தாலும் அதிக விநோதமாய்ப் பட்டது, நீரஜா தன் அத்தானிடம் அதிகம் இழையாமல் அரவிந்த னோடு மும்முரமாய்ப் பேசியதுதான்! இத்தனைக்கும் சக்ர வர்த்தி அச்சிறுபெண்ணிடம் அன்பாகவே பழகினான்.

ஆனாலும் மாலை அச்சிறு தீவைப் பிறரோடு சுற்றி ரசித்தபோது நால்வருமே கலகலப்பாய்ப் பேசிக் கொண் டார்கள்தான்.

''சங்கவி! நான் வந்த நாளன்றே நீங்க இந்த மூக்குத் தியைப் போட்டிருந்தால்... அந்த டினோஸர் சமாச் சாரத்தை எல்லாம் அவிழ்த்து விட்டிருக்க மாட்டேன்... ஏமாத்திட்டீங்க...''



''அது சும்மா ஒரு மாற்றத்துக்காக...''

''அரவிந்த் கூடத்தான் என்னை ஏமாத்திட்டார்...''

''நோ நீரஜா... அதாவது ஸாரி... என்னன்னு சொன்னால்...''

''சொல்றேன்... சொல்றேன். பார்க்க ஸினிமா நாயகன் போல இருக்கீங்கன்னுதான் உங்களை எங்க க்ரூப்போடு க்ரூஸுக்குக் கூட்டிப் போனேன்... பார்க்கச் சாது போல இருந்தவர் கப்பலில் ஆடின டான்ஸென்ன, பாவத்தோடு பாடினதென்ன... என் ஃப்ரெண்ட்ஸ் எல்லாரும் அசந்துட் டாங்க... பிறகுதான் தெரிஞ்சது, அவர் நாடகத்தில் கில்லாடின்னு... என் தோழிகள் எல்லாரும் அவரைப் பிய்த்துக் கொஞ்சித் தள்ளிட்டாங்க...''

''பெண்கள் இப்படி அடக்கமில்லாமல் ஆர்ப்பரிக்கக் கூடாது, நீரு. சங்கவியின் அழகே அவளது அமரிக்கை யான நடத்தைதான். அவளது உயரமோ, முகம் நிறமோ மட்டுமல்ல...''

'போங்கத்தான்... இதே சங்கவி, இதே அமரிக்கை யில், பூ மூக்குத்தி பொட்டோடு, நாலே முக்காலடி உயரத்தில், குயில் நிறமும் காக்கா குரலுமாய் வேலைக்கு வந்திருந்தால் நீங்க அவளை இப்படித் தலைக்கு மேல் தூக்கி வச்சுப்பீங்களா என்ன?''

ஒரு கணம் திகைத்த சக்ரவர்த்தி வாய் விட்டுச் சிரித்தான்.

சிரிப்பு அடங்கச் சில நிமிடங்களாயின.

''அதிலும் உண்மை உண்டு, ஒத்துக்கறேன்... ஆகச் சங்கவியின் சிறப்பை இதுதான் இன்னதுதான்னு பிரிக்க முடியாது - எல்லாமும், முக்கியமாய் அந்த நாணமும் நளினமும்.''

''போதும். இதென்ன ஸர் ஆராய்ச்சி...''

சிவந்த முகத்துடன் தடுத்தாள் சங்கவி.

''ஆங்... இதேதான்... இப்பவுள்ள பெண்களுக்கு இந்த வெட்கம் மறந்து போச்சே...''

''ஆமா... நாங்க உங்களுக்கு எங்கக் கூச்சத்தை ஏன் காட்டிக்கனும்?''

''தாராளமாய்க் காட்டலாம், நீரு - லோ ஹிப், ஹால்ட்டர் நெக்குனு நீங்க காட்டற உடம்பை விட, இந்தக் கூச்சம் பார்க்க இதமாயிருக்குது...''

இரவு உணவிற்குப் பின் தாங்கள் இருவரும் மட்டும் தனித்திருந்ததை உணர்ந்த சங்கவிக்குள் வெட்கம் குறுகுறுத்தது.

''நான் படுக்கப் போறேன் - மணி பத்தாச்சே...'' விலகினான். மிக இயல்பாய் அவனது தோளைத் தொட்டுத் தடுத்தான்.

''ப்ளீஸ்... இரு, சவி... கரையில் நிற்கும் பழுதான கப்பலும், ஓலைக் குடில்களும் நூதனமாய் இல்லை...?''

கருப்பு நிழலாய், ராட்சசத்தனமாய் நின்ற கப்பல் அவளுக்குத் திகிலாய்ப் பட்டது... அதைவிடத் தோளில் கிடந்த அவனது கை... விலக முயன்றாள் -

விலகி விடுவாளோ என்ற அச்சத்துடன் அவளை இழுத்து இறுக்கினான்... பலமுறை வியந்த அவனது மார்பில் தான் ஒண்டி, ஒட்டிக் கிடந்தது அவளைக் கிளற வைத்தது... அவனது வெப்ப சுவாசத்தில் தன் உடல் மெழுகாகி உருகுவது போன்ற சுகம்.

நெற்றி, கன்னங்கள், மூடிய விழிகள் என்று இவளது முகத்தை முத்தமிட்டு அளந்தன, அவனது உதடுகள்... அதே வேகத்தில் கைகளும் கழுத்து, முதுகு, புஜங்கள் என்று தழுவிப் படர, இவள் நிலை குலைந்தாள் -



தனக்குக் கிடைக்கும் இதே இன்பத்தை அவனுக்கும் தர வேண்டுமென்ற பரபரப்பில் அவனது உடலில் படர்ந்து இறுக்கின இவளது மெல்லிய விரல்கள்...!

இருவரது மூச்சிலும் வேகமும் வெப்பமும் கூடியது. உள்ளே எரிந்த மோகத் தீக்கு வெறும் முத்தங்கள் போதாது என்று இருவருமே உணர்ந்து தவித்தனர்.

''எனக்கு நீ வேணும், சவி...'' கெஞ்சினான்... ''முழுசாய் வேணும்...'' காமப் புகைக்குள் மூச்சிரைத்தவளுக்குள் சின்னதாய் ஒரு வெளிச்சம்... மெல்லிசாய் ஒரு குரல்...

'காவ்யாவிடமும் இதே போலத்தான் கெஞ்சியிருப்பான் - இதே அணைப்பு... இத்தனை முத்தங்கள்... நீயும் உன் தலையில் மண்ணள்ளிப் போட்டுக் கொள்ளாதே, சங்கவி...'

பாம்பைத் தொட்டது போல உதறி விலகினாள்... தன் அறைக்கு ஓடிப்போய்க் கதவை அறைந்து பூட்டினாள்...

## 14

ஒருவாறு மனம் நிலைப்பட, கடிகாரத்தைப் பார்த்தாள் - மணி பதினொன்றைத் தாண்டியிருந்தது...

நீரஜா எங்கே?

இருவரும் சேர்ந்து தங்க வேண்டிய இந்த அறையில் நள்ளிரவு ஆகப் போகும் வேளையிலும் நீரஜாவைக் காணவில்லை என்றால்...

தன் உணர்வுகளை எல்லாம் மூட்டைக் கட்டி வைத்து விட்டு எழுந்தாள் - திறந்த கதவின் பின்னே இன்னும் கெஞ்சலுடன் சக்ரவர்த்தி நிற்கவில்லை... கடலின் இரைச்சலும், கருத்த கப்பலும் மட்டுமே...

நெருடினாலும் கடற்கரை ஓரமாய் நடந்தாள்..., யாருமில்லை... நீரஜாவைக் காணவில்லை என்பதைச் சொல்ல வேண்டியது சக்ரவர்த்தியிடம்தான் என்றாலும், அவளைப் பார்க்கும் மனமின்றி அரவிந்தனைத் தேடிப் போனாள். நடுவே நின்ற நீண்ட கட்டடத்தில் தன் அறை முதலாவது என்றவள் சொன்னதாய் ஞாபகம்....

நல்ல வேளையாய் அறையின் கதவு திறந்தேயிருந்தது - உள்ளே சன்னமான இசை... அதையும் மீறி நீரஜாவின் குரல் வசனம் போல நீளப் பேசியபடி...!

நிம்மதியும் கலக்கமும் ஒருங்கே அவளைக் கடைந்தன.

ஆக நீரஜா இங்கேதான் இருக்கிறாள் - ஆனால் இந்நேரம் அவளுக்கு இங்கென்ன வேலை?

''என்ன அர்விந்த் - இஸிட் ஓ.கே.?''

''நிச்சயமாய். உன்னிடம் ஸ்பார்க் இருக்குது... ஊதிப் பெரிசாய் வளர்க்கணும்... மனசை வேண்டாதவற்றில் அலைபாய விடாமல்...''

''அரவிந்த்...'' சங்கவி குரல் தந்தாள்.

''கம் இன்!'' - அழைப்பு இயல்பாகவே வந்தது.

''நீரஜாவைக் காணலையேன்னுதான் வந்தேன்.''

''அர்விந்த் இருக்க என்ன பயம்? சங்கவி, என்னால் நடிக்க முடியும்னு நினைக்கறார்... அவர்!''

''நல்லது... ஆனா இப்ப மணி...''

''ஆமாம், நீரஜா - நாடகம், கலைன்னா எனக்குச் சமய சந்தர்ப்பம் மறந்துதான் போகுது... நீங்க ரெண்டு பெண்களும் கிளம்புங்க...''

''இப்பதான் சங்கவியும் வந்தாச்சே, பிறகென்ன, என்னைக் கல்கட்டா குருஜியிடம் கூட்டிட்டுப் போவீங் களா அர்விந்த்?''



''பாஸ் சரின்னா நிச்சயம் அழைத்துப் போறேன். பெண்கள் முதலில் நடனம் கற்பது நல்லது. அது ஒரு நளினம் தரும். முக பாவங்கள் எளிதாகும். மேடைப் பயம் விலகும்... பிறகு நாடகத்திற்குப் போனால் பிரகாசிக்கும் வாய்ப்புக் கூடுதல்.''

''எத்தனை வருஷமாகும்...?''

''நோ பெயின் நோ கெய்ன் - மந்திரத்தால் மாங்காய் மடிக்கு வராது - சிராய்ப்போடு மரம் ஏறணும்... சில பல வருஷங்கள் ஆகலாம்.''

''அப்ப சக்கு அத்தான் தப்பிச்சுட்டார்...''

''எப்படி?''

''அவரை, ஏன் - யாரையும் இப்போதைக்குக் கல்யாணம் பண்ணிக்கப் போறதில்லை நான் - அர்விந்த், இந்த இசையில், அதற்கேற்ப ஆடறப்ப, ஏதோ ஒரு கதாபாத் திரமாய் என்னையே உருவகிச்சு நடிக்கறப்ப, எனக்கு சந்தோஷமாயிருக்குது... அதைவிட ஆங்...நிம்மதியாய் இருக்கேன்... இப்ப எனக்கு வயசு பதினேழு... இன்னும் அஞ்சாறு வருஷம் போகட்டுமே... பிறகு இன்னுமொரு கலைஞனாய்ப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக்கலாம்...!''

சங்கவியால் இந்த மாற்றத்தை ஜீரணிக்க முடியத்தான் இல்லை. ஒருதலைக் காதலிலிருந்து நீரஜா தப்பினால் என்றிருந்தாலும்... இப்படியுமா இவள் மனம் மாறும் என்ற வியப்பு.

தங்கள் அறைக்குத் திரும்பும்போது இப்படி ஒரு மாற்றத்திற்கான காரணமும் விளங்கியது.

''ஆச்சரியமாய் இருக்கில்ல, சங்கவி? எனக்கே ஆச்சரியம்தான். நான் அத்தானைப் பிடிச்சுத் தொங்கியது பயத்தால் சங்கவி... எனக்குன்னு வேறு யாருண்டுங்கற

பயம்! இது தெரிஞ்ச, என் கடந்தகாலத்தை அறிந்த, என் மேல் அன்பு காட்டற குடும்பம்... அத்தானைக் கல்யாணம் செய்துகிட்டா நானும் அங்கே ஐக்கியமாகி... கோழி இறக்கைக்கு அடியே பம்மி இருக்கும் குஞ்சு போலப் பாதுகாப்பாய் இருப்பேன்ங்கற ஆசை... ஆனா...''

''ஆனா?''

''அரவிந்த் சொன்னார், பிறரைத் தொங்கி நாம் நம்ப வாழ்வை நடத்தக் கூடாதுன்னு... நம் காலில் நிற்கணும்னு...''

''உண்மைதான்.''

''உங்களுக்குக் கூட அப்பா, அம்மா எல்லாரும் உண்டு. ஆனா நீங்க படிச்சு, சுயமாய்ச் சம்பாதிச்சு நிற்கறீங்களே...''

சங்கவி சிறு பெண்ணாய்த் தோன்றிய நீரஜாவின் கூந்தலை நீவி ஒதுக்கினாள்.

''கலை,கல்வி இதெல்லாம்தான் நம்மைக் காப்பாற்றும்னார், அர்விந்த் -

''வெள்ளத்தால் அழியாது... வெந்தணலால் வேகாதுன்னு ஒரு தமிழ்ப் பாட்டும் உண்டாமே?''

''ம்ம்... நம் திறமைகளை வளர்த்துக் கொண்டால் நமக்கே நம் மேல் ஒரு நம்பிக்கை வரும். வாழ்வதில் ஒரு திருப்தி - நாளையைப் பற்றிய எதிர்பார்ப்பு - சாதிக்கலாம் என்ற உற்சாகம்...''

''வாவ்! நீங்களும் பிரமாதமாய்ப் பேசறீங்க, சங்கவி!'' அர்விந்தும் இதே ரீதியில் பேசினார் - இப்படியிருந்தால் பிறகு தனிமை, பயங்கரப் பிரச்சனையே நம்மை அண்டாது - வெற்றியாளர்களின் பின்னே பத்துப் பேரேனும் நிற்பார்கள்ன்னதும் யோசித்தேன்... எனக்குப் படிப்பை விடக் கலைகளில் ஈடுபாடு. ஆக...''



''ஆல் த பெஸ்ட் நீரஜா...''

உடை மாற்றிப் படுத்த நிமிஷமே நீரஜா தூங்கிவிட, சங்கவி விடியும் வரை விழித்துக் கிடந்தாள்.

காலை இரு பெண்களும் குளித்து உடை மாற்றிய போது, மணி பத்து.

எளிய காலை உணவை அவர்களுக்கு அறையிலேயே கொண்டு வந்த அர்விந்த்,

''மதிய உணவு வரை நாம் இங்கே இருக்கலாம் - அதற்கு முன்பே போகணும்ன்னாலும் சரின்னார் எம்.டி.!'' அறிவித்தான்.

''அத்தானோடு சேர்ந்தே போயிடலாமே...''

''பாஸ் காலை எட்டுக்கெல்லாம் போயிட்டார்.''

நெஞ்சுக்குள் குத்தாய் விழுந்தது அச் செய்தி!

''ஏன்... ஏதும் அவசரமா?''

''தெரியலை... அவசரம் இல்லாவிட்டால் அப்படிக் கிளம்பி யிருக்க மாட்டார் - நேற்றிரவு கூட ரிலாக்ஸ்டாய் இருந்தாரே...''

அதன் பிறகு நடந்தது பிறருக்குத் தெரியாதே... ஆனால் இப்படிச் சொல்லாமல் கிளம்பியது அவனது கசப்பைக் காட்டியது. மலேஷியா போவதை அத்தனை சரசமாய் அறிவித்தவன் இப்போது இப்படி மாயமாய் மறைய வேணுமா என்ன?

வீட்டில் நுழைந்தவளுக்கு ஹாலில் யாரும் இல்லாதது பெரும் நிம்மதியாகவே இருந்தது. ஜானகி இருந்திருந்தால் வண்டாகிக் கேள்விகளால் துளைத்தெடுத்திருப்பாள்.

'ஏம் மூஞ்சி சரியில்லை?'

'யாரோடு வந்தே?'

'நேத்து ராத்திரி தூங்கவே இல்லியா?' என்று ராவி எடுத்திருப்பாள். சத்தமின்றி மாடிக்கு ஏறினாள்.

சமையலறையிலிருந்து பேச்சும் சிரிப்புமாய் மணத்தன - குரல்களைக் கொண்டு விஜய், ஜானகி, மாமி மூவரும் உள்ளே இருப்பது புரிந்தது. எத்தனை சகஜமான பேச்சு!

ஏதோ வருஷக்கணக்காய் ஒருவரை மற்றவர் அறிந்தது போல... நேற்றிரவு தன்னைத் தழுவி முத்தமிட்டவன், இன்று காலை ஒரு வார்த்தையும் இல்லாமல் ஓடிமறைந்த அவலம் புதிதாய் மறுபடி மனதைக் குத்தியது.

ஃபோன் அலற, சற்றுத் தடுமாறினாள் சங்கவி... "அடடே... ரெண்டு நாளாய் மௌன விரதமிருந்த கறுப்புச் சாமியார் வாய் தொறந்துட்டார்!" என்றபடி ஃபோனை எடுக்க வந்த மாமியின் முகம் இவளைக் கண்டதும் மலர்ந்தது-

"என்னடி... பூனையாட்டம் படியேறுற?" விசாரிப்புடன் ஃபோனிலும் குரல் கொடுத்தார். "ஹலோ?"

"அடடே... காவ்யாவா... தோ சவிட்ட கொடுக்கறேன்... இப்பத்தான் வர்றா. ஆமாம் - ரெண்டு நாளாய் இங்க போன் சரியில்லை. சிணுங்கும்... எடுத்தா ரெண்டு வார்த்தையைத் தந்துட்டு கொரகொரங்கும்..."

ரிசீவரைத் தன் காதிற்குக் கொடுத்த சங்கவி -

"ஹலோ காவ்யா - எப்படியிருக்கே?" விசாரித்தாள்.

"சவி... நாளை எனக்குக் கல்யாணம்!"

தப்பாய்க் காதில் விழுகிறது என்பது போலச் சந்தேகமாய்க் கேட்டாள்.

"என்னது?"

"மும்பையிலே ருந்து பேசறேன், சவி... ஃபோன் கிடைக்கலை... நாளை எனக்குக் கல்யாணம்..."



இன்றும் அதிர்ச்சி தாளாமல் விக்கித்தே நின்றாள், சங்கவி.. சந்தோஷப்பட முடியாதபடி சஞ்சலம் மனதுள்...

உடையை மாற்றுவது போல உள்ளத்தையும் மாற்றும் வித்தை காவ்யாவிற்கும் கைவந்து விட்டது போலவே!

மூன்று வாரங்களுக்கு முன்பு நொறுங்கிய அப்பளமாய்க் கிடந்தவள் இப்படித் துள்ளுவதென்றால்...

"சந்தோஷம், காவ்யா... நாளைக்கு மும்பையில்... சரி... மாப்பிள்ளை யாரு?"

"யேய்... விளையாடறல்ல - அவர்தான்ப்பா..."

"அவர்னா?"

இவளது உடம்பு சில்லிட்டது.

"சக்ரவர்த்திதான்!"

நாக்கும் உறைந்து விட்டது போலச் சிலையாய் நின்று விட்டாள் இவள்.

## 15

"உம் முகமே சரியில்லை... அதான் அவரை அனுப்பிட்டு வர்றேன்... நாளை காலை மும்பை போயிடறார், விஜய்..."

"ம்ம்..."

'சொல்லு... என்னாச்சு...'

"நாளைக்கு மும்பையில் நம்ப காவ்யாவின் கல்யாணம்."

நம்ப முடியாமல் விழித்தாள், ஜானகி.

"சக்ரவர்த்தி காலைல கிளம்பிட்டார். எங்கேன்னு ஏதும் சொல்லலை... இப்ப இந்த நியூஸ்..."

''அப்ப சக்ரவர்த்திதான் மாப்பிள்ளையா? காதுல சரியாய் விழுந்ததா?''

''ம்ம்...''

நேற்றிரவு தன்னிடம் சரசம் பண்ணியவனின் மனதில் நின்றது காவ்யாதானா? அவளை நினைத்தபடியா தன் முகத்தை எச்சில் பண்ணினான்?

கூசியது உடல்.

இவன் மட்டும் அந்நேரம் விலகி ஓடாவிட்டால் வலையில் விழுந்த மானாகித்தானே இருப்பாள்!

இவளைப் பழி வாங்குவதற்காய்த்தான் இந்தத் திடீர்க் கல்யாணமா? நீ இல்லாவிட்டால் என்ன, என்னால் கண் சிமிட்டும் வேளைக்குள் வேறு ஒருத்தியைத் திருமணமே செய்யக் கூடும் என்ற சவாலா? இவளது எண்ணங்களைச் சக்ரவர்த்தி ஆண்டிருக்க, ஜானகி மணப்பெண் காவ்யாவிற்காய் வருந்தினாள் -

''இதென்ன திடீர் ரசம்மாதிரி, திடீர்க் கல்யாணம்? ஒரு தரம் தப்பிச்சுட்டோன்றதை உணராமல் இந்தப் பொண்ணு மறுதரம் ஆபத்தில் காலை வைக்கிறாளே... முட்டாள்...!''

''அவர் மனம் மாறிட்டதாய் ஏதோ சொன்னாள்...''

''கல்யாணமான மூணாம் நாள் அது மறுபடி மாறும்... அப்ப என்ன செய்வா இவ?''

''ஒன்னுமே புரியலை, ஜானு...''

''காவ்யா நம்பரைக் கொடு... நான் பேசறேன்...''

''நாளைக் கல்யாணங்கறப்ப... நம்மை மும்பைக்கு வரச் சொல்லதான் இந்த ஃபோன். ஆக மற்ற ஏற்பாடுகள் அங்கே மும்முரமாய் நடந்திட்டிருக்கும்.''



ஃபோன் மறுபடி அழைத்தது.

பாய்ந்து எடுத்தது ஜானகிதான்.

''நினைச்சேன், காவ்யா... உங்ககூடப் பேசணும்னு...''

சங்கவி உதடுகளில் விரல் வைத்துப் பேச வேண்டாம் என்பது போல எச்சரிக்க, பேசும் வாய்ப்பையும் காவ்யா தரவில்லை... உற்சாகமாய்ப் பேசுவது கேட்டது...

அத்தனையையும் கேட்டு முடித்த பின் -

''சங்கவி உன் சிநேகிதின்னு அவர்ட்ட சொன்னியா?'' கேட்டாள்.

''இன்னுமில்லை... அது அவருக்கு நான் தரும் ஆச்சரியமாய் இருக்கட்டுமே...'' மறு முனையின் பேச்சு சிரிப்புடன் தெளிவாகவே கேட்டது.

''அதிர்ச்சி!'' என்று முணுமுணுத்த ஜானகி வாழ்த்துக் களுடன் பேச்சை முடித்தாள்.

''மாறிட்டார்னு அடிச்சுச் சொல்றா... காவ்யா தான் கர்ப்பம்னதும் மிரண்டுட்டாராம் சக்ரவர்த்தி - அதுவரை விவரமான பெண்களுடன் உறவு வைத்திருந்தவருக்கு இது எதிர்பாராத ஷாக். குழந்தை, கல்யாணம்ங்கற வார்த்தைகளில் அலறி ஒதுங்கினவர் மனசு இப்ப இளகிடுச்சாம். காவ்யாவின் அப்பா தற்கொலை செய்து கொண்டது, அவ தன் குழந்தையைச் சுமக்கத் தயாரா யிருந்தது, அதை இழந்ததும் விரக்தியில் விழுந்தது எல்லாம் கேள்விப் பட்டவரின் மனசு மாறிடுச்சாம்...''

''ஒரே இரவிலா? நேற்றிரவுவரை அவர் கருத்தரங்கில் கல்யாணம் பற்றி எந்த சிந்தனையும் இல்லாமல்...''

''எந்தப் புற்றில் என்னென்ன பாம்போ! அவரு சிந்தனையை நீ என்னத்தைக் கண்டே?''

''ம்ம்... மறுநாள் கிளம்புவார் என்பதுகூட எனக்குத் தெரியாதே...'' ஆகக் கல்யாணத்திற்கு முன்பு, அழிந்து விட்டதாய் நினைத்த பாரம்பரிய ரகப் பெண் ஒருத்தியையும் அனுபவித்து விடலாமென்றுதான்... அந்தத் தீவிற்குத் தன்னை அழைத்துச் சென்று... இளக வைத்து... முதுகுத் தண்டு சொடக்கியது!

ஆக நாளை மும்பைக் கோயிலில் திருமணம். போய் அட்சதை தூவ மனமில்லை. வாஸ்தவத்தில் தோழிக்காக மகிழ வேண்டிய மனது, தன்னை எண்ணி மருகுகின்றது... தப்புத்தான்..

ஆனால் இப்படிப்பட்ட ஒரு எத்தனோடு காவ்யா நிம்மதியாய்க் காலம் கழிக்க முடியுமா என்ன?

ஆனால் கல்யாணம் என்றாகி விட்டால், அப்படிச் சலபமாய் அவன் அறுத்துக் கொண்டும் விலக முடியாது.

''கால்கட்டுன்னு போட்டுட்டா காளை அடங்கிடும்னு வை... மாமி... இங்க வாங்க.... சேதி தெரியுமா, உங்களுக்கு... நீங்க மோர்க் குழம்பு செய்துபோட்ட காவ்யாவுக்குக் கல்யாணம். பெரிய புளியங்கொம்பு மாப்பிள்ளை... நம்ப சவியோட பாஸ் சக்ரவர்த்தி...'' கேட்டவளின் நெஞ்சை அந்த வார்த்தைகள் அறுத்துத் தள்ளின... உதட்டைக் கடித்து உள் துடிப்பை அடக்கினாள், சங்கவி...

## 16

''ஸ்கூல் பிள்ளைகளிடம் கூட இருக்குது.... ஜாமெட்ரி பாக்ஸ் லெவலுக்கு வந்தாச்சு - நம்மிடம் இல்லைன்னா எப்படி?''

எதைப்பற்றிப் பேசுகிறாய் என்பது போல ஜானகியை நோக்கின சங்கவியின் விழிகள்.



அதிலிருந்த விரக்தியின் வெறுமை ஜானகியைச் சங்கடப்படுத்தியது. துள்ளும் மானாட்டம் வந்தவள் அம்பு பட்டு விரைவில் உயிர் போகக் கிடக்கும் ஒரு உயிர் போலல்லவா சுருங்கி விட்டாள்...!

''ஸெல்ஃபோனைச் சொல்றேன்.''

''ம்ம்... தேவைப்படலைன்னு சொல்லுவே...''

''இப்ப தேவையோன்னு பட்டது... உனக்கு உன் பிரைவஸியை அது அபகரிச்சிடும்னு வாங்க மனக் கெடலை நீ...''

''நம்ப முதல்வரிடமே ஸெல் கிடையாதாம் - ஆனா எட்டாவது படிக்கிறதுங்க சதா கழுத்தை இடுக்கி அதில் பேசறதும், எஸ்.எம்.எஸ். அனுப்பி விரலைத் தேய்ச்சுக்கறதும்... ம்ப்ச்...''

தோளை - அது என் பிரச்சனை அல்லவே என்பதாய்-க் குலுக்கி விட்டு, வேலைக்குள் மறுபடி மூழ்க முயன்றாள், சங்கவி.. இந்த ஒரு வாரத்தில் அவளது அழகு தொலைந்திருந்தது- பிசாசுபோல இரவிலும் தொடர்ந்த வேலை, அவளது மெருகை உறிஞ்சியிருந்தது.

உற்சாகமாய் வேலை செய்வது, தனி -

அதில் செய்பவரின் திறமையும், செய்யும் வேலையில் நேர்த்தியும் தெரியும். உடலையும் பாதிக்காது. இதுவோ சக்ரவர்த்தியை இனிக் காணவே கூடாது - அவனும் காவ்யாவும் தங்களது ஒரு வாரத் தேனிலவை முடித்துத் திரும்பும் முன் தான் ஒப்புக் கொண்ட வேலையை முடித்து ஊருக்குப் போய்விட வேண்டுமென்ற வெறி... தவிப்பு...

காவ்யாவின் கல்யாணத்தன்று எழுந்தவளுக்குக் கடும் தலைவலி - முகம் கழுவிவிட்டு வலி தாளாமல் மறுபடி படுக்கையில் விழுந்தவளை மாமியின் குரல் எழுப்பியது.

'சவி... உனக்கு ஃபோன். உன் பாஸ் பேசறார், பாம்பேலேர்ந்து...'

'நான் வீட்டில் இல்லைன்னு சொல்லிடுங்க, மாமி...' தலையைத் தலையணைக்குள் புதைத்தவளுக்கு அழுகை பொங்கியது.

எதற்கிந்த அழைப்பு? அவன் மும்பையிலிருப்பது இவளுக்குத் தெரியாது என்றா? எதற்காய் அங்கு அவன் ஓடியிருக்கிறான் என்பது கூடத்தான் இவளுக்குத் தெரியும்...!

அதிசயமாய் ஜானு வளவளவென்று பேசிக் குடையவில்லை காபி, டோஸ்ட்டை இவளது கையில் கொடுத்து விட்டு -

'நானும் ஸ்கூலுக்கு லீவ் சொல்லிடவா?' என்று கேட்டதோடு சரி. 'போ ஜானு.... எனக்குத் தலைவலி. அவ்வளவுதான் - படுத்து எழுந்தால் சரியாயிடும்...'

அன்று மாலை காவ்யாவிடமிருந்து வெகு குதூகலத் துடன் வந்தது அடுத்த ஃபோன்-கால்.

'ஸிம்பிளாய் ஆனால் அருமையாய் நடந்துச்சு, சவி! எங்க கல்யாணம் - அவர் குடும்பத்தாரும் வந்துட்டாங்க!' என்று கல்யாண விவரங்களைச் சொன்னவள், 'ஒரு வாரம் மால்தீவு போறேன் - தேனிலவிற்கு!' கூச்சத்துடன் முடித்தாள்.

'எப்ப கோவா வருவீங்க, காவ்யா?'

'மால் தீவிலிருந்து நேரே அங்கதான் - ஏதோ வேலை யிருக்காம் - உன் வேலையைத்தான் குறிப்பிடறார்னு நினைக்கறேன்! கெஸ்ட் ரிப்போர்ட் பிராஜெக்ட் பற்றிக் கேட்டேன். 'அருமையான ஐடியா, பிரமாதமாய் உரு வாகுது!'ன்னு புகழ்ந்தார்... இன்னும் நீ என் நெருங்கின தோழிங்கறது மாப்பிள்ளைக்குத் தெரியாது...'



'ஆல் த பெஸ்ட் காவ்யா!'

வாழ்த்தி சம்பாஷணையை முடித்தாலும், மனம் வெம்பியது. சென்னை திரும்பி அம்மாவின் மடியில் தஞ்சமடைய வேணும். அப்பாவின் கனத்த குரலில், தங்கையின் பரிவான விசாரிப்பில், இந்த மன ரணம் சற்று இதப்படலாம்.

அங்கே யாருக்கும் இங்கு நடந்த நாடகம் தெரி யாதே... ஆகத் தானுமே அத்தனையையும் மறக்க முயற்சியேனும் செய்யலாம்...

தாய்லாந்து உணவகத்தில் அமர்ந்திருந்தனர் அவளும் அரவிந்தனும் - இவளது வேலைக்கு உதவிய மேலும் மூன்று பெண்களும் சேர்ந்து இவளுக்குத் தரும் பிரிவு உபசார விருந்து அது.

'எதிர்பாராத கூட்டம் இன்று. ஆக நாம வெளியே போக முடியாது - நம் ஹோட்டலின் 'தாய்' ரெஸ்ட் டாரன்ட்டிலேயே சாப்பிடுவோம் - தேங்காய்ப் பாலும் மூலிகைகளும் சேர்த்துச் சமைத்த சிக்கன் அபாரமா யிருக்கும்.'

மறுப்பது மரியாதையாய் இராது என்ற ஒரே காரணத்திற்காய்த்தான் சம்மதித்தான் -நுழைவு வாசலில் அமைக்கப்பட்ட சிறு திண்டில் அமர்ந்து மெல்லிய பொம்மை போன்ற ;தாய்லாந்துப் பெண் ஒருத்தி காய்கறி, கனிகளை விதவிதமான வடிவங்களில் செதுக்கிக் கொண்டிருந்தாள் - அவளைச் சுற்றிலும் ஆர்வப் பார்வையோடு ஒரு ஸ்வீடன் நாட்டுப் பயணிகள் கூட்டம்.

உடைந்த ஆங்கிலத்தில் அப் பெண்ணின் விரல் வித்தை;யைப் பாராட்டியபடி.

''பாலோடு நான் போன வருஷம் ஸ்வீடன் போயிருந் தேன் - அவங்க கலாச்சாரமும் அற்புதமானதுதான். ஒரு

வீட்டிற்கு எங்களை விருந்துக்கு அழைச்சிருந்தாங்க. ஒரு வயதான தம்பதியர். எங்களை வீட்டுக்குள் அழைத்ததும் வழியனுப்பியதும் அவர்களது பின்வாசல் வழியாய்த்தான் -அதாவது அவர்கள் சமையலறையின் வழியே!''

''ஏன் அப்படி?''

''எங்களுக்குன்னு நாங்க தனியே ஏதும் சமைத்து எடுத்து வைக்கலை - உங்களுக்கு மறைவான ரகசியம் ஏதும் எங்களிடம் கிடையாது என்பதைச் சொல்லும் முறையாம் அது... அவங்களின் பண்பாடு.''

ஆனால் சக்ரவர்த்தியிடம் அப்பண்பு இல்லையே... தன் மனதுள் என்ன உண்டு என்பதை இவளிடம் கடைசி வரை காட்டாமல் மறைத்து... நல்லவேளையாய்த் தன் உடலையும் அவனிடம் இழக்கவில்லை...

வந்த உணவு - அரவிந்தன் சொன்னது போல - அற்புதந்தான். ஆனால் இவளுக்குத்தான் ருசிக்கவில்லை.

''கோவா உனக்கு ஒத்துக் கொள்ளவில்லை போலவே, சங்கவி - வந்தபோது உன்னிலிருந்த ஒளி, உற்சாகம் இப்போது காணலியே...'' பரிவாய்ச் சொன்னார் மாகி.

''அழகான ஊர் - அருமையான மக்கள்.. போர்த்து கீசியக் கட்டடக் கலை, சர்ச்சுகள் எல்லாத்தையும் ரசித்தேன்... ஆனாலும் வீட்டு ஏக்கம் இருக்கத்தான் செய்யுது...''

''நாளை சென்னை கிளம்பறே இல்லை?''

''ம்ம்... வேலை முடிஞ்சிடுச்சே.''

''மதியம் ஃபிளைட்டுக்கு டிக்கெட் புக் பண்ணியாச்சு, சங்கவி. ஹோட்டல் வேன் உன்னை ஏர்-போர்ட்டுக்குக் கொண்டு போகும்.''

''தாங்க்ஸ், அரவிந்த்... எல்லாமே... ஏதோ கனவு போலிருக்குது...''



''ம்ம்... உன் டான்ஸ், பிரமாதமான வேலைத் திறன், வித்தியாசமான தமிழ் அலங்காரம்...''

''நீரஜாவையும் மறக்க முடியாது. நல்ல பெண்.''

''பத்து வீட் வசனங்களை மனப்பாடம் செய்யத் தந்திருக்கேன் - ஏற்ற இறக்கங்களோடு உருப்போட்டுட்டு இருக்காங்க.''

புன்னகைத்தான்.

''உங்க அன்புக்கு நன்றி...வீடு போய்ச் சேர்ந்த பிறகு ஃபோன் போடறேன்!'' விடை பெற்றுக் கொண்டாள்.

பெண்கள் தங்களது வேலைகளுக்குத் திரும்ப, அரவிந்தன் மட்டும் இவளோடு நடந்தான்.

''பேக்கிங் முடிஞ்சாச்சா?''

''அதிகமில்லை... இன்றிரவு முடிஞ்சிடும்... நான் முடிச்ச வேலையைப் பார்த்திடுங்க - ஏதும் கேள்விகள் இருந்தால் காலை மாமி வீட்டிற்கு...''

''ஜானகி மேம் அவங்க ஸெல் நம்பரைத் தந்திருக்காங்க... நாளை அவங்களும் வீட்டில் இருப்பதால் அதற்கே அழைக்கிறேன் எம்.டி. வந்தால்... உங்களைப் பற்றி...''

''கிளம்பட்டுமா, அரவிந்த்... களைப்பாய் இருக்குது...''

''ஜானியின் டாக்ஸியை உங்களுக்காய் நிறுத்தி வச்சிருக்கேன்'' - செயற்கை நீரோடையைக் கடப்பதற்காய்ப் போட்டிருந்த சின்ன வளைவுப் பாலத்தில் நடந்தபோது - மரப்பாளங்களால் அமைந்த அதில் ஒரு பாளம் விரிசல் விட்டுப் பிளந்தது...

தடுமாறியவளின் தோளைப் பற்றி, மிச்ச பாலத்தைக் கடக்க வைத்தான், அரவிந்தன்.

''மெயின்ட்டனென்ஸ் சரியில்லையே, அரவிந்த்...'' இலகுவாய்ச் சிரிக்க முன்றாள் - மறுநாள் இரவு தாய் வீட்டில் இருப்பாள் என்றாலும், இப்போதே அவனது புத்தி இழக்கவிருக்கும் இந்தக் கனவிற்காகவும் ஏங்க ஆரம்பித்திருந்தது.

''உடனே பாலத்தைக் கவனிச்சிடறேன். நீங்க உங்க சிரிப்பை, உற்சாகத்தையும் மெயின்டெய்ன் பண்ணனும், சங்கவி- எப்போதும் அவற்றை இழக்கவே கூடாதுன்னு வாழ்த்தறேன்...''

நிஜப் பரிவுடன் வந்த அந்த அன்பு வார்த்தைகளில் இவளுக்கு அழுகை முட்டியது.

டாக்ஸியில் போய் வீடு சேர்ந்ததும், அறைக்குப் போய்க் கவிழ்ந்து படுத்துவிட்டாள். பெட்டியை அடுக்குவதற்கு ஆவியில்லை. உடம்பே தொய்ந்திருந்தது.

அதிகாலையே எழுந்து ஓரளவு பெட்டிகளை அடுக்கிய பின், குளித்து, வந்த தினத்தன்று போட்ட நீல ஜீன்ஸ், சிவப்பு டாப்ஸ்லாக்குள் நுழைந்தாள்... இந்த உடை தனக்குப் பொருந்தாது போலப்பட... மாற்றவா வேண்டாமா என்று அல்லாடிய நேரம் மாடிப்படியில் யாரோ ஏறும் சத்தம்...

வருவது ஜானகி இல்லை...

முரட்டுக் காலணிகளுடன் அந்நியக் காலடிகள்... பிடரியில் சிறு சிலிர்ப்புடன் காத்திருந்தாள் - திறந்திருந்த அறைக் கதவை ஓடிப்போய்த் தாழிட்டு விட மனம் பரபரத்தாலும் கால்கள் நிலத்தில் வேரூன்றியது போலாகி அசைய மறுத்தன.

வாசலை அடைத்தபடி நின்ற உருவத்தை நம்ப முடியாததாய் வெறித்து நின்றாள்.

''நீங்க... நீங்க எப்படி?''





''உன்னைப் பார்க்கத்தான் சங்கவி... ஏன் ஃபோனில் பேச மறுத்தே?'' அவனது கண்கள் அவளது உடை அலங்காரத்தை ஆராய்ந்தன - விரித்திருந்த கூந்தலை, வெற்று நெற்றியை ஒரு சுழிப்புடன் கவனித்த பின் கேட்டான்.

''ஆக நான் உன்னை முன்பே பார்த்தது போலுண்டுன்னு சொன்னது சரிதான் - இதே உடையில்தான் முதலில் உன்னை ஏர்-போர்ட்டில் பார்த்தேன்... ம்ம்?''

பதில் பேச முடியாத திகைப்பில் நின்றாள்.

''ஆக இதுதான் ஒரிஜினல் சங்கவி... இத்தனை நாள் போட்டது வேஷம்!''

பெண்களை ஏமாற்றும் கபடன் இவனா தன்னிடம் வேஷம் பற்றிப் பேசுவது? வெறுப்புடன் நின்றாள்.

களைத்து அலுத்திருந்தது அவனது தோற்றம். தேனிலவைத் திகட்டத் திகட்ட அனுபவித்த களைப்பு போலும் -கசப்பாய் எண்ணினாள்.

''ஏன் என்னிடம் சொல்லாமல் கிளம்பறே, சவி?''

''ஓ... சொல்லிட்டுத்தான் போகணுமா? டெவில்ஸ் ஹார்பரில் எங்களை விட்டுட்டு நீங்க மாயமானது?''

''அதுபற்றிச் சொல்லத்தான் ஃபோன் போட்டேன்... முந்தின இரவு நம்மிடையே நேர்ந்த... நெருக்கத்தால் கூச்சப்பட்டு நீ என்னிடம் பேச மறுத்திட்டேன்னு நினைச்சேன்...''

அந்த இரவின் ஞாபகத்தில் சிவந்த முகத்தை மறைக்க, பெட்டியை மூடிப் பூட்ட ஆரம்பித்தாள் -

''மாமி, ஜானகி எல்லாம்... கீழே இருக்காங்க...''

''சொல்லிட்டுதான் வந்தேன் - நம்மைத் தொந்தரவு செய்ய வேண்டாம்னு...''

''இது உங்க ஹோட்டல் இல்லை...இஷ்டத்துக்கு உத்தரவு போட...''

''என் உணர்வுகளே எனக்குக் கட்டுப்படலையே, சங்கவி...'' என்றான் சற்றுக் கசப்புடன். ''உன் உணர்வும் எனக்கு அன்றிரவு புரியலை... ஆனால் நேற்றிரவு விளங்கிடுச்சு...''

இவள் மௌனமாகவே நின்றாள்.

''நேற்று ராத்திரி 'தாய்' உணவகத்தின் எதிரே அரவிந்தனின் அணைப்பில் பார்த்ததும் புரிஞ்சுது... அவன் மேலிருந்த பிரியத்தால்தான் அன்று என் அணைப்பு உனக்குப் பிடிக்கலை, இல்லையா?''

நம்ப இயலாத வெறுப்புடன் நிமிர்ந்தாள்.

''முதலின் என் அணைப்பில் மெழுகாய் உருகின நீ பிறகு குளிர் நீரில் மூழ்கினது போல இறுகினது அரவிந்தன் மீதுள்ள ஆசையில்தானே?''

என்ன உளறல் இது?

ஒரு நாள் தன்னைஅணைத்து, மறுநாள் வேறு ஒருத்தியோடு தன் கல்யாணத்தை நிச்சயித்தவனுக்குத் தன்னைக் குற்றப்படுத்த என்ன யோக்யதை உண்டு?

ஒருவாரத் தேனிலவை அனுபவித்த கையோடு இங்கு பிரத்தியட்சமாகித் தன் மீது பழியைப் போடுபவனின் திமிர் கொஞ்சமா என்ன?

''நான் உன்னிடம் இதை எதிர்பார்க்கலை, சங்கவி...''

''நீங்க இவ்வளவுதான்னு நான் எதிர்பார்த்திருக்கணும் - பார்த்தும் புத்தி வரலை...''

வெறுப்புடன் வார்த்தைகளை வழிய விட்டாள்.

அவன் முகத்தின் ஆங்காரத்தைத் தாள முடியாதவன் போல, அவளது தோள்களை இறுகப் பற்றினான். திமிறவும் திராணியற்று நின்றிருந்தாள்.



ஆனால் அவளது முகத்தில் உமிழ்வதைப் போலிருக்கும் அவள் அந்த ஒரு வார்த்தையைச் சொன்னாள். 'காவ்யா... காவ்யா!' அந்தப் பெயர் ஒன்றைக் கொண்டே அவனை அடித்து வீழ்த்தலாம்...

வெறுப்பில் பாறையாய் உறைந்திருந்தவளைக் காணச் சகியாமல் பற்றிய தோள்களை உதறிவிட்டுக் கிளம்பினான்.

தன் உயிரையும் உருவி யெடுத்துத்தான் போனானோ என்னும்படி தொய்ந்தது உடல்... தாள முடியாமல் சரிந்தாள்.

கீழேயிருந்து மோர்க் குழம்பு தாளிக்கப்படும் வாசனை இவளை மெள்ள நனவுலகத்திற்கு இழுத்தது.

போன முறை காவ்யா வந்தபோது வீடு இப்படித் தானே மணத்தது.

''சங்கவி...''

மாமி தலை நீட்ட, இவள் எழுந்து உட்கார்ந்தாள்.

''உன் ஃப்ரெண்ட் வர்ரா... மதியத்துக்கு என்ன சமைக்கணும்னு கூடச் சொல்லிட்டா...''

''யார் மாமி?''

''புதுப் பொண்ணுதான்.''

''காவ்யாவா?''

இவளது முக வெளிறல் மாமிக்குப் புரியவில்லை. ''ஏண்டி புதுசா கல்யாணம் பண்ணதுங்க இப்படி விருந்துக்கு வர்றதுதான். அவளுக்குப் பெத்தவங்களும் இல்லைன்னு ஆயிடுத்து - ஆரத்தி சுத்தி வரவேத்து, வாய்க்கு ருசியாவே செய்து போட வேண்டாமோ?''

''அவ வீட்டுக்காரரோடவா வர்றா...?''

ஒட்டிய உதடுகளைப் பிரித்துக் கேட்கவும் கூடச் சிரமப் பட்டான். "பின்னே அகத்துக்காரரோட வந்தாத்தான் மதிப்பு... நாமளும் கண்ணார ஜோடியாய் அவங்களைப் பார்த்து ரெண்டு நல்ல வார்த்தை சொல்வோமில்லையா?"

"ஜா... ஜானு எங்கே?"

"வடகத்தை வறுத்திண்டிருக்கா... டேபின்ல கண்ணாடி செட்டையும் துடைச்சுப் போடச் சொன்னேன்... கோமஸ்வர மாப்பிள்ளையோன்னோ?"

"ஐயோ மாமி..."

"கார் வந்திடுத்து போலியே... தலையைக் கட்டிண்டு வா... ஆரத்தி சுத்தணும் நான்..."

மாமி கீழே ஓட, இவன் மரமாகி விட்டது போல நின்றான்... ஆனாலும் அப்படியே நின்றுவிட முடியாதென்பதும் தெரிந்தது...

படிகளை இறங்கித் தலை நிமிர்ந்தவளின் புலன்கள் குழம்பின... சிவப்புப் பட்டுப் புடவையில் முகமெல்லாம் மலர நிற்பது காவ்யா.

. சரி...

ஆனால் அவளருகே நிற்பது யார்?

## 17

இழுக்கவோ விடவோ மறந்த சுவாசத்தைச் சற்றுச் சிரமத்துடன் சீராக்கியவன் கை குவித்தான்.

"வணக்கம்! வாங்க..."

அவனும் சற்றுக் கூச்சத்துடன் கைகுவித்து விட்டு... "ஐ'ம் சக்ரவர்த்தி!" என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ள, இவளது தலை மேலும்



சுழன்றது... எதையேனும் பிடித்து நிற்கவில்லை என்றால் கீழே விழுந்து விடுவோம் எனுமளவில்... இவருக்கும் சக்ரவர்த்தியின் ஜாடை இருந்ததுதான்.

ஆனால் சற்றுக் குட்டையும் அகலமுமான உருவம். உடல் உழைப்பில் அதிக ஆர்வமற்றவன் என்பதை அறிவிக்கும் இளந் தொந்தி.

"காவ்யா... இவர்தான் உன்..."

"மண்டு... பின்ன யாரோடு வருவேன்?"

"இல்லை... அவர் வேறு மாதிரி, பெயர்கூட..."

"நான் சுகின் சக்ரவர்த்தி..."

"ஓ... முதல்ல உட்காருங்க..."

அவன் சற்றுக் கூச்சத்துடனேயே அமர, காவ்யா அவசரமாய் நடந்த தங்களின் திருமணம் பற்றியும் இவர்களும் வந்திருந்தால் எத்தனை பூரண மகிழ்வாய் இருந்திருக்கும் என்பது பற்றியும் பேச, சங்கவி சமையலறைக்குள் நழுவினாள்.

இந்த அதிர்ச்சியையும் அவளால் தாள முடியவில்லை. தன் சக்ரவர்த்தியோடு ஜோடியாய்க் காவ்யாவைக் காண மனதைத் தயார்ப்படுத்தியிருந்தவளுக்கு வேறு ஒருவனை அந்த இடத்தில் கண்டதும் பெருங்குழப்பம்.

இவளைத் தொடர்ந்து வந்த ஜானு கிசுகிசுத்தாள்.

"என்ன முகம் இப்படி வியர்த்து வெளுத்திடுச்சு... அந்தச் சக்ரவர்த்தி கொடுக்கற ஆக்ட்டைப் பார்த்தா? உன்னைத் தெரிஞ்சது போலவே காட்டிக்கலையே..."

"ஜானு இவர் என் பாஸ் சக்ரவர்த்தியில்லை..."

இப்போது ஜானகியின் முகமும் வெளுத்தது - 'பின்னே?'

என்னைப் பார்க்க வந்ததுதான்.'

'காலைல

''வேலை விஷயமாய் முக்கியமானதாய்ப் பேச ஹோட்டலிலிருந்து வந்திருப்பதாய்ச் சொன்னார்... ஆக நானாய் அவர் அரவிந்தாய் இருக்கும்னு அனுமானித்தேன்...''

''இல்லை... அவர்தான் ஹோட்டலின் எம்.டி..''

''அப்ப இவர்... இந்த ஆள்?''

''ஷ்ஷ்''... என்ன பொண்டுகளா - விருந்தாள் வந்திருக்கப்ப நீங்க இங்க நின்னு பேசிண்டிருந்தா மரியாதையாவா இருக்கு? சாப்பிட அவங்களை ஜோடியாய் உக்கார வச்சுட்டேன்... முதல்ல இனிப்பு, வடைன்னு பரிமாற ஆரம்பியுங்கோ...''

மாமியின் கணவர் வந்தவர்களுடன் பேசிக் கொண்டிருந்தார். ''காவ்யா உன் பழைய அழகு மீண்டுடுச்சு... கல்யாணக்களையும் சேர ரொம்பப் பிரமாதமாய் இருக்கே...'' இனிப்பு வைத்தபடி இனிமையாய்ப் பேசவும் செய்தாள் சங்கவி.

''ம்... உறவுகளை நான் ரொம்ப சீரியஸாய் எடுத்துகிட்டதில்லை... இவ்வளவு தூரம் மனசொடிஞ்சு போகும் அளவில் காவ்யா என்னை நேசித்தது புரிஞ்சதும் கலங்கிட்டேன்.. முறையான உறவு மூலம் பிறக்கலைன்னாலும் தரிச்ச குழந்தையைப் பெற்று வளர்க்கத் துணிஞ்சிருந்ததால் அவளது அன்பு அசாத்தியமானதுன்றதை உணர்ந்தேன்... இவளை விட ஒரு அருமையான, அன்பான வாழ்க்கைத் துணை கிடைக்காதுன்னு புரிஞ்ச நிமிஷமே கல்யாணத்தையும் நடத்தியாச்சு...''

''சந்தோஷம் ஸர்... இங்கே சக்ரா ஹோட்டலின் எம்.டி.யாக இருந்தவர்... ஏன்னா நான் அங்கு ஒரு மாசமாய் வேலை பார்த்தேன்... கெஸ்ட் ப்ராஜக்ட்னு...''



''ஆஹா... அப்ப நீங்கதான் காவ்யா எனக்காக வச்சிருந்த சர்ப்ரைஸ்ஸா? அந்தப் பிராஜெக்ட் பற்றி துருவித் துருவி விசாரிப்பா... தம்பியும் அப்பாவும் அதைப் பற்றிச் சிறப்பாய்ச் சொன்னதால் நானும் அதைப் பாராட்ட... ஒரேயடியாய்ப் பூரிச்சுப் போவா... இப்பதான் விஷயம் புரியுது...'' சிரித்தான்.

''அப்ப இங்கே இருந்தவர்...?'' ஜானு விடாமல் கேட்டாள்.

''என் தம்பி. மூத்த அதாவது பெரியப்பா பிள்ளைன்னாலும் சிபின் சக்ரவர்த்தி எனக்கு ரெண்டு வயசு இளையவன்... ஆனா ரெண்டு மடங்கு உத்தமன்... பொறுப்பிலும் எனக்கு மூத்தவன்தான் - இப்ப நான் கோவா வந்திருப்பதால் சிபின் மலேஷியா போகத் தயார்.''

''ஓ... அப்ப... அவர்...''

''சில மாசங்களுக்கு இங்கே தலை நீட்ட மாட்டான்.''

ஆக முன்பு காவ்யா, தன் காதலன் இங்கில்லை என்று சொன்னது சரிதான். தான்தான் இங்கிருக்கும் சக்ரவர்த்திதான் தன் தோழியை ஏமாற்றிய கயவன் என்று பழிவாங்கும் படலத்தில் இறங்கி... ஆக,பல பெண்களை ஏமாற்றியவன் தன்னிடமும் பசப்புகிறான் என்று நினைத்ததும் தப்பு...

அவனது வியந்த பார்வை, பாராட்டுக்கள், அன்றிரவு இட்ட முத்தங்கள் அத்தனையும் நாடகம் அல்ல... நிஜமானவை!

சக்ரவர்த்தியின் நினைப்பு ஒவ்வொன்றாய் எழுந்து இவளது தலையைச் சம்மட்டியாய்க் கொத்தித் தள்ளின.

அவனிடம் இனி மன்னிப்புங்கூடக் கோர முடியாது...

தன்னிடம் காதல் இருந்ததால்தான் பொறாமை கலந்த கோபமும் அவனுக்குள் பொங்கியிருக்கிறது.

இவளையும் அரவிந்தனையும் இணைத்துப் பழித்தது அதனால்தானே? இப்போது, உண்மைகள் புரிந்தபின், அப்பழிச் சொல்லும் கூடப் பரவசமான இன்பம் தந்தது... ஆனால் இனி சக்ரவர்த்தியைப் பார்க்கவே வாய்ப்பில்லை என்றான பின்... துன்பம் மட்டும்தானே மிச்சம்?

நம்பத்தான் முடியவில்லை... ரெண்டு வயதுக் குழந்தை ஒன்று வர்ணங்களைப் பிசைந்து அப்பிய ஓவியம் போலக் குழப்பமான சம்பவங்கள். இத்தனை குழப்பத்திலிருந்து எப்படி விடுபடுவது...?

ஆக விலகிவிட வேண்டியதுதான்...

சக்ரவர்த்தியை நம்பாததற்கான தண்டனையாய் இதை ஏற்றுக் கொள்வதுதான் சரி.

தொடரும் நாட்களை மருகியே கழிக்க வேண்டியது...

''எங்க ஜானகிக்கும் ஏறக்குறைய கல்யாணம் நிச்சயம் ஆனாப்பலதான்...''

''ஓ... சந்தோஷம் மாமி... கல்யாணமானதும் உங்க எல்லாருக்கும் எங்க வீட்டில் விருந்து..'' பெரிய மனுஷியாய் அழைப்பு விடுத்தாள் காவ்யா.

''ஷ்யூர்.... அதற்கு முன்னும் நீங்களெல்லாம் வீட்டுக்கு வரணும்... காவ்யாக்கு நீங்கதான் குடும்பம் போலன்னா... எனக்கும் நீங்க ஸ்பெஷல்!'' மாப்பிள்ளை சொல்ல,மாமி பனித்த கண்களைத் துடைத்துக் கொண்டார்.

''சவிக்கும் நல்ல வரனாய் அமைஞ்சிடுத்துன்னா பூரண திருப்தி...''



''முணரை ஃபிளைட்டுக்குக் கிளம்பறியாமே, சவி... நேரமாச்சே... நாங்களே உன்னை ஏர்-போர்ட்டில் இறக்கி விட்டுடறோம்...''

''நோ தாங்க்ஸ்... ஹோட்டல்லேருந்து வேன் அனுப்பறதாய்...''

''நான் ஃபோன் செய்து அனுப்ப வேண்டாம்னு சொல்லிடறேன்... நாம எல்லோருமாய்ப் போய் சவியை வழியனுப்பறதுதான் முறை... சவி... நீயும் ரெண்டு வாய் சாப்பிடு...''

என்ற ஜானகி முன்னறைக்குப் போக, பேருக்கு ஏதோ சாப்பிட்ட சங்கவி பெட்டிகளை இறக்கினாள்.

''ப்ளீஸ்...'' என்றபடி அவற்றைத் தானே காரில் ஏற்றிய சக்ரவர்த்தியை இன்னும் நம்ப முடியாமல் பார்த்திருந்தாள்.

சிபின், சுகன் என்று பெயர்களை வெவ்வேறாக வைத்திருந்தால் என்ன? குடும்பத்தின் பெயரையே ஆளாளுக்குக் கொண்டு குழப்பித் தள்ளி விட்டார்களே... ஆனால் சக்ரவர்த்தி என்றதும் 'சட்'டென இக் குடும் பத்தைச் சேர்ந்தவர் என்பது புலப்படுகிறதுதான்... அதற்காக...

மனதுள் நூறு யோசனைகள் ஓட, மணி சாரை, மாமியை வணங்கினாள்.

''எப்படி நன்றி சொல்றதுன்னே தெரியலை... உங்களுக்கெல்லாம்''

''தேனிலவுக்கு இங்கேயே வாடிம்மா... தவிர அப்பப்ப இதையும் போட்டுக்கோ... போட்டுக்கறச்ச எங்களை நினைச்சுக்கணும்.''

ரவிக்கைத் துண்டோடு வைத்து மாமி நீட்டிய கருநீல சின்ன வெல்வெட் பெட்டியைப் பார்த்ததும் ஏனோ அழ ஆரம்பித்தாள்...

''வேணாம், மாமி... இத்தனை அன்புக்கான அருகதை எனக்கில்லை...''

'எனக்கும் கொடுக்கப் பொன்னில்லையேடீ... வச்சுக்கோ... பெரு வாழ்வு வாழணும்...நீ...''

உணர்ச்சிப் பெருக்கைத் தாள முடியாமல், தந்தவளைக் கட்டிக் கொண்டாள். ஒவ்வொருவராய் விடை பெற்ற போது மனம் இளகி உடம்பைத் துவளச் செய்திருந்தது.

விமான நிலையத்தை நோக்கிய பயணம் பெரும் பாலும் மௌனத்தில்தான். ஜானகி கூடப் பேச முடியாத ஏதோ யோசனையில்...

காவ்யாவின் கணவன் பெட்டிகளை டிராலியில் வைத்துத் தள்ளிச் செல்ல, மௌன ஊர்வலம் போல மற்றவர்கள் பின் தொடர்ந்தனர்.

அந்தக் குறிப்பிட்ட இடத்தில் இவளது கால்கள் தடுமாறி நின்றன... இதோ இதே இடத்தில் நின்றபோது தான் முதன் முதலாய் அவனைப் பார்த்தது... தனக்குள் அவன் சலனம் ஏற்படுத்தியதைப் போலவே அவனுக் குள்ளும் அம்முதல் பார்வை அழுத்தமாய்த்தான் பதிந்திருக் கிறது... இல்லையெனில் நினைப்பில் வைத்திருப்பானா...?

இந்த நேசம் காலம் முழுவதும் மறக்காதோ...?

சுக முள்ளாய் வாழ்க்கை முழுவதும் ஞாபகத்தில் குத்திக் குத்தி நோவு தருமோ?

பெருமூச்சுடன் திரும்பினாள் - அவன் முதன் முதலாய் நின்ற இடத்தை ஏக்கத்துடன் எட்டின சங்கவியின் கண்கள்..

புத்தியின் கலக்கமா?

அல்லது பார்வையில்தான் பழுதா? அதே இடத்தில் நிற்பது... சக்ரவர்த்திதானே?



கண்களை விரித்து, புலன்களைக் கூராக்கி உறுத்தாள். இவளுக்காகவே காத்திருந்தது போல அழுத்தமாய் நின்றான் - பார்வையும் இவளில் நிலைத்திருந்தது... அன்று போல மேலும் கீழுமாய்த் தடவாமல், இவளது ஆன்மாவைத் தொடுவது போல் துளைத்திருந்தது...!

வறண்டிருந்த இவளது நெஞ்சில் பன்னீர் ஊற்றுப் புறப்பட்டது.

பொறுக்க முடியாமல் அவனை நோக்கி ஓடினாள்...

ஆனால் மிக நெருங்கியதும், கால்கள் நிற்க, முகம் சிவந்தது... தொடர்ந்து அவனைப் பார்க்க முடியாமல், அவனது பார்வையைத் தாங்கக் கூடாமல் தழைந்தது முகம்...

''ஆக இந்த வெட்கம் நிஜம்தான் - நடிப்பில்லை... ம்ம்...''

''எல்லாமே உண்மைதான்!'' என்றாள் மெள்ள...

''அப்ப போலாமா?''

''எங்கே?''

''சென்னைக்குத்தான். எனக்குமாய்ச் சேர்த்து டிக்கெட் எடுத்தாச்சு... உனக்கு அடுத்த ஸீட் எனக்கு...''

''எப்படி?''

''ஜானகிக்கு நன்றி சொல்லிட்டுக் கிளம்புவோம்...''

அப்போதுதான் இவளுக்குச் சுற்றுப்புறமும் வழியனுப்ப வந்த மற்றவர்களும் நினைவிற்கு வந்தார்கள் -

ஆனால் அவர்களோ விகல்பமாய், வித்தியாசமாய் எதையுமே பார்க்காதது போல உற்சாகமாகவே விடை தந்தார்கள்.

''வாழ்த்துக்கள் காவ்யா... சுகன் ஸர்...''

''மாமி, ஸார், போனதும் ஃபோன் பண்றேன். வரட்டுமா?''

''ஜானு... இதுக்குத்தான் செல்ஃபோனா?''

''நம்ப ஃபோன் அப்பப்ப தகராறு பண்ணுச்சு... தவிர உன் காதில் விழாத வகையில் ஏதேனும் பேச வேண்டியது வரும்னு நினைச்சேன். நீ நொறுங்கிக் கிடந்தியேடி... வாயைத் திறந்தும் எதையும் சொல்லலை... ஜிக்-ஜாக் பஸில் போல, கிடைத்த துண்டுகளை அங்குமிங்குமாய்ப் பொருத்தி, சொச்சத்தை யூகிச்சேன்... அரவிந்தன் மூலம் உன் பாஸைப் பிடிச்சு, பேச... மேலும் விளங்கினது... உனக்கு ஊர் போய்ச் சேருவதற்குள் எல்லாம் விளங்கிடும்- எனக்கும் தெரிவி... கல்யாணத் தேதியையும்தான்... அதுக்கு ரெண்டு வாரம் கழிச்சுதான் நான் என் கல்யாணத் துக்கான நாளை முடிவு பண்ணணும்... அதுக்குள்ளே தேனிலவை முடிச்சிடுவேல்லை...''

''என்னை மன்னிப்பாரா, ஜானு?''

''நீ மன்னிப்புக் கேட்கற விதத்தைப் பொறுத்தே அது...''

கண் சிமிட்டினாள், கையசைத்தபடி.

மற்றவர்கள் லக்கேஜை செக்-இன் செய்திருக்க, ஏதோ கனவில் மிதப்பது போல இவள் விமானத்துள் ஏறினாள்.

விமானம் எம்பிப் பறக்க ஆரம்பிக்க, இவளது உணர்வுகள் தரை தொட்டன.

''மன்னிச்சிடுங்க, சிபின்...''

''வாவ்... இத்தனை அழகாய் எம் பெயரைச் சொன்ன துக்கே அத்தனையையும் அதாவது என்னை ஒரு பொம்பளைப் பொறுக்கின்னு நினைச்சதை, இன்னொருத் தியை மனசில் வைத்தபடி உன்னை முத்தமிட்டதாய் நினைத்ததை...''



''தப்புன்னு புரியுது... அதான் மன்னிப்புக் கேட்கிறேன், சிபின்...''

''இனிக் குழப்பம் எல்லாம் நேராகிடும்னு நினைக் கறேன்... இனி அண்ணனைச் சுகின்னே தெளிவாய்க் கூப்பிடச் சொல்லிடறேன் - நான் சிபின்... அப்பாவைப் பெரியவர்னு சொல்வாங்க... அல்லது பாஸ் - மற்றப்படி சக்ரவர்த்தின்னா அது என்னைத்தான் குறிக்கும்... அண்ணாவுக்கு அதில் கொஞ்சம் கோபம்... ஆகத் தன்னை யும் சக்ரவர்த்தின்னே எங்கும் அறிமுகப்படுத்திக் கொண்டதால் வந்த குழப்பம்...''

''ஆனாலும் எதையும் சரியாய்ப் புரிஞ்சுக்காமல் ரொம்ப அசட்டுத்தனமாய் நடந்துகிட்டேன்... இனி எல்லாரையும் தலை நிமிர்ந்து பார்க்கவும் முடியாது...''

''அதுவும் உனக்குத் தனி அழகுதான்... குனிஞ்சு முணுமுணுன்னு பேசுவியே... அதிலேயே சொக்கின நான்... இனி உன் வீச்சை எப்படிச் சமாளிக்கப் போறேன்னு தெரியலை...''

''முதல் பார்வையிலேயே...''

''ரெண்டு பேருமே நிலை தடுமாறிட்டோம்னு நினைக்கறேன்...''

''அந்த மூக்குத்தி, பொட்டு, புடவை எல்லாம் இல்லா மலுமா?''

''எது இருந்தாலும் இல்லாட்டியும் யு ஆர் மை ஏஞ்சல்... எனக்கே எனக்கான தேவதை...''

''பெருந்தன்மையான மனசு உங்களுக்கு...''

அவனது நெஞ்சில் கை வைத்துக் கோலமிட்டாள்.



''அதைச் சொன்னது இந்த உதடுகள்தானே...'' சிறு உதட்டுக் குவிப்புடன் பேசியவனைச் சிணுங்கலாய் முறைத்தவள் அவன் எதிர்பாராத நொடியில், கன்னத்தில் முத்தமிட்டாள்...

ஓரக் கண்ணால் இந்தச் சரசத்தைக் கண்டும் காணாதது போல நகர்ந்தாள், விமானத்தின் பணிப் பெண்... அந்த ஜோடியின் சல்லாப சந்தோஷங்கள் வாழ்நாள் முழுவதும் தொடரும் என்று ஏனோ அவளுக்குத் தோன்றியது....

☹